ணாசலம்
சீர்காழி.
SHIYALI.

திருச்சிற்றம்பலம்

அம்பர்மாகாளச் சொர்க்கபுரம்

# அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்

அருளிச்செய்த

# அறிவானந்த சமுத்திரம்.

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனத்து

௮-வது மஹா ஸந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள்**

திருவுளம்பற்றியவண்ணம்,

சீகாழி பிரபல மிராசுதார்

**வித்வத் ஸ்ரீமான் S. சதாசிவமுதலியார் அவர்கள்**

பரிசோதித்துத்தந்த அவர்கள் திருமாளிகைப் பிரதிக்கிணங்க,

சீகாழி வித்துவசிகாமணி

மகா-௱-௱-ஸ்ரீ ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்களால்

சீகாழி

குமரன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

Copy right.] 1935. [பிரதிகள் ௫00.

PRINTED AT THE

KUMARAN PRESS.

SHIYALI.

உ

குருபாதம்.

# அறிவானந்த சமுத்திரம்—முன்னுரை.

கருணை மலியுங் கடலென மன்னித்
தெருணிறை ஞானந் தெரிக்குஞ் செம்மல்
திருவம் பலவர் திருவடி வாழ்த்தி
யறிவா னந்தஞ் செறியும் பழம்பொருள்
விளக்குவன் சான்றோ ருளக்களிப் புறவே.

**த**ருமபுர வாதீனத்து அ-வது மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிக சுவாமிகள், தமிழ் மாந்தர் யாவர் மாட்டுங் கொண்டுள்ள பேரன்பால், தங்கள் சந்தான பரம்பரையில் 7-வது பட்டத்துக் குருமூர்த்திபால் கேட்டுஞ் சிந்தித்தும், 8-வது பட்டத்துக் குருமூர்த்தி ஆகிய தம்பால் தெளிந்தும் நிட்டை கூடியும், ஸ்ரீமத் அழகிய திருச்சிற்றம்பலதேசிகர் அநுபவித்த ஆனந்தசாகரத்தை உணர்த்தும் அறிவானந்த சமுத்திரத்தைப் பிரகடனஞ் செய்யவேண்டு மென்று அடியேனைப் பரம சொர்ப்பனத்தில் பணித்த பணிக்கும், அது பற்றிப் புரிந்துவருகின்ற பலபல கருணை நோக்கத்திற்கும் பெரிதும் துதிகள் செலுத்துகின்றேன்.

சிவம்—வித்தும், ஞானம்—முளையும் போறலின், பரிபக்குவ மடைந்த ஓரான்மா, அந்த ஞானம் ஆகிய அறிவுமாத்திரையின் அமை யாது, சிற்சத்தியின் கருணை மிகுதிப்பாட்டால் அவ்வறிவிற்குக் காரண மாகிய சிவத்தைக் கண்டு அநுபவித்தலே ஆனந்தமாகலின், இந்நூல் அறிவானந்த சமுத்திரம் எனப்படும். இந்நூலுட் கண்ட அபரோட்ச ஞானானுபவத்தை விளக்கும் கர்த்தா அழகியதிருச்சிற்றம்பலமுடையார் ஆனாற்போல, இப்பரோட்ச ஞானநூலை இயற்றும் கர்த்தாவும் அவரே யாகிய அப்பெயர் வாய்ந்தவர்.

இந்நூற் பொருள் சைவ சித்தாந்தத்தின் முத்தி உண்மையும், வேதாந்தத்தெளிவும் ஆகும். சிவஞான நூல்களுக்கற்கும் பேரறிஞர்

பலரும் உணரத்தக்க இனிய சுலப நடையில் அமைந்த இந்நூல் சதா சாரத்தையும், இகபர சுகத்தையும், வேதாகமோக்த மெய்ஞ்ஞான சாரத்தையும், படித்தல், கேட்டல்மாத்திரையின் உதவத்தக்க சிறப்பும், அறிவைப்பெருக்கி ஆனந்த சாகரத்திலிருத்தும் பிரபாவமுமுடையது.

இன்னோரன்ன காரணம் பற்றி, சீகாழி பிரபல மிராசுதார் வித்வத் ஸ்ரீமான் S. சதாசிவமுதலியார் அவர்கள் தங்கள் திருமாளிகையில் இருக்கும் இந்நூலின் ஏட்டுப்பிரதியைத் திருக்கரத்தால் எழுதி அதனை என்னிடம் ஒப்புவித்துப் பொருளுதவி புரிந்து வருகின்ற பெருந்தன்மை என்னல் என்றும் பாராட்டத்தக்கது. இந்தப் பிரதியை என் பிரதியோடு ஒப்புநோக்கிப் பார்த்த அளவில், இவற்றுள் சிதலப் பட்டிருந்த ஆறுசெய்யுளை, சென்னைத் துரைத்தன கையெழுத்து நூல் நிலயப்பிரதியைக்கொண்டு தெளிவித்த ஸ்ரீமான் S. அனவரதவிநாயகம் பிள்ளை, M. A., L. T., (Reader, Oriental Research Institute, Madras University) அவர்களுக்கும், இந்நூல் அச்சாகும் காலத்தில் எனக்குப் பல உதவிகள் புரிந்த நகராமலை வித்துவஜனசேகரர் திரு. நா. இராமலிங்கபிள்ளை அவர்களுக்கும், சீகாழி வித்துவான்கள், திரு. த. சுந்தரேசஆச்சாரியார் அவர்களுக்கும், திரு. மு. சண்முகதேசிகர் அவர்களுக்கும், திரு. க. சுப்பையாபிள்ளை அவர்களுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

திருச்சிற்றம்பல முடையார்
அடிமை,

ஸ்ரீகாழி,
23—2—1935.

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

☞ தாயுமானவர் முதற் பதிப்பு கி. பி. 1835.
அறிவானந்த சமுத்திரம் ,, ,, 1935.

**இஃது ஓர் திவ்யாநுக்கிரகம்.**

எல்லாம் திருவருளே. எல்லாம் நலமே. ஆம்
நல்லார் தமக்கு நலம்.

திருமாகாளச் சோர்க்கபுரம்

சைவமடாலய ஸ்தாபனாசாரியர்

# அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் பிரபாவம்.

இது

சீகாழி லுத்தரன் மிஷன் ஹைஸ்கூல்

தமிழ் வித்துவான் த. சுந்தரேச ஆச்சாரியார்

எழுதியது.

எண்ணியவேன் னெண்ணமேலா மீடேற்ற முன்னிற்குங்
கண்ணுதறன் செம்போற் கழல்.

தாயுமானவர், சொர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பலதேசிகர் ஆகிய இவர்களது சரிதங்களை அறிதற்குத் தக்க கருவி இன்னோர்களுடைய சீடராக விருந்த அகரக்கொந்தை சுப்பநாயனார், இவ்விருவர் நூல்களுக்கும் பொதுப்பட வரைந்துள்ள பாயிரமாம். இப் பாயிரம் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் கி. பி. 1835-ல் பதிப்பித்த தாயுமானவர் முதற்பதிப்பிலும், மன்மத வருஷத்துப் பதிப்பிலும், "கலைமகள்" ஆங்கிரஸவருஷ வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதத் தொகுதிகளிலும் தெளிவாக வெளி வந்துள்ளது. இப் பெரியார் இருவருள் சொர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் வரலாற்றை மேற்குறித்த பாயிரத்தையும், அன்னார் பாடிய நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு எழுதுகின்றேன்.

சோழ நாட்டில் காவிரியின் தென்கரையில் திருவம்பர் மாகாளம் என்னும் சிவஸ்தலம் ஒன்றுள்ளது. இது மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற மூன்று விசேடங்களாலும், நித்திய நைமித்திக விழாவாலும் மேன்மை பெற்றுத் திருஞானசம்பந்தப்பெருமானார் பாடலும், ஸ்தலபுராணமும் கொண்டு விளங்குவதாம். சோமாசிமாறநாயனார் யாகஞ்செய்தும், மாகாளர் முதலியோர் பூசித்தும் பேறுபெற்ற தலமும் இதுவாகும். இது மேலைத் திருமாகாளம், கீழைத் திருமாகாளம் என்னும் இரு பிரிவினை யுடையது. கீழைத் திருமாகாளத்தில் சொர்க்கபுரம் என்னும் சிவாலயமும், சைவ மடாலயமும், அம் மடாலயத்திற்குத் தென்பால் திருக்குளமும், அரிசிலாறும் பொருந்தியுள்ளன. இந்நதியின் வடகரையை மாகாளம் இலந்துறை என்று இன்றும் வழங்குவர். இந்த இலந்துறை

யில் சோணாட்டு வேளாளர் குலத்தில் கி. பி. 17-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் திருச்சிற்றம்பல தேசிகர் அவதரித்தனர். இவர் இளமைக் காலத்திலேயே இலக்கண இலக்கிய விற்பன்னராய், ஞான நூல்களைக் கற்றுத் தெளியப் பேரவாக்கொண்டு, தருமபுரவாதீனத்து எ-வது பட்டத்திருந்த திருவம்பல தேசிகரைத் தம் குருவெனக் கொண்டு அவர்பால் ஞானநூல்களை ஓதி அநுபூதிமானாக விளங்கினார். இவருடன் பயின்றவர் கோட்டூர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகரும், தாயுமானவருமாவார்.

இங்ஙனம், தருமபுரவாதீனத்தில் பல சீடர்களோடு அமரும் காலத்தில் திருவம்பலதேசிகர் தமக்குப்பின் ஞானாசாரியராக வருபவர் கோட்டூர் அழகிய திருச்சிற்றம்பலதேசிகரே எனத்தேர்ந்து, அவருக்கு ஞானாசாரிய அபிஷேகம் செய்தார். அத்தருவாயில், இவர் கோமுகியின் கீழமர்ந்து அவ்வபிஷேக நீரால் தாமும் முழுகப்பெற்றுப் பரிசிலராய் அன்றுமுதல் கோட்டூர் அழகிய திருச்சிற்றம்பலதேசிகரை ஞானாசாரியராகக்கொண்டு அவர்மீது கிளிவிடுதூது பாடியருளினார். இதனையறிந்த கோட்டூர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் இவரை நோக்கி "நீர் தரும முற்றி யானபடியால் இன்றே (தருமமுற்றி) சொர்க்கபுரம் சென்று ஓர் சைவமடத்தைத் தாபித்து ஆங்குவரும் சீடர்களுக்கு உபதேசஞ் செய்யும் பேறுபெற்றுவருவீர்" என்று சொல்ல, இவரும் அப்பணியைச் சிரமேற்றாங்கி அன்றே சொர்க்கபுரஞ் சென்று நிட்டைகூடி விளங்கினார்.

இவர் மகிமையை உணர்ந்த தஞ்சாவூர் மகாராஷ்டிர அரசர் பாபு சாகிபு ஏகோஜி II அனேக பூஸ்திதிகளையும் கொடுத்துள்ளார். மற்றும், தஞ்சாவூர் மகாராணி ஸுஜாணபாய் கி. பி. 1737-ல் அடிகள் நிஷ்டையிலிருக்குங் கோலத்தைக்கண்டு தரிசித்து அருள்பெற்றதாகக் கனாக்கண்டு பரவசமுற்றவராய்த் தம்முடைய பரிவாரங்களோடு மாகாள மிலந்துறைக்குவந்து, அடிகளை நேரில் தரிசித்து, அவரருள் பெற்றுச் சொர்க்கபுரம் மடத்திற்குச் சில மானியங்களையு மளித்தார். இவ்வாறு அடிகள் பெருமையை யுணர்ந்து மடத்திற்கென மானியம் அளித்தவர் பலராவார். சொர்க்கபுரம் அழகிய திருச்சிற்றம்பலதேசிகர் பேரானும், மடத்தின் பேரானும் துரைத்தனத்தார் விட்ட மானிய நிலங்களும், தோட்டந் துரவுகளும், திருமடம், வீடு வாசல்களும், மோகினியும்,பட்டாநிலங்களும் இன்றும் மடாலய விசாரணை கர்த்தர்கள் வசம் இருந்து வருகின்றன.

இவரைக் குருவாகக்கொண்டு அருள்வழிப்பட்டு மெய்ஞ்ஞானம் பெற்ற மாணவிகள் நாகபட்டினத்துச் செட்டிப் பெண்களாகிய வடிவியாரும், அழகியாரும், இத்தேசிகரின் இளவலாகிய வைத்தியலிங்கத்

தம்பிரானும், (1) பாயிரம் பாடிய சுப்பநாயனுருமாவர். இவர் அறிவானந்த சமுத்திரம், கிளிவிடு தூது, வினுவுரை, திரிபதார்த்த தீபம், சித்தாந்தநிச்சயம், அனுட்டான விதி, உசாத்தானத் தோத்திரம், அருட்பாமாலைஎன்னும் நூல்களை அருளிச்செய்து, விபவவருஷம் (1748-A. D.) கார்த்திகை மாதம் புனர்வசு நட்சத்திரத்தில் பரிபூரணமானுர். இவர் பரிபூரணமான மறுநாளே இருவரென்று சிறப்பாக மதிக்கப்படும் வடிவியாரும் அழகியாரும் குருபக்தி மேலீட்டினுலே சாக்ஷாத்காரமாயினுர்.

இவ்வடிகட்குப் பின் அந்தத் தானத்தில் சீடர் முறைப்படி தலைமை வகித்தவர், (2) வைத்தியலிங்க தேசிகரும் (3) தவப்பிரகாசரும், (4) சரவணதேசிகரும் (தவப்பிரகாசர் துதி, பஞ்சாக்கர அனுபூதி), (5) பஞ்சாக்கர தேசிகரும், (6) சிவப்பிரகாசதேசிகரும், (7) சிவானந்த தேசிகரும், (8) உலகமறிய வித்தகச் சித்தராக விளங்கிய சங்கிலிச் சாமியாரும், (9) செட்டித் திருமேனி தேசிகரும், (10) ஞானதேசிகரும், (11) முத்துக்குமார தேசிகரும், (12) சதாசிவதேசிகரும் ஆவார். இப்போது 13-வது தலைமுறையில் அமர்வோர் மருதவாணச் சிவப்பிரகாச தேசிகர். இவர்களுள் செட்டித் திருமேனி தேசிகர் காலத்தில் மடத்திலுள்ள எல்லாப்பொருள்களையும் திருடர் கவர்ந்துசென்றனர். சிவனடியார் பொருளைக் கவர்தல் செந்தீயினும் வெந்தீயாகலின் அஃது அவர்களைக் குருடராமாறு சுட்டு வருத்தியது. சங்கமப் (சங்கமம்—சிவனடியார்க் கூட்டம்) பொருளைக் கவர்ந்ததால் ஏற்பட்ட பங்கமென இதன் உண்மையை உணர்ந்து அக்கள்வர்கள் மிகவும் பயந்து, கவர்ந்த பொருள்களனைத்தையுங் கொண்டுவந்து சேர்த்து அடிகள் அருளால் குருடு நீங்கினுர்கள். இவ்வற்புதத்தைக் கண்ட கனவான்கள் அம் மடத்திற்குச் சில நிலங்கள் மானியமாகக் கடலைப்பிரம்பூரில் விட்டனர். இதனுனும் இவ்வழகிய திருச்சிற்றம்பல தேசிகர் மகிமை நன்கு புலனுகின்றது.

இப் பெரியார் இயற்றியருளிய நூல்களுள் முதன்மையான அறிவானந்த சமுத்திரத்தைக் கற்றல் கேட்டல் மாத்திரையின் எண்ணிய எண்ணியாங் கெய்தித் திருவும் உருவும் நலனும் அருளும் பொருந்திச் சற்குருவைத் தரிசித்துச் சிவகடாக்ஷங் கைவந்து அருட்சத்தியால் பெறுதற்கரிய சிவப்பேற்றை அடைந்து, பிறவிப் பயன் பெற்று இப்பேருலகம் உய்யுமாக.

இனி இந்நூற் பதிப்பாசிரியர் இயற்றிய திருவம்பல தேசிகர் துதியையும், சொக்கபுர குருமரபட்டவணையையுங் கூறி, இவற்றின்பின் தாயுமானவருடைய சரித்திரத்தையும் விளக்கமாகக் கூறுவேன்.

உ

குருபாதம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து

௭–வது மஹா ஸந்நிதானம்

**ஸ்ரீமத் திருவம்பல தேசிக பரமாசாரியவர்ய சுவாமிகள்**

**அறிவானந்த சமுத்திரம் அச்சிடுவிக்க,**

**அருள்புரிய வேண்டுமென்று**

# மனதில் தியானிப்பது.

ஞான யோகிகள் பணிப்பவை சங்கமு நளின
மான மாநிதி தானும்வந் துஞற்றிட வமரர்
தான மால்விடைச் சொக்கர்வீற் றிருப்பது சார்ந்த
தீன னேனையும் புரப்பது தருமையா தீனம். (௧)

ஞான மாபுரம் விளங்கிடு நாதரு ளெட்டாந்
தான மேவிய அழகிய மாதவர் தம்பால்
ஞான நற்கலை யுணர்ந்தசிற் றம்பல நம்பர்
மோன மெய்யறி வானந்த சமுத்திர மொழிந்தார். (௨)

ஆறு சாத்திர வந்தத்தி னூர்ந்தவவ் வறிவும்
மாறு வேறிலா வாகம வேதத்து மாண்புங்
கூறு பாடிலாக் குருமர புரைத்திடு குணமும்
சாறு சேர்தரத் திரட்டிய பனுவலாய்ச் சமைந்து. (௩)

உண்மை வாதங்க ளியாவினு மோங்கிட வுயர்ந்த
திண்மை வாதமாஞ் சைவசித் தாந்தத்தின் றீர்வைத்
தண்மை யாகவே சாற்றிடு முறுதியின் சார்பா
லெண்மை யில்லதோ ரச்சினி லேற்றிட வெண்ணி. (௪)

பணித்த மெய்க்குரு பரரவர் திருப்பெயர் பகிற்
கணித்த சைவசித் தாந்தநற் சித்தியைக் காத்தல்
திணித்த காவலர் கடமையென் றோர்தரு திறத்தர்
அணித்த சீர்த்தரு மைப்பதி மேவிடும் ஆன்றோர். (௫)

தஞ்ச மென்பவர் தங்களைப் புரப்பவர் சாந்தம்
விஞ்சு தேசினர் மாசிலா மணியினர் விமலர்
நெஞ்சு வந்திட முப்பொரு ளியல்பிணை நிகழ்த்திச்
செஞ்சொ லாள்திரு வம்பல நாமதே சிகரே. (௬)

# தாயுமானவர் வரலாறு.

தாயுமானவர் சரித்திரத்தை அறிதற்குப் பலகருவிகள் உள்ளன. அவற்றுள் 1. அவரியற்றிய பாடல். இப்பாடல்கள் கி. பி. 1835, 1844, 1851, 1895, 1897, 1902-ம் ஆண்டுகளிலும் அவற்றின் பின் பல ஆண்டுகளிலும் வெளியிடப்பட்டவை. அவற்றுள் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரால் பிரசுரிக்கப்பட்டதே முதற் பதிப் பாகும். இது தஞ்சைக்கு வடகீழ்பால் திட்டைக்கு ஒரு மைல் கீழ்பாலுள்ள அன்னப்பன்பேட்டையிலுள்ள மடத்தில் 1835-ம் வருஷத்தில் ஐந்தாவது பட்டத்திருந்த அம்பலவாண சுவாமிகளுடைய அடியராகிய எடுத்துக்கட்டி அருணசல நாயனரிடத்திருந்த ஆதீனச் சுவடியைக் கொண்டு பதிப்பிக்கப்பட்டது. 2. மேற்கண்ட பிரசுரங்கள் சிலவற்றில் அச்சிட்டுள்ள பாயிரச் செய்யுட்களாகும். இவை தாயுமானவர் காலத்தே அவரது அடியார் மரபின் அகரக்கொந்தை சுப்பநாயனரால் இயற்றப்பட்டவை. 3. தாயுமானவர் மாணக்கர் அருளையர் எழுதிய அகவலும், தாயுமானவர் பாடிய வண்ணத்தின் இடையிடையில் கொச்சகப் பாவில் அவ்வருளையர் பாடிய திண்ணமும் ஆகும். 4. திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் எடுத்துக்கட்டி அருணசல நாயனரிடம் நேரில்கேட்டு 1835-ல் பிரசுரித்த தாயுமானவர் சரித்திரம். 5. வித்துவசிகாமணி, ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள் கலைமகள், ஆங்கீரஸஹு வைகாசி, ஆனி, ஆடி, ஆவணிமாதத் தொகுதிகளில் வெளியிட்டவை. இது நிற்க:

சோழ நாட்டில் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் குலத்தில் கேடிலியப்பப்பிள்ளை என்பவர் வேதாரணிய ஸ்தல விசாரணைக் கர்த்தராயிருந்தார். இவரைத் திரிசிரபுரத்து விஜயரங்க சொக்கநாதர் சம்பிரதி உத்தியோகத்தில் நியமித்தார். இங்ஙனம் இவர் நாயக்கர்பால் அலுவலில் அமர்ந்திருக்கும்போது சிவசிதம்பரமென்னும் தம்முடைய ஏக புத்திரனைத் தமது தமையனருக்குச் சுவீகாரமாகத் தந்துவிட்டதால், தாம் வேறொரு மகப்பேறு கருதித் தாயுமானவர்பால் நேயமிக்குத் திரிகாலமும் அவரைத் தரிசித்து வந்தார்.

சின்னாட் கழித்து அப்பெருமானருளால் அவர் மனைவியார் கி. பி. 1705-ல் அருமகவீன்றார். அம் மகவுக்குக் கேடிலியப்பப்பிள்ளை தாயுமானவரென்ற திருப்பெயரைச் சூட்டினர். இவருக்குச் சதாசிவனென்றும் பெயர் உண்டு. இத் தாயுமானவர் அழகிய திருச்சிற்றம்பலதேசிகரோடு கீர்வாண முதலிய மொழிபல பயின்று விளங்கினர். இவர் மனம் தத்துவப் பொருளையே நாடி நின்றது.

இப்படி இருக்கையில், திருமூல நாயனருடைய மரபில் வந்த மௌனதேசிகர் இவரது பரிபக்குவ முணர்ந்து தத்துவப் பொருளை

உபதேசத் தருளினார். இவர் தந்தையார் தேகவியோக மடையவே தாயுமானவர் தம் தந்தை அரசன்பால் கொண்ட உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளலானார்.

இதன்பின், இவ்வரசர் இறந்துபட்டார். அவர் மனைவி காலத்தில் அரசு க்ஷீணதசை அடைந்தது. தாயுமானவர் அரசியலை வெறுத்து இராமநாதபுரச் சீமைக்கு எழுந்தருளிச் சிவத்தியானம் செய்துவந்தார்.

இச்செய்தி சிவசிதம்பரம்பிள்ளை செவியை அடைந்தது. அவரும் தம் சிறிய தாயார் குமாரராகிய அருளையரும் தாயுமானவருக்குத் திருமணம் முடிக்கத் தீர்மானித்தார்கள். சுவாமிகளும் தமையனார் வேண்டுகோட்கிணங்கி உடன்படலாயினார். உடன்படவே, திருமணம் நடந்தேறியது. தாயுமானவருடைய பத்தினியாரும் சின்னாட்குப்பின் ஒரு ஆண் மகவைப் பெற்றுச் சிவபதம் உற்றார். அம் மகவுக்குக் கனகசபாபதி என்று பெயர் இடப்பட்டது. அன்று முதலாகச் சுவாமிகள் அகத்துறவோடு புறத்துறவும் பூண்டு சிவஸ்தலங்கள் தோறும் சென்று திருப்பாடல் பல இயற்றியருளினார். அருளையர் இவரிடத்தில் உபதேசம் பெற்று இவரைவிட்டுப் பிரியாமல் பணிவிடை புரிந்து வந்தார்.

இதன் பின்னர் கி. பி. 1742—துன்மதி௵ தை௴ விசாகநக்ஷத்திரம் கிருஷ்ணபக்ஷ தசமியில் இலக்குமிபுரத்தில் தாயுமானவர் அகண்ட சச்சிதானந்த சொரூப சிவத்தோடு இரண்டறக் கலந்தார். அருளையர் கனகசபாபதிப்பிள்ளைக்கு ஞானாபிஷேகம் செய்தருளினார்.

அன்னப்பன்பேட்டை மடத்துப் பெரியோர்கள் :—1. தாயுமானவர், 2. அருளையர், 3. கனகசபாபதியார், 4. அக்ஷயலிங்கர், 5. அம்பலவாணர், 6. சோமசுந்தரர், 7. வைத்தியலிங்கர், 8. நமச்சிவாயர், 9. சபாபதியார் ஆவார். இம் மடத்து ஸ்தாபனாசாரியர் இங்கு எடுத்துக் கொண்ட தாயுமானவர். திரிசிரபுரத்து மௌனசுவாமி மடத்துத் தாயுமானவரும், கங்கைக்கரையில் பரிபூரணமடைந்த தாயுமானவரும் வெவ்வேறு மகான்கள் ஆவார்.

தாயுமானவர் வம்சாவளி (பெரியார் கூறியபடி).

சிவசிதம்பரர் (மறைசை) அக்ஷயலிங்கர் (சிக்கல்)

அருணாசலர் கேடிலியப்பர் = கனகவல்லி அம்புஜவல்லி = காயாரோகணர் (நாகை)

அருளையர்

சிவசிதம்பரர் தாயுமானவர் = மட்டுவார்குழலி (திரிசிரபுரம்)

கனகசபாபதி (திரிசிரபுரம்)

## தாயுமானவர் கால அட்டவணை.

கி. பி. 1704ல்விஜயரங்க சொக்கநாதர் மகுடாபிஷேகம். 1705–7ல் தாயுமானவர் சுபஜனனம். 1723ல் கேடிலியப்பர் சிவப்பேறு. 1731ல் விஜயரங்க சொக்கநாதர் பரமபதம், மீனாக்ஷி அரசாளத் தொடங்கியது. 1736ல் தாயுமானவர் துறவு, மீனாக்ஷி பரமபதம். 1742ல் தாயுமானவர் பரிபூரணம்.

கேடிலியப்பப் பிள்ளை சற்றேறக்குறைய 170 வருஷங்களுக்கு முன்பாகவே இருந்தார் என்று அவரது பிரபௌத்திரராகிய அம்பலவாண சுவாமி 1885-ல் எழுதுவித்திருக்கிறார்.

### நாயக்கமன்னர் திருமுடியடைவு (சரித்திரப்படி).

- நாகமன், 1559 கி. பி.
  - விசுவநாதர் I, 1559–63
    - குமாரகிருஷ்ணப்பர், 1563–73
      - கிருஷ்ணப்பபெரியவீரப்பர், 1573–95
        - இலிங்கையகுமாரகிருஷ்ணப்பர் 1595–1602
          - முத்துக்கிருஷ்ணப்பர், 1602–09
            - முத்துவீரப்பர், 1609–23
            - திருமலை, 1623–59
              - முத்துஅளகாத்திரி, 1659–62
                - சொக்கநாதர், 1662–82 = மங்கம்மாள், 1689–1704
                  - அரங்ககிருஷ்ண முத்துவீரப்பர், 1682–89 = பத்மாசனி
                    - விஜயரங்கசொக்கநாதர், 1704–31 = மீனாக்ஷிஅம்மாள் 1731–36
                      - குமாரமுத்துத் திருமலை (ஸ்வீகார புத்திரர்).
                    - பங்காரு திருமலை
                      - குமாரமுத்துத் திருமலை
            - குமாரமுத்துவீரப்பர்
        - விசுவப்ப விசுவநாதர் 1595–1602
      - விசுவநாதர் II, 1573–95

# சிறப்புப்பாயிரம்.

இஃது அகரக்கொந்தை சுப்பநாயனுர் என்பவர் தாயுமானவரது பாடலுக்கும் அறிவானந்த சமுத்திரத்திற்கும் பொதுவாக இயற்றியது.

வெள்ள மருவும் விரிசடையான் வேத வனத்தான் விமலேசன்
உள்ள மருவத் திருமூல ருறவின் மருவு மொருமௌன
வள்ள லருளுங் கருணைவெள்ள வாரி மடுத்தே மறைசைநகர்ப்
பிள்ளை யவர்க ளருண்முகிலாய்ப் பெய்த கருணைத் தமிழ்மழையே. 1

ஸ்துதிகள் (2—12). தாயுமானவர் பெருமை; அவர் பாடலின் அடைவு (13—57).

அழகிய திருச்சிற்றம்பலதேசிகர் :

இலந்துறை நகரி லெழுந்தசற் குருவே யிணையிலா ஞானதேசிகனும், குலந்தனைக் கூறி லவனிடத் தமருங் குழாங்களே திருவருட் குலமாம், மலந்தலை சாய்க்கும் போதனு சத்தி வாழ்மனை யவனருள் வாயால், நிலந்தனி லவனுக் கொப்புயர் வாக நிகழ்த்துமோ வறிஞர்நெஞ் சகமே. 58

(இலந்துறை—பைதிரகம். மருகல்—மாதிரகம்).

காசியே முதலாய்க் கன்னியா குமரி கடலள வாகவே கலந்த, தேசிகர் நிறைவிற் சைவசித் தாந்தத் திறத்திலிப் போதிருப் பாரில், ஆசிலாச் சுவர்க்க புரத்தருட் குருவே யதிகமா மவன்றனக் கிணையாய், மாசிலா மறைசைத் தாயுமா னவனை மதிக்கலாம் வழுத்தமற் றிலையே. 59

கருத்திரு வருக்கு மொன்றதா மவர்கள் கழறிய வாக்கியங் காணில், பொருத்துறுங் தமிழு மநுபவப் பயனும் பூரண விலாசமாய்ப் பொலியும், ஒருத்தருக் கொருத்த ருயர்வுதாழ் விலையா லுண்மையா மநுபவ வொழுங்கால், திருத்துமா காளச் செம்மலு மறைசைச் செம்மலுஞ் சரிதெரிந் தோர்க்கே. 60

வரந்தரு மறைசைத் தாயுமா னவனு மாகாளத் தெழுந்தமா குருவும், புரந்திடுங் கருணைப் பொருளதா யெழுந்தோர் போதனு சத்தியைப் புணர்ந்தோர், சுரந்திடுங் கருணைத் தமிழ்மழை சொரிந்தோர் சூனிய வெளியிடைத் தோய்ந்தோர், நிரந்தர ஞான சைவசித் தாந்த நெறியின ருபயதா ணினைவாம். 61

தமியருக் குரித்தாய் வருமிரு திறருந் தாய்பிதா குருதெய்வந் தாமும், உமிழுளை தவிடா யுயர்மலஞ்சார வுத்தம ரோரிரு வருமே,

அமிர்தென ஞான வநுபவத் திரளை யருளிய வருந்தமி ழதனை,
நிமிஷமா யினுஞ்சிந் தனைசெய்தன் னோரை நினைவனோ வினையநெஞ்
சுகந்தே. 62

அழகிய திருச்சிற் றம்பல குருவு மவனருள் பெறுமிரு வோரும்,
மழைமுகி லென்ன வருட்கவி மாரி வழங்கிய தாயுமா னவனும்,
குழைவுதந் தெமையாள் குரவரா மவர்கள் கூறிய தமிழருட் குழா
மாம், விழைவுறு ஞானசந் தானருங் குருவாம் வேறொரு வரை
விரும் பேனே. 63

வேறு.

ஊழிதோ றூழியெனக் குறுதுணையாய் நிரந்தரமா யொளிரு
மீசன், வாழிமா மருகலுறை மாணிக்க மலையனைய வரத னென்னச்,
சோழியவே ளாளர்குலத் துற்பவிக்கத் தொகுத்தழைத்தே தொழும்ப
னாக்கி, ஏழுலகுக் கொருமுதலாய்ச் சுவர்க்கபுரத் திருந்தானை
யிறைஞ்சி வாழ்வாம். 64

எனைத்தடுத்தாட் கொண்டசிவன் மருகலா னெம்பெருமா
னேழை பாகன், தனைத்தகுந்தா ரில்லாதா னெனக்குமொரு தெய்
வந்தா னேதா னாகி, அனைத்தினுக்கு மனுகூலன் சுவர்க்கபுரத் தரசனா
யமர்ந்தே நாயேன், நினைத்தபடி கூட்டிமுடித் துபதேசித் தருணிறைவி
னிறுத்தி னானே. 65

ஆதலினா லெனைத்தடுத்தாட் கொண்டசிவன் மருகலா னவனே
பின்னும், போதகனாய்ச் சுவர்க்கபுரத் தெழுந்தருளி யிருந்தறிவைப்
போதித் தேபின், வேதமுத லாகமத்தின் பயனறிவித் தருஞான
விளைவால் பாவத், தீதகலச் செய்தபிரான் செய்தநன்றி மறவாமற்
சிந்திப் பேனே. 66

மழவிடையா னானந்த வாரியிலே படிந்தருளை வாரி வாரிப்,
பழமறையா கமப்பயிர்கள் படர்ந்தோங்க வருணீரைப் பாய்ச்சிப்
பாய்ச்சித், தழலனைய பிறப்பிறப்பிற் றுழுமுயிர்ப் பயிர்க்கருளைத்
தந்தாட் கொள்ளும், அழகியசிற் றம்பலவ னடியிணையை யநுதினமு
மகத்துள் வைப்பாம். 67

வேறு.

தக்கபரி பூரணமா யெழுந்தபரா பரத்தைச் சகளநிஷ் களசகள
வகளமெனுந் தனியை, விக்கிரக வடிவுகளாய் விளங்கியமெய் வடிவை
வேதாந்தஞ் சித்தாந்தம் விளங்கியமெய்ப் பொருளை, நிக்கிரக மநுக்
கிரக நிகழ்த்தியநின் மலத்தை நிராமயமா யொளிவெளியாய் நின்றிடு
நிச் சயத்தைத், துக்கசுகந் தோயாத சுயஞ்சோதிச் சுடரைச் சுவர்க்க
புரத் தெழுஞான சூரியனைத் தொழுவாம். 68

சித்தாந்தச் சிவசைவச் சமயகுரு மரபைத் தேசொளிருஞ் சந்தானத் தேசிகர்சே வடியைக், கத்தாமெய்த் தவவேடங் கதிக்கவருங் குழாத்தைக் காரணகா ரியங்காணுக் கருணையின்மெய் வடிவைச், சத்தாருஞ் சிவபக்த சரணர்திரு மரபைத் தாணுவினல் வருமுதவி தனை மறவா தவரைச், சுத்தாங்க மாகவருஞ் சுவர்க்கபுரத் தானைத் தொண்டர்குழாத் திரளினெடுந் தொழுதுமகிழ் வோமே. 69

மாகாள மிலந்துறையைச் சுவர்க்கபுர மாக வகுத்ததனிற் சிவஞான வரோதயனுய் மருவித், தேகாதி பிரபஞ்சத் திமிரமெலா மகற்றுந் தினகரன்போன் மலமகற்றுந் திருவருட்செங் கதிரா, யோகாநுபூதிக்குந் தாரகமா யொளிரு முயர்ஞான வநுபோக வுயர்வையருள் வாக்கால், ஆகாய மனைத்தினையு மடக்கிநிற்கு மாபோ லருளியவாக் கியமறிவா னந்தசமுத் திரமே. 70

பொன்னவிருஞ் சுடர்மகுடப் புரவலன்மா தவத்தோன் போதகனுய்ச் சுவர்க்கபுரப் புவியினெழும் புநிதன், அன்னவன்வாக் கதனாலே யருண்மழையாய்ப் பொழிந்த வறிவானந் தக்கடலை யதிகார மூன்ருய்ச், சொன்னசக சானந்த வுல்லாச வாழ்வுஞ் சூழ்ந்தமல பரிபாக வாழ்வினெடுந் தொகுத்த, உன்னரிய வுபதேசக் கிரமமூவகைக்கு முயர்கவிதை பதினெருநூ றுடனைம்பத் தேழே. 71

வள்ளலெனத் தமிழ்மாரி வழங்குமருள் வாயான் மாகாள மிலந்துறையில் வருபரம குரவன், தெள்ளுதமிழ்க் கிளிவிடுதூ தாதியாய்ப் பலநூல் செய்துபல நாமநிலை செய்துதொகை செய்தே, விள்ளரிய மெய்க்குருவைச் சீடனு னவனும் வினவிமகிழ் தலுங்கூறி யறிந்தமுங்கல் விளம்பி, அள்ளிமகிழ்ந் துணவறிவா னந்தசமுத் திரமு மரியதிரிபதார்த்ததீ பமுமருளி னனே. 72

ஆகமத்தி னெழுந்தசிவா னந்தமயப் பொருளை யழகியசிற் றம்பலவ னுகியவற் புதத்தைச், சோகம்பா விக்கினெழுஞ் சூனியமாஞ் சுயம்பைச் சுத்தவெளி வெறுவெளியாய்ச் சூழ்ந்தபர வெளியைப், போகமதி லழுந்தாத பூரணவா ரிதியைப் புநிதர்திரு மாகாளப் பூவினெழும் பொலிவை, ஏகநா யககுருவா யெழுந்தருளு மிறையை யேழுலகும் புகழமகிழ்ந் திறைஞ்சிநிற்போ மியாமே. 73

நலந்தழையு மிலந்துறையா னழகியவம் பலவன் ஞானமுபதேசிக்க ஞானநிட்டா பரராய்த், திலமளவுங் களங்கமிலாச் சிவஞானகுருவாய்த் திகழேக நாயகசின் மயர்கனிட்ட ராகி, நிலம்புகழ மகிழ்ந்தெழுந்த நிறைஞான பரராய் நேசிக்குஞ் சரியைகிரி யாயோக ஞானப், பலந்தழையச் சுவர்க்கபுரத் தெழுந்தருளி யிருந்த பரையோகி வயித்தியலிங்கப் பரகுருவைப் பணிவாம். 74

எறிதிரைநீர்க் கடல்சூழ்ந்த வேழுலகும் வாழ்க ஏகபரி பூரணமா யிருக்குமறை வாழ்க, குறிகுணமற் றொளிர்ஞானக் குழாமனைத்தும் வாழ்க குருலிங்க சங்கமமாங் கூட்டமெலாம் வாழ்க, அறிவானந் தக் கடலு மருளுமிக வாழ்க வதினூற்றுப் பதினெந்தா மருட்டுறையும் வாழ்க, நெறிபடருஞ் சிவநேசர் நீடூழி வாழ்க நேரியனுஞ் சுவர்க்கபுர நிமலனும்வாழ்ந் திடவே. 75

ஆதிநடு வந்தமுரு வகண்டிதமும் வாழ்க வாரணமு மாகமமு மருணிறைவும் வாழ்க, மாதினொடுங் கலந்தகலா வானவனும் வாழ்க மாலயனிந் திரனிமையோர் மகாமுனிவர் வாழ்க, போதகராஞ் சந் தானப் புரவலரும் வாழ்க புண்ணியராஞ் சமயகுருப் புனிதரெலாம் வாழ்க, தீதகன்ற சித்தர்முதற் றிருமௌனி வாழ்க திருமறைக்காட் டெந்தைமுதற் செந்தமிழ்வாழ்ந் திடவே. 76

தேனிதழித் தார்புனைந்தோன் சிவாலயங்கள் வாழ்க திருநீறுங் கண்டிகையுந் திருவருளும் வாழ்க, ஆனினமு மந்தணரு மஞ்செழுத் தும் வாழ்க வாகமசித் தாந்தசைவத் தருந்தவரும் வாழ்க, நானிலமு மன்னவரும் நற்குடியும் வாழ்க நாமகளு நற்கமலை ஞாலமதில் வாழ்க, வானின்முகின் மும்மாரி வழங்கிவையம் வாழ்க மனுநீதி தருமநெறி மாதவம்வாழ்ந் திடவே. 77

அந்திநிறத் தாரமுது மம்பிகையும் வாழ்க வைங்கரனு மறுமுகனு மருந்தவரும் வாழ்க, நந்திமுதற் கணத்தோரும் நால்வருமே வாழ்க ஞானகுரு முதற்கல்லா னன்னீழல் வாழ்க, பந்த மற்றோர் பசுத் தொகையும் பதித்துவமாய் வாழ்க பாசமற்று நேசமுற்ற பத்தரெல் லாம் வாழ்க செந்தமிழா லருநூலைச் செய்தோரும் வாழ்க தென்மறை சைப் பிள்ளைமுதற் றெளிதமிழ்வாழ்ந் திடவே. 78

நவவிதமா யைந்தொழிலு நடத்துவிப்பாய் போற்றி ஞானபரி பூரணமாய் நண்ணிநிற்பாய் போற்றி, சிவமயமாந் தேசிகராய்ச் செறிந் தொளிர்வாய் போற்றி சிவலிங்க மாயெழுந்த செழுஞ் சுயம்பே போற்றி, தவமயமாந் திருவேடத் தனுவெடுப்பாய் போற்றி சராசரமா முயிரை யெல்லாந் தாங்கிநிற்பாய் போற்றி, பவமகன்ற பசுக்கருளைப் பதிவிப் பாய் போற்றி பாதகரைப் பரிந்தாளும் பரசிவமே போற்றி. 79

மதமனைத்துங் கரந்ததுவாய் வாழ்பவனே போற்றி மதாதீத மாகியெங்கும் வதிந்தவனே போற்றி, முதல்வனுமாய் மூவகைக்கு முன்னவனே போற்றி மூவிதமா முயிர்க்கறிவாய் முளைத்தவனே போற்றி, பதவிமுத னிசமுத்திப் பாருடையாய் போற்றி பாரித்த முச் சகமே பணியநிற்பாய் போற்றி, சிதம்பரமா ரூர்காசி க்ஷேத்திரனே போற்றி தேசுறுமா ருயிர்க்குயிராஞ் சிற்சிவமே போற்றி. 80

பாயிரம் முற்றும்.

உ

சிவமயம்.

சீகாழி, வித்வத் ஸ்ரீமான்,

# ச. சதாசிவமுதலியார் அவர்கள்

இந்நூல் வெளிவருவதற்குச் செய்த

## பேருதவியின்

## சிறப்பு.

இன்னநூற் பிரதியும் இதற்காம் பொருளும்
நன்ன ரளித்தவர் நயமெடுத் துரைப்பது.

ஞானகலை வாணிமுதற் கவிவலவர் யாரும்
நவிலுமறி வானந்த சமுத்திரமாம் பனுவல்
கானரச முறுஞ்சைவத் துதியாத லாய்ந்து
காசினியோர் கண்களிப்பக் கவினவச்சிட் டதுகாண்
ஞானசம்பந் தப்பெருமா னவதரித்த காழி
நல்லசதா சிவமுதலி யார்நயந்து புவிக்கண்
ஆனபுல வோர்தம்மை யாதரித்துக் கருத்தி
னன்பினொடு முதவிவரும் பேருதவி மாண்பே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அறிவானந்த சமுத்திரம்.

பிறிவார் நந்த றரும்பிறவி பேரா னந்தம் பேராரே
யறிவா னந்த சமுத்திரத்தி னருளா லவத்தந் களைவாரே.

புளகிதப் பொதும்பர் நண்ணிப் பொய்யன்பு போக்கி யுள்ள
மிளகிடு மன்பா நீழ லிருந்தரு ளருண ஞகு
மொளிவெளி யுடலம் போற்றிட் டுன்சுமை பொருவி யென்றுங்
களிவள ரறிவா னந்தக் கடலிடை வீழ்வா மாதோ. (க)

எனக்குனக் கென்னுங் காட்டை யெங்கணு முரியத் தாக்குந்
தனக்கெனச் செயலொன் றில்லாத் தந்தியொன் றேறி வைய
மனைத்தையு மெரிக்கும் ஞான வக்கினிக் கணிச்சி வீசி
மனக்கிலை யாத நாடு வாங்கிவாழ்ந் திருப்பா மாதோ. (உ)

திருவரு ளதனி னேடித் திருவரு ளதனிற் சென்று
திருவரு ளதிற்ற வழ்ந்து திருவரு ளதினி ருந்து
திருவரு ளதனின் வீழ்ந்து திருவரு ளதனிற் செத்துத்
திருவருண் மயமா யின்பத் தேயத்தைச் சேர்வா மாதோ. (ந)

திருச்சிற்றம்பலம்.

உ

# சிறப்புப்பாயிரம்.

திருவருளோ டோளிர்ந்தசிவா னந்தமயத் துளமடங்கிச் சிவமாய் முந்நீ
ரிருநதிசேர்ந் தந்நீராய் நதிமீண்ட தேனத்தின்ற தேப்ப மேன்ன
மருவுமா காளமழ கியதிருச்சிற் றம்பலவன் வைய முய்யப்
போருவிலறி வானந்த சமுத்திரத்தைத் திருவாயாற் போழிந்தா னன்றே.

ஆனந்த வுல்லாசத் துறையறுப தறுநூற்ரோர் பஃது செய்யு
ளானந்த மலபரிபா கத்துறைமுப் பதுநாலேழ் பத்து மாறு
மீனந்தள் ளுபதேசத் துறையையைந் திருநூற்றைம் பானேட் டாகத்
தேனுந்து துறைநூற்றுப் பதினைந்து சதம்பதினேன் றரை*நாற் றீர்பே.

பிரதிபேதம் *முத்தீர்பே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அறிவானந்த சமுத்திரம்.

## நூல்.

## க. சகசானந்தவுல்லாச வாழ்வு.

### 1. கருணைப் பெருங்கடல்.

காணிற் சுகமதுவாங் கருத்துக் கினியதுவாங்
காண வரியதுவாங் கண்டிடிற் கொல்வதுவாங்
காண வெளியதுவாங் காணிற் றுணையதுவாங்
காணிற் பெரியதுவாங் கருணைப் பெருங்கடலே. (க)

நீச்சுக்கு நீச்சதுவா நிலைக்கு நிலைப்பதுவா
மோச்சுக்கு மோச்சதுவா மொளிக்கு ளொளியதுவாம்
பேச்சுக்குப் பேச்சதுவாம் பேணலிற் பேணரிதாங்
காச்சுக்கு வாய்க்கரிதாங் கருணைப் பெருங்கடலே. (உ)

அவல மறுப்பதுவா மளிகள் பெருக்குவதாந்
திவலை யிறுப்பதுவாந் தித்திப் பளிப்பதுவாஞ்
சவலை தணிப்பதுவாந் தன்னைக் கெடுப்பதுவாங்
கவலை யழிப்பதுவாங் கருணைப் பெருங்கடலே. (ங)

அசவை யடிப்பதுவா மமுதை நகைப்பதுவாந்
திசைகள் செகுப்பதுவாந் தெரிவைத் தெரிப்பதுவா
முசிவை முருக்குவதா முனையை மழுக்குவதாங்
கசிவு பெருக்குவதாங் கருணைப் பெருங்கடலே. (ச)

விதியை மிதிப்பதுவாம் விளைவை விளைப்பதுவாந்
துதியைக் கெடுப்பதுவா மிழிவைத் துணிப்பதுவாம்
மதியைப் பெருக்குவதா மதியைத் தகர்ப்பதுவாங்
கதியைக் கொடுப்பதுவாங் கருணைப் பெருங்கடலே. (ரு)

தனியைத் தருவதுவாந் தனியைக் கெடுப்பதுவாந்
துனியைத் துடைப்பதுவாந் தொழிலைத் தடுப்பதுவா
மினிதைப் பெருக்குவதா மெதிரைப் பழிப்பதுவாங்
கனிவைத் தருவதுவாங் கருணைப் பெருங்கடலே. (சு)

பண்ணைப் படைப்பதுவாம் பண்பைக் கொடுப்பதுவாந்
†தண்ணைத் தருவதுவாந் தகவைப் புணர்ப்பதுவா
மொண்ணைத் தருவதுவா முள்ளிற் பொலிவதுவாங்
கண்ணைத் தருவதுவாங் கருணைப் பெருங்கடலே. (எ)

பி—†தன்னை.

திரையைத் தணிப்பதுவாந் தெளிவைத் தருவதுவாம்
புரையைப் பொருத்துவதாம் புதிதைக் கொடுப்பதுவாம்
பரையைக் கடப்பதுவாம் பகலைத் தடுப்பதுவாங்
கரையைத் தருவதுவாங் கருணைப் பெருங்கடலே. (அ)

உள்ள முருக்குவதா முரோமஞ் சிலிர்ப்பதுவாம்
வெள்ள மெடுப்பதுபோல் விழியிற் பொழிவதுவாம்
எள்ள விரிப்பதுவா மெங்கு மிருப்பதுவாங்
கள்ள முடைப்பதுவாங் கருணைப் பெருங்கடலே. (கூ)

அலக்க ணழிப்பதுவா மயர்ச்சி யறுப்பதுவாந்
துலக்கந் தருவதுவாந் துணிவைத் தருவதுவாம்
புலக்க ணொளிப்பதுவாம் புணரப் புணர்வதுவாங்
கலக்கந் தணிப்பதுவாங் கருணைப் பெருங்கடலே. (ப)

திருச்சிற்றம்பலம்.

## 2. சிவகடாக்ஷம்.

மோக வலையை முறிக்கு முனைப்பினை யோடி மழுக்குந்
தாக மிகவு மெழுப்புந் தள்ளுதல் கொள்ள றடுக்கும்
போக மதனைப் புடைக்கும் பூமியிற் போகம் புணர்த்து
மாக மதனை யகற்று மான்மிசை யேறி கடைக்கண். (க)

உள்ளத்தை யோடி யுருக்கு முரோமங்க ளெங்குஞ் சிலிர்க்குங்
கள்ளத்தை யோடி யிடிக்குங் கவலையை யோடித் தடுக்கு
முள்ளத்தை நாளு மொருக்கு முள்ளொளி மெல்லப் பருக்கும்
வெள்ளத்து ளன்பின் விடுக்கும் வெள்ளெரு தேறி கடைக்கண். (௨)

வருமுன்னர்க் காத்தன் மறிக்கு வந்ததை யுந்நின் றெரிக்குங்
கருமுன்னுக் கில்லது காட்டுங் கைப்ப திதுவென நாட்டும்
வெருளினுக் குப்பகை யூட்டும் விட்டு விடாவகை கூட்டு
மருளனைக் கும்வழி யாக்கு மான்மிசை யேறி கடைக்கண். (௩)

நிற்பதை நாளு நிகழ்த்து நில்லா திதுவென் றகற்றுங்
கைப்ப திதுவெனக் காட்டுங் கல்லா திதுவென நாட்டும்
வைப்பு முளத்திடை வைக்கும் வன்னெஞ் சினைநாளு மெய்க்குஞ்
செப்பங் கருத்திடை தைக்குஞ் சேவினி னேறி கடைக்கண். (௪)

நினைக்கு நினைப்பு மகற்று நினையா நினைப்பு மகற்று
நினைக்கு நினைப்பினி னின்றே நினையா நினைப்பினை வென்றே
நினைக்கு நினைப்பி னினைப்பை நினைக்க நினைக்க நினைக்கு
நினைக்கு நினைப்பற நிற்கு நீலக் கழுத்தன் கடைக்கண். (௫)

ஒட்டத்தி னோட்டத்தி னோடு முள்ளத்து ளுள்ளத்து ளுள்ளும்
வேட்டத்தின் வேட்டத்தின் வேட்கு மெய்ம்மையின் மெய்ம்மையின்
மாட்டத்தி னாட்டத்தி னாடு மாற்றினி னாற்றினி னாற்றும் [மெய்க்கு
போட்டத்திற் போட்டத்திற் போடும் புலியூரி யண்ணல் கடைக்கண். ()

இன்பத்தை மெல்ல வெழுப்பு மின்பத்து ளென்னை விடுக்கு
மின்பத்து ளேறவும் வைக்கு மின்பத் திழிய விருக்கு
மின்பத்து ளாட வடுக்கு மின்பத்து ளோட நடிக்கு
மின்பத்தைத் தானென வுய்க்கு மெருதினி னேறி கடைக்கண். (௭)

ஒளியினை யுள்ளத் தெழுப்பு மொளியினி லென்னை விடுக்கும்
ஒளியினி னேறவும் வைக்கு மொளியினின் றிழிய விருக்கும்
ஒளியினி னாட வெடுக்கு மொளியினி னோட நடிக்கும்
ஒளியினைத் தானென வுய்க்கு மோரெரு தேறி கடைக்கண். (௮)

அங்கத்தை வேறென் றுரைக்கு மங்கத்தை நாளுங் கரைக்கு
மங்கத்தை வேறென் றகற்று மங்கத்து ளன்பைப் புகுத்து
மங்கத் தருளை யெழுப்பு மங்கத்து ளின்பம் பயக்கு
மங்கத்தை மெய்ச்சிவ மாக்கு மான்மிசை யேறி கடைக்கண். (௯)

நானென வீதென் றுரைக்கு நானென னுளுங் கரைக்கு
நானெனல் வேறென் றகற்று நானென னண்ணி யிருக்கு
நானரு ளாக நடிக்கு நானமு தாக நயக்கு
நானென ருனெனல் போக்கு நச்சர வாட்டி கடைக்கண். (ய)

திருச்சிற்றம்பலம்.

## 3. சிவகுரு தரிசனம்.

அளிந்த மனத்தோடு மாகமங்க ளெல்லாமுந்
தெளிந்த முகத்தோடுந் தித்திக்கும் வார்த்தையொடும்
விளைந்த சுகத்தோடும் விசார நிராசையொடுங்
குளிர்ந்த முகத்தோடுங் குருவடிவு கண்டேனே. (க)

கண்டா ருளமவிழக் காதலா மேனியொடுந்
தண்டாச் சினந்தீர்ந்த சாந்த குணத்தோடும்
விண்டா ரறியா விமல வுருவாகக்
கொண்டாடத் தக்க குருவடிவு கண்டேனே. (உ)

அத்தந் தருக்கு மருட்சத்தி தன்னோடும்
பத்தனுச் செய்யும் பரியவருட் பார்வையொடுஞ்
சித்த சலன மகன்ற திறத்தோடுங்
குத்தந் துரக்குங் குருவடிவு கண்டேனே. (ந)

துறவாத் துறவோடுஞ் சூழாத சூழ்ச்சியொடு
மிறவா விறப்போடு மெண்ணாத வெண்ணோடும்
பிறவாப் பிறப்போடும் பேசாத பேச்சோடுங்
குறியாக் குறிப்போடுங் குருவடிவு கண்டேனே. (ச)

இருந்த படியே யிருக்குந் திறத்தோடு
மருந்தல் பொருந்த லயருந் தரத்தோடுந்
*திருந்த வுளங்க டிருந்திய தேசோடுங்
குருந்தடியின் வந்த குருவடிவு கண்டேனே. (ரு)

பி—*திருந்தா

தானிறத்த லீனுந் தனையிறந்த போக்கோடும்
பானிறத்த பூதி பளிச்சென்னு மேனியொடு
மானிறத்த பாதத் தழகோடு மாடலிறுங்
கூனிறத்த நெஞ்சோடுங் குருவடிவு கண்டேனே. (சு)

மாளு மடியாரை வாவென்ற வாயோடு
மாளு வலியன் படுவார்க் கருளோடும்
வேளும் வெருள விழிக்கு நுதலோடுங்
கோளியின்கீழ் வாழுங் குருவடிவு கண்டேனே. (எ)

நன்றுதீ தொத்த நயந்த வுளத்தோடு
மென்று மருளா யிருந்த வடிவோடு
மொன்று மறியாம லொன்றறிந்த வுண்மையொடுங்
குன்று மகிழ்வோடுங் குருவடிவு கண்டேனே. (அ)

வஞ்சித்த தீர்ந்த மறவா மனத்தோடுந்
தஞ்சுற்றிட் டெவ்வுயிருந் தாங்குங் கருத்தோடு
மஞ்சிற்ற நெஞ்சி னருட்சூ ரியனோடுங்
குஞ்சித்த பாதக் குருவடிவு கண்டேனே. (கூ)

எட்டுமா தாரவடி யோகங்க ளெத்தனையு
மொட்டு நிராதார யோகங்க ளுள்ளனவுஞ்
சுட்டி யுணரு முலகத் தொடக்கதெல்லாங்
குட்டி யிருந்த குருவடிவு கண்டேனே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 4. நான்கு சாயுச்சிய நற்பேறு.

பூதி கண்டிடிற் பொங்கிய வன்பதி
னீதி கேட்க நிரம்பிய வன்பதை
யோதி நிற்க வுறுத்திய வன்பொடுஞ்
சாது வாய்த்தெளிந் தன்புஞ் சரியையே. (க)

இலிங்கங் கண்டிடி னெய்திய வன்பிதை
யிலங்கக் கற்க வெழுந்திடு மன்பதைத்
துலங்கக் கற்றுத் துணிந்திடு மன்பொடுங்
கலங்கிடா வன்புங் காணிற் கிரியையே. (உ)

துதையுமெவ் வுயிரு மொக்கத் துன்னன்போ
டிதையந் தன்னி னிறையறி யன்பவா
விதிதெ ரிந்ததி னிற்கமின் னன்புக
ளுதையமா யொன்று படுமன்பும் யோகமே. (ங)

அறிவு காணி னளிந்திடு மன்பொடும்
பிறவி துன்பமாய்ப் பெற்றிடு மன்பொடுங்
குறையு மிவ்வுல கங்கைக்கு மன்பொடுந்
துறவுண் மெய்க்குரு சொற்குறு மன்பொடும். (ச)

கற்கு மன்பொடு கற்ற படியன்பாய்
நிற்கு மன்பொடு நீண்ட புளகிதம்
புக்க வன்பொடு புந்தி குழைந்தளி
மிக்க நண்பொடு மின்னிடு மன்பொடும். (ரு)

கம்பங் கம்பலை கண்டந் தழுதழுப்
பெங்கும் வேர்வையு மெங்கும் புளகமு
மங்க மெங்கு முளமயி ரும்மசைத்
தின்ப வாழ்வு மெழுந்தெழுந் தெய்தலும். (சு)

ஓல மிட்டிடும் வாயுத வாமலு
நாலு தோலென்பு நெக்கிட நண்ணலு
மேலங்க மெங்கும் விழிபொழி வெள்ளமுஞ்
சால வும்வருஞ் சோம்பு தளர்ச்சியும். (எ)

ஏங்கி டாமலு மேங்கலு மேங்கலி
னீங்கி டாமலு நீங்கலு நீங்கலி
ஞேங்கி டாமலு மோங்கலு மோங்கலிற்
றாங்கி டாமலுந் தூங்கலுந் தோய்தலும். (அ)

கள்ள மெங்குங் கழறலுங் கண்டிடு
முள்ள மெங்கு மொளிரு மொளிக்குளே
வெள்ள வின்ப மெழலும் விழைந்துளங்
கொள்ளை கொள்ளக் குழைந்து முகந்ததும். (கூ)

இன்ப மீதிற் றிளைந்தது மெங்கணு
மின்ப மீதி லிருந்தது மெஞ்சலி
லின்ப மாகி யொளிர்ந்ததும் வேறற
வின்ப மாயது மியானுமங் கில்லையும். (ய)

நித்த நித்திரை யாயது நீங்கிடா
நித்த நித்திரை போயது நின்றிடாப்
பித்தன் பேயனை யொத்ததும் பீதிதீர்
பெத்த ஞயிடும் பெற்றியும் ஞானமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## 5. அகாரணக்கொடை ஆசானோடளாவி.

மதியளித்து நான்கு வழியுந் தெரித்ததனுட்
கதியாகு நான்கினையுங் காட்டிநீ முனமூன்றின்
பதமளைந்துண் டனைவிடுபிற் பதமறிய மூன்றுபொருள்
விதிதெரியச் சிந்தியென்று மிகத்தெளித ரந்தீரே. (க)

அம்பரத்தைக் கண்கொண் டறிந்ததனை யாராய்ந்து
தம்பரமே யென்றதனைச் சார்ந்து மிகத்தழுவி
வெம்ப லுறக்கடித்த வீரமென ஞானமா
மம்பரத்தைக் கவ்வு மருளுதவி தந்தீரே. (உ)

வித்துநில நீர்காற்று வெய்யின்முளை மென்பருவ
முற்றியிட மெல்லரும்பு மொட்டுமலர்ப் பூப்பிஞ்சு
மொத்தகருக் காய்முற்றி யொண்கனியே யோர்விருக்கந்
துற்றமுறை பொற்புளகச் சுகத்தருவொன் றீந்தீரே. (ங)

ஓர்கடத்திற் றண்ணீரை யூற்றியூற் றியுநிரப்பி
யார்கடத்தை மெல்ல வசைத்துச்சாய்த் தப்பாலு
மோர்கடத்து நீரு மொருங்குசாய்த் தொப்பவுளச்
சீர்கடத்தா னந்தமாந் தெண்ணீர்க டந்தீரே. (ச)

ஒற்ற விசையாவு மொப்பில்லை யென்றுரைத்துச்
சுற்றிவிசை கொண்டு சுழித்துமிகக் காந்தியது
வெற்றிகொள்ளும் பம்பரமு மெல்லமெல வோய்ந்ததெனச்
சித்த சலனத் திருக்கை யறுத்தீரே. (ரு)

மின்மினியின் றன்னொளியு மன்றி விளக்கொளியும்
பன்மீ னொளியுமதிப் பாலொளியும் பேரொளியாம்
பொன்னொளியுங் கண்ணொளியைப் போர்த்ததுபோன் மெல்லமெல
வென்னறிவின் ஞானவொளி யெல்லா மிருத்தினிரே. (சு)

கன்னலின் சாறுமதைக் காய்ச்சு மிளம்பாகும்
பின்னமுது பாகும் பெரும்பூரிச் சர்க்கரையுந்
தன்னெவ்வா றற்சீனிச் சர்க்கரையுஞ் சிங்குவையார்ந்
தென்ன வெனதறிவி னின்ப மளித்தீரே. (எ)

தித்திப்பு நாவு மிரண்டாய்ச் சிறந்தினிய
தித்திப்பு நன்னாவு மொன்றாய்ச் சிறந்துபினைத்
தித்திப்பு நன்னாவு மின்றாய்ச் சிறந்தனபோற்
சத்தியமு மென்னையுமே தடவலாய்ப் பண்ணினிரே. (அ)

கருத்தழியுஞ் சன்னியனைக் காணக் கருத்தாக்கி
மருத்துவனச் சனிமுற்று மாய்த்தின்பம் வாங்கியபோல்
வருத்தந் தனைத்தெரித்தவ் வருத்தமெலாந் தீர்த்தருளி
நிருத்தியின்ப மீந்தநீ ரென்னனென்பால் வாங்கியதே. (௯)

காணாதுங் காணமற் கண்டதுங்கண் டதுந்திரும்பக்
காணமற் கண்டதுவுங் காணாதாய் நின்றதுவுங்
காணத் திருமேனி காட்டியதுங் காண்பதற்குக்
காணமற் கண்டில்லாக் கண்மாயஞ் செய்தீரே. (௧0)

பெற்றவரைக் கொண்டு வளர்த்தவரைப் பிய்த்திவரை
வைத்தவெனைத் தின்றென்ற னுள்ளமெலாம் வாங்கியருள்
பெற்றதையும் போக்கினீர் பேசியதும் வீணாக்கி
யுற்றவர்போன் மெத்த வுறவா யிருந்தீரே. (௧௧)

மாயையை யெற்று மலரடிகள் வாழ்கமலங்
காயுமருட் பார்வைக்கண் வாழ்க வினைகடியும்
வாயு மிகவாழ்க மாறா வருட்கனியை
யீயுங்கை வாழ்க விருப்பீ ரிருப்பீரே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

## 6. அருளுதவியை வியந்தளித்தல்.

கள்ளா றுடையேன் கவலை தீரக் கருதிக் கொண்டீரே
யெள்ளா றகற்று நல்லா றென்று மிரங்கி யீந்தீரே
யுள்ளா றுடையீ ருள்ளா ரடியேற் குள்ளத் திந்தீரே
நள்ளா றகலா நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (௧)

எண்ணா வெண்ணு மெய்யா வெய்ப்பு மேழைக் கிந்தீரே
தண்ணா ரருளுந் தாழாத் தேனுந் தானே தந்தீரே
மண்ணா மண்ணும் வாரா வரத்தும் வாரித் தந்தீரே
நண்ணா நண்ணு நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (௨)

போடாப் பொருளும் போடும் பொருளும் புந்திக் களித்தீரே
வாடாத் தலைபு மறவா மனமும் வாய்க்கத் தந்தீரே
தேடாத் தெளிவுந் தேடுந் தெளிவுஞ் சேரத் தந்தீரே
நாடா நாட நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (௩)

உள்ளுந் திறமு முருகுந் திறமு முகந்தங் களித்தீரே
கொள்ளுந் திறமுங் கொடுக்குந் திறமுங் குலவத் தந்தீரே
யெள்ளுந் திறமு மெள்ளாத் திறமு மியைய வீந்தீரே
நள்ளுந் திறலார் நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (ச)

காணுக் கண்ணுங் கனியாக் கனிவுங் கனிந்து தந்தீரே
கோணு வுள்ளுங் குழையாக் குழைவுங் குழைந்து தந்தீரே
பேணுப் பேணும் பிணியாப் பிணிப்பும் பிறங்கத் தந்தீரே
நாணு நாண நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (ரு)

புகலாப் புகல்வும் புணராப் புணர்வும் போதத் தந்தீரே
யகலா வகல்வு மாரா வார்வு மாரத் தந்தீரே
பகலாப் பகலும் பணியாப் பணியும் பரிந்து தந்தீரே
நகலா நகல்செய் நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (சு)

நல்லா ரேவ லுல்லா சத்தே நண்ணத் தந்தீரே
நல்லார் தாளிற் செல்லாத் துகளு நண்ணத் தந்தீரே
நல்லா ருள்ள ஞானு னந்த நட்புந் தந்தீரே
நல்லா றகலா நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (எ)

அஞ்சு மஞ்சு மஞ்சு மகற்று மாறுந் தந்தீரே
யஞ்சு மஞ்சா வஞ்சு மளிக்கு மன்புந் தந்தீரே
யஞ்சு மஞ்சு மஞ்சு மஞ்சு மாறுத் தந்தீரே
நஞ்சென் றோடி நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (அ)

செத்தார் செயலுஞ் சாகாச் செயலுஞ் சேரத் தந்தீரே
வைத்தார் வைப்பும் வையா வைப்பு மகிழ்ந்து தந்தீரே
கற்றூர் கற்புங் கல்லாக் கற்புங் காணத் தந்தீரே
நற்றூ டேடி நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (கூ)

அழையா வழைப்பு மளியா வளியு மருளிச் செய்தீரே
விழையா விழைவு மிளிரா மிளிர்வும் வீசி யீந்தீரே
யுழையா வுழைப்பு மொளியா வொளிப்பு முருகித் தந்தீரே
நழுவா வுள்ள நல்லார் போற்று ஞானச் சுடரீரே. (ம)

திருச்சிற்றம்பலம்.

## 7. புகழாப் புகழ்ச்சி.

வஞ்சனையாற் பின்சென்று வாரி மடுப்பவர்போற்
சிந்தையின்மே லேறியெனைச் சீறிச் செகுத்தீரே. (க)

மழைக்கொதுங்க வந்தார் மனைபறித்த நீதிபோற்
பழக்க மனைபறித்துப் பாழ்வெளியின் விட்டீரே. (உ)

அஞ்சினர் தம்மை யடித்துப் பறித்ததுபோ
லஞ்சினேன் றன்னை யடித்துப் பறித்தீரே. (௩)

இட்டகை யுங்கெட்டிட் டேற்றகையுங் கெட்டதென
வெட்ட வெளியின் வெறும்பாழ்தா னனேமே. (௪)

கெட்டார்க்கு நட்டா ரிலையென்ற கேள்விபோற்
சுட்டுமுல கோரெல்லாந் தூடணிக்கச் செய்தீரே. (௫)

ஈந்தார்க் கிடுக்கண் செயுநீர்மை போலென்னை
யீந்தென்னைக் காணு திடித்துப்பா ழாக்கினிரே. (௬)

மெய்சொன்னர் போலுமக்கு வேறென் றெனையுரைத்துப்
பொய்சொன்ன வாய்க்குநீர் போசனமு மாற்றீரே. (௭)

வெள்ளத்திற் றள்ளிவிட்டு வேடிக்கை பார்ப்பவர்போற்
கொள்ளைகொண்ட வுள்ளவெள்ளங் கொள்ளக் கொடுத்தீரே. (௮)

சொக்குப் பொடிதூவிச் சொன்னம் பறிப்பவர்போற்
சக்குப் பொடியாலென் றன்னைப் பறித்தீரே. (௯)

நீண்டபொருள் வாங்கி நெடும்பை யுதவியபோல்
வேண்டியதெ லாம்வாங்கி வேண்டாமை தந்தீரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 8. தானே தந்த தளர்ச்சி.

தேனைப்பா லைக்குடிக்கத் தித்தித் திருந்தனபோன்
மானைத்தான் மன்ன மகிழ்ச்சி பிறந்ததுபோ
ஞனைத்தான் றேடி நசிக்கக் கிருபைதந்திட்
டேனைத்தா ரானேற் குளமகிழ்ச்சி தந்தானே. (க)

எரிக்குநீ ரூற்றுவபோ லிடிகரையைத் தாங்குவபோற்
பசிக்குச்சோ றீகுவபோற் பாராளத் தந்ததுபோற்
றரிக்கா மனமுந் தரிக்கக் கருணைதந்து
கருக்காப் பினையகற்றிக் கண்குளிரச் செய்தானே. (உ)

தவாக்காட்டுட் பட்டார்க்கு நாடுதலைப் பட்டாற்போற்
றிவாத்தா னறியார்க்குக் கண்க டெரிந்ததுபோ
லவாப்போ யிருக்க வளிகள் பெருக்கியே
யுவாத்தோ னுரியா னுளமகிழ்ச்சி தந்தானே. (௩)

விந்தக் கிரிமேல் விழுந்தா ரெழுந்தனபோ
னிந்தைக் கயர்ந்தார்க ணீங்கி மகிழ்ந்ததுபோற்
பந்தப் பிணிமூன்றும் பாறியிடப் பார்வைதந்து
சிந்தைக் கரியானென் சிந்தைகுடி கொண்டானே. (௪)

துயக்கோ டுளைப்பட்டார் தமைத்தூக்கல் போன்மைந்தன்
பயக்கா மகட்குப் பயக்க மகிழ்ந்ததுபோற்
சயிக்கா விருப்புவெறுப் போடத் தலைதந்தேற்
கியக்கா வுருவா னியக்கங் கொடுத்தானே. (௫)

ஏங்க லுடையாருக் கேக்கந் தவிர்ந்ததுபோன்
மூங்கை யுடையார்க்கு மூங்கை மூசிந்ததுபோ
லோங்குங் கருத்தகல வுள்ளாம லுள்ளறந்து
தூங்கற் பெருநெறியாற் றூயவகந் தந்தானே. (௬)

அஞ்ச லிலாதாருக் கஞ்ச லமர்ந்ததுபோல்
விஞ்சு கவலையார்க்கு மேம்பாடு வாய்த்ததுபோற்
றெஞ்சக் கருத்தும் புளகமுந் தோன்றியிட
நெஞ்சினி னிற்பா னிலைமை யளித்தானே. (௭)

மிடிக்காணார் தங்கண் மிடிகெட் டிருந்ததுபோ
னடைக்காயி னுரை நரர்கள் சுமந்ததுபோற்
கொடுக்காம லுள்ளங் கொடுக்கக் குழைவுதந்து
நடிக்காம லென்னு ணடன நயந்தனனே. (௮)

சாதகப் பட்சிக்கு வெண்ணிலவு சார்ந்ததுபோற்
பாதகர்க்குப் பொல்லாத நோய்போன பான்மைபோற்
சாதகமெல் லாமகற்றிச் சாதியா வுட்டந்து
வாதனை தீர்ந்ததொரு வானுலகந் தந்தானே. (௯)

தனித்துப் படுமகட்குத் தலைவன்வந்து சார்ந்ததுபோ
லுனித்துத் திரிவாரை வெளியின்விட்ட வுண்மைபோ
னினைக்கு நினைப்பகற்றி நினையா நினைப்புதவித்
தனிக்கு மிடத்தினெனைச் சாராமற் சார்ந்தானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 9. ஈர்த்தளித்த வின்பம்.

உருக்கக் கருத்து மொழுக விழியு முளத்தினன்பு
பெருக்கப் பெருக்க மலப்பிணி மூன்றும் பிறழ்ந்துபிஞ்சு
செருக்கற் றிடவுஞ் சிவானந்த வாரியுட் சென்றுசும்மா
விருக்கச் சுகமுந்தந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௧)

நுனிக்கத் தெளிவும்பஞ் சேந்திய நந்திடு நுட்பமுமுட்
டனிக்கத் திருவரு ளுந்தந்திட் டின்ப சமுத்திரமுட்
செனிக்கச் செனிக்க மகிழ்ந்துளம் வாழ்ந்துசெம் மாந்துசும்மா
வினிக்கக் கருணைதந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௨)

தரிக்கக் கருத்துந் தயவும் பொறுமையுந் தாமுடைவா
மரிக்கக் கருணையுந் தந்ததல் லாமன் மலரடிகள்
பரிக்கத் தலையும் பருகிட வின்பமும் பாழும்வினை
யிரிக்கத் திடமுந்தந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௩)

ஒடிக்கச் சினமும் வைரமு மானமு மோரடியா
யடிக்கப் பயன்மத னுண்மையெல் லாந்தந்து மானந்தத்தேன்
குடிக்கக் குடிக்கத் தெவிட்டா துளங்குதி கொள்ளமல
மிடிக்கப் பரிசுந்தந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௪)

தேறக் கருத்து முளபடி வாய்க்கு மெனுந்திறமுந்
தூறச் சுவர்க்கங்க ளியாவுஞ் சுதந்தரந் தோன்றலெல்லா
மாறத் திருவரு ளேறிச் சிவானந்த வாழ்பதியி
னேறப் பதமுந்தந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௫)

அடுக்கத் திருவருட் பெற்றுரை யுள்ளத்து ளன்புவிஞ்சிக்
கடுக்கப் பிரபஞ்ச மாயையெல் லாம்வினைக் காடடங்க
வொடுக்கப் பெருமல மோடச் சிவானந்த வோதமுவட்
டெடுக்கக் கிருபைதந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௬)

மோகக் கரிதின் னுஞ் சீயமு மச்சர மொய்யழலை
வேகத் தொடுதணிக் குங்குளிர் நீரும் வியன்மதமா
நாகத் தினைக்கொலு மஞ்ஞையு முள்ளிரு ணட்டினைவிட்
டேகப் பதியுந்தந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௭)

தோடாத் தினமு நினைவுந் தனதடித் தூரமெல்லாம்
பாடாய்ப் பெரிய வறிவுந் தனதருட் பார்வையென்னு
மாடாச் சிவானந்த மார மனவழுக் காவதெல்லாம்
ஏடாக் கழலுந்தந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௮)

ஆற்றப் பெரிய வினைச்சுழி தீர வழுதுகண்ணீ
ரூற்றத் தயவும் பிரபஞ்ச மூழலென் றேங்கிநின்று
தூற்றச் சமத்துந் தனதடிக் கேயென்றன் றூயவன்பை
யேற்றக் கருத்துந்தந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௬)

சுட்டப் படும்பொருள் யாவுந் துணைநமக் கல்லவென்று
குட்டக் கலீரெனக் கையுஞ் சுகத்தைக் கொணர்ந்துதரும்
பட்டப் பகலென வுள்ளமுங் கிட்டற் கரியபத
மெட்டக் களிப்புந்தந் தான்ஞான பூரண வென்னப்பனே. (௭)

திருச்சிற்றம்பலம்.

## 10. அருளளித்து மலஞ் சிதைத்த வாங்கு.

[இப்பதிகமும் அடுத்த பதிகமும் பஞ்சமப் பண்ணவை. இப் பதிகச் செய்யுட்களில் 1, 2, 3-ம் அடிகளின் 3-ம் சீர்முன் அருள் என்பதைச் சேர்த்து அவற்றை இரட்டிப் பாடுதல் மரபு.]

தன்னை யறக்கெடுக்குந் தனித்தண்ணருட் பார்வைதந்தா
னென்னை யெனக்களித்தா னருளீனுந் திருவளித்தா
னுன்னன் மறப்புடைக்கு முளத்தோசை யுகந்தளித்தான்
மின்ன லுளத்தளித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (௧)

துன்பந் துறந்தளித்தான் றுறவாத துறவளித்தா
னின்பந் தனித்தளித்தா னியையாத வியைவளித்தா
னென்புங் கரைந்துருகு மிரக்கத்தை யுளத்தளித்தான்
மின்பயி லவ்வளித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (௨)

திருத்து முளமளித்தான் றெளியாத தெளிவளித்தா
னருத்தி யுறவளித்தா னமுதத்தை யகத்தளித்தான்
கருத்துந் தனித்தளித்தான் கவலைகள் கெடவளித்தான்
விருத்த முகவளித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (௩)

தையன் மயலுடைக்குந் தனிச்சர்க்கரைப் பந்தர்தந்தான்
வைய மொருபடித்தா மனவண்மை யகத்தளித்தான்
மெய்யி லரும்பளித்தான் விழியின்கண் மழையளித்தான்
மெய்யின்மெய் யாயிலகு மன்பின்மேவிய விண்ணவனே. (௪)

எங்குங் கசப்பொழித்தா னெங்குந்தித்திப் பதையளித்தான்
றங்குந் தலமளித்தான் றனியாகு மிடமளித்தான்
கொங்கு முளத்தளித்தான் குலமாகுங் குணமளித்தான்
விஞ்சுங் கவியளித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (௫)

பாழதிற் பாழளித்தான் பகர்பண்பதிற் பண்பளித்தான்
வாழ்வதின் வாழ்வளித்தான் பயில்வானுல கும்மளித்தான்
போழ்வதிற் போழ்வளித்தான் புகல்புந்தியிற் பொன்னளித்தான்
வீழ்வதின் வீழ்வளித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (சு)

அஞ்சை யறவளித்தா னரனஞ்சை யகத்தளித்தா
னஞ்சை யறவளித்தா னரனஞ்சை யகத்தளித்தான்
விஞ்சை தனையளித்தான் மாகவிஞ்சை தனையளித்தான்
விஞ்சை தனையளித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (எ)

காண்பதை யும்மளித்தான் கண்ணிற்காண்ப தையுமளித்தான்
காண்பதை யும்மொளிக்குங் கண்ணுற்காண்ப தையுமளித்தான்
காண்பதுங் கண்டதுவுங் கணிற்காண்கின் றதுமளித்தான்
வீண்பணி தீர்த்தளித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (அ)

விளக்கின் விளக்களித்தான் விளக்கான விளக்களித்தான்
விளக்கின் விளக்களித்தான் விளக்காய விளக்களித்தான்
விளக்கின் விளக்களித்தான் விளக்காகும் விளக்களித்தான்
விளக்கின் விளக்களித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (கூ)

உருவி னுருவளித்தா னொளியாகு மொளியளித்தான்
கருவிற் கருவளித்தான் கதியாகுங் கதியளித்தான்
திருவிற் றிருவளித்தான் றிறமாகுந் திறமளித்தான்
விரிவின் விரிவளித்தா னன்பின்மேவிய விண்ணவனே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 11. மலஞ்சிதைத் தருளளித்த வைப்பு.

வஞ்சனை யுங்கெடுத்தான் வஞ்சமாய வதைக்கெடுத்தான்
துஞ்சலை யுங்கெடுத்தான் துன்னுசாக்கிர முந்துணித்தா
னெஞ்சலை யுங்கெடுத்தா னினையாமை யதைக்கெடுத்தான்
வஞ்ச மறுத்தொளிரு மன்பின்வந்தொளிர் மாதவனே. (க)

ஐய முறலறுத்தா னையமில்லா மையையறுத்தான்
செய்ய சினங்கெடுத்தான் சினம்போம்பொறு மைசிதைத்தா
னையு முளங்கெடுத்தா னரனையா வுளஞ்சிதைத்தான்
மைய லறுத்தருளு மன்பின்வந்தொளிர் மாதவனே. (உ)

கோடு மனங்குலைத்தா னிமிறும்மன முங்குலைத்தான்
கேடு முறல்கெடுத்தான் கிளர்வாழ்வு மிகக்கொடுத்தா
னோடு மனமொடித்தா னுயர்வோடா வணமொடித்தான்
வாடும் பிணியகற்றி யன்பின்வந்தொளிர் மாதவனே. (ட)

உறவுள்ள துங்கெடுத்தான் பகையுள்ளதெல் லாங்கெடுத்தா
னறமதெல் லாமறுத்தான் மறமாவ ததையடித்தான்
றிறமதெல் லாஞ்செகுத்தான் றிறந்தீர்வ தையுஞ்செகுத்தான்
மறமதெல் லாமகற்றி யன்பின்வந்தொளிர் மாதவனே. (ச)

ஓய்வது வும்மொளித்தா னுயர்வுள்ளு வதுமொளித்தான்
பாய்வது வும்பறித்தான் பதுங்கும்பதுக் கம்பறித்தான்
றேய்வது வுந்தகர்த்தான் வளர்வாவது வுஞ்செகுத்தான்
மாய்வதெல் லாமகற்றி யன்பின்வந்தொளிர் மாதவனே. (ரு)

அனித்திய மும்மறுத்தான் சிவநித்திய மும்மறுத்தான்
றனித்தலை யும்மறுத்தான் றனியாமலை வும்மறுத்தா
னினித்தலை யும்மிடித்தா னினியாமலை வும்மிடித்தான்
மனத்தை யிடித்தொளிரு மன்பின்வந்தொளிர் மாதவனே. (சு)

இருளு மிருளறுத்தா னொளியாக வதைபிறுத்தா
னருளு மருளளித்தா னருளாமலை வும்மொளித்தான்
றிரியுந் திரிவறுத்தான் றிரியாமலை வுஞ்சிதைத்தான்
மருளுங் கெடவகற்றி யன்பின்வந்தொளிர் மாதவனே. (எ)

துறவு மறக்கெடுத்தான் றுறவாமலை வுங்கெடுத்தான்
புறமு மறப்புடைத்தா னகமித்தை யறப்புடைத்தான்
குறையு மறக்கெடுத்தான் மகிழ்வாவ துறக்கொடுத்தான்
வறிதை யறுத்தருளு மன்பின்வந்தொளிர் மாதவனே. (அ)

உய்க்குந் துணையொளித்தா னுய்விலாத துணையொளித்தான்
கைக்கும் பதிகெடுத்தான் கைத்தலில்லாப் பதங்கொடுத்தான்
மெய்க்கும் பணிகொடுத்தான் மெய்யாப்பணி யுங்கெடுத்தான்
வைக்கும் வினையகற்றி யன்பின்வந்தொளிர் மாதவனே. (கூ)

அஞ்சலை யுங்கெடுத்தா னஞ்சலில்லா மையுங்கெடுத்தான்
விஞ்சலை யுங்கெடுத்தான் விஞ்சலில்லா மையுங்கெடுத்தான்
னெஞ்சினை யுங்கெடுத்தா னெஞ்சமில்லா மையுங்கெடுத்தான்
மஞ்சுல வுங்களத்தா னன்பின்வந்தொளிர் மாதவனே. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 12. தன்னு ளொளிர்தல்.

உன்ன வரிதும் வைத்தா ருன்னவி னுன்னும் வைத்தார்
பின்னை யெளிதும் வைத்தார் பேச வரிதும் வைத்தார்
துன்னுஞ் சுகமும் வைத்தார் சுகத்திற் சுகமும் வைத்தார்
தன்னை யிறுதல் வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (க)

கரணங் கடத்தல் வைத்தார் கருணைக் கடலி னுட்கு
ளருண நிழலும் வைத்தா ரதனி னமுதும் வைத்தார்
தெருண யநமும் வைத்தார் தெளிவிற் றெளிவும் வைத்தார்
தருண நிதமும் வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (உ)

கரைவிற் கரைவும் வைத்தார் காணுங் கனிவும் வைத்தார்
பரையிற் பதியும் வைத்தார் பதியிற் பதியும் வைத்தா
ரரையி னதளும் வைத்தா ரவளு மருகின் வைத்தார்
தரையிற் றனிமை வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (௩)

உருக்க முளத்தின் வைத்தா ருளத்தை யொழித்தல் வைத்தா
ரிருக்கு மிருப்பும் வைத்தா ரினிக்கு மினிவும் வைத்தார்
பருக்கு மிரக்கம் வைத்தார் பகைக்கும் படியும் வைத்தார்
தருக்கை யொருக்கை வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (ச)

ஊனை யுருக்கல் வைத்தா ருளத்தி னொளிர்தல் வைத்தார்
தேனை யிகழ்தல் வைத்தார் செத்த விடமும் வைத்தா
ரேனை யிடமும் வைத்தா ரிச்சைக் கிளைப்பும் வைத்தார்
தானைத் தவிர்தல் வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (௫)

ஆயு முளமும் வைத்தா ரமரு மமைதி வைத்தா
ரோயு மிடமும் வைத்தா ருண்மையி னுண்மை வைத்தார்
வாயும் வயிறும் வைத்தார் வாதை படவும் வைத்தார்
தாயு மெனவும் வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (௬)

அள்ளு மளியும் வைத்தா ரமிழ்ந்துங் கடலும் வைத்தார்
துள்ளுந் துணிவும் வைத்தார் சுவையு மதிகம் வைத்தார்
கள்ளு மவினு முண்பா ரென்னக் கருத்தும் வைத்தார்
தள்ளுந் தகையும் வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (எ)

அற்ற மறுதி வைத்தா ரங்கங் குறைதல் வைத்தா
ரிற்ற நினைவும் வைத்தா ரிவறற் றவிர்தல் வைத்தா
ருற்ற வுறுதி வைத்தா ருறுதிக் குறுதி வைத்தார்
சற்று மசைவு மற்றார் தன்னு ளொளிர் பவரே. (அ)

அயரு மயர்ச்சி வைத்தா ரயரா வயர்ச்சி வைத்தா
ருயரு முயர்ச்சி வைத்தா ருயரா வுயர்ச்சி வைத்தார்
பெயரும் பெயர்ச்சி வைத்தார் பெயராப் பெயர்ச்சி வைத்தார்
தயவு மதிகம் வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (கூ)

இளகு மிளக்கம் வைத்தா ரிளக்கு முணர்வும் வைத்தா
ரிளகி னெழுத லுள்ளி யியையு மருளும் வைத்தா
ரிளக வெளிய தென்ன வின்ப மகத்தின் வைத்தார்
தளிரு மடியின் வைத்தார் தன்னு ளொளிர் பவரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 13. நித்தியானந்த சுகலீலையை நிகழ்த்தி மகிழ்தல்.

[இப்பதிகத்தின் ஈற்றடிக்குப்பின் **பாரடி யணங்கே** அல்லது **பாரடி யுள்ளத்தே** யென வொட்டிப் பாடுதல் மரபு.]

புளகக் காட்டிற் போந்து போதக் கனிபறித் துண்டிட்
டிளகு முள்ளத் தின்வந்தங் கிருந்து மகிழ்ந்து துளைந்திட்
டனியுங் நல்லரு ளாழி யழுந்திய போதங் கமுத
வெளிதந் தென்னை விழுங்கு மளிதந் தாண்டி மின்னே. (க)

உள்ளக் கவலை யுடைக்கு முள்ளத் துள்ள லுள்ளி
யள்ளிப் பணியு மளியு மள்ளித் தந்த தல்லாற்
கள்ளப் புலனைக் கடியுங் கருணை காட்டி யின்ப
வெள்ளத் தழுத்திக் கொன்று விட்டா னென்னை மின்னே. (உ)

தறுகட் பேய்க்கோ ராணி சார்வா றைந்துந் தணவாப்
பொறுமைக் குன்றி னேற்றிப் புந்தி பொருந்தாச் செந்தே
னிறையத் தந்திட் டுண்மி னென்று முகம னிகழ்த்திக்
கறுவிக் கொன்றிட் டென்னைக் காணு நின்றான் மின்னே. (ங)

ஆசை யெல்லா மறுத்திட் டையந் தீரச் செய்திட்
டோசை யுள்ள நிரப்பி யுள்ளத் தொளியு மெழுப்பிப்
பேச வரிய வின்பம் பிறவி தீரப் பிலிற்றி
நேச மின்றி நேச நிறுத்தி னுண்டி யுள்ளே. (ச)

உருவைப் பொன்ற வுடைத்திட் டுள்ளக் கனிவை யெழுப்பிக்
கருவிக் குழுவைக் கழற்றிக் கருணைக் கடலின் விடுத்திட்
டிருளைத் துரந்து நூறி யின்பக் கடலி னமிழ்த்து
மருளைத் தெரிய வளித்தா னருளைப் பாராய் மின்னே. (ரு)

உவர்ப்புத் தூங்க லெற்றி யோடா மடத்தி விருத்தி
யயர்ப்புப் புரிகை விடுத்திட் டருட்குன் றுச்சி மடுத்துத்
தவிப்புத் தீரச் செந்தேன் சத்த மாரி பெய்து
பவச்செந் தீகள் பரியப் பார்த்தா னென்னை மின்னே. (௬)

கவலைக் காட்ட மிட்டுக் காமத் தீயின் வெந்திட்
டவலப் பிறப்பி னலையு மாரா வாசைப் பேய்க்கு
மிவறல் போகச் செய்யு மினிய வருட்கண் காட்டி
யுவமை தீரு நாடொன் றுதவி ணுண்டி யுள்ளே. (௭)

அச்ச மாகு நாவா யாசை யாழி யேறித்
துச்ச மாகுஞ் சரக்குக் கொண்டு துஞ்சுஞ் சோம்பற்
கிச்சை போகச் செய்யு மெட்டொ ணாத வருட்குப்
பிச்ச னாகச் செய்தான் பெருமை பாராய் பெண்ணே. (௮)

சீற்றச் செந்தீப் பட்டுத் தினமு மோடிக் கருகி
நாற்றப் பண்டத் துழன்று நாயிற் கடையா மெற்கு
மாற்றப் பெரிய குழைவு மருளி யல்ல றீரப்
பார்க்கும் பார்வை செய்தான் பான்மை பாராய் பெண்ணே. (௯)

அன்று முதலா வென்னை யடியா வண்ண மடித்திட்
டொன்று முதவா திருந்து மெல்லா நலமு முதவி
யென்று மிருக்கு மென்னை யென்று மிருக்கச் செய்து
பொன்றி டாமற் பொன்றல் புகுவித் தாண்டி மின்னே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

## 14. சிவானந்தாதீதச் செருக்கு.

காட்சி யின்றிக் கனிவின்றிக் கண்டிடு
நீட்சி யின்றி நினைவின்றி நெஞ்சின்றி
மீட்சி யின்றிப்போக் கின்றிமெய் யாமுணர்
வாட்சி மேடை யனந்தல்கொண் டேனரோ. (௧)

ஓட லின்றி யிருப்பின்றி யோதரும்
பாட லின்றி யழலின்றிப் பாழ்ம்புலன்
கோட லின்றி விடலின்றிக் கோணங்களைத்
தேட லின்றித் தெளிந்ததென் சிந்தையே. (௨)

ஊனுஞ் செத்திட் டுயிர்செத்துச் சூக்குமந்
தானுஞ் செத்து வினைசெத்துச் சாவிலா
நானுஞ் செத்தரு ளுடலுஞ் செத்தென் றன்
கோனும் யானுங் குலாவலுஞ் செத்ததே. (௩)

அருளி னங்குரித் தன்பிற் றவழ்ந்ததாந்
தெருளி லேகடந் தேதையுஞ் சிந்திடும்
பொருளி னேடி விழுந்துநான் போனதிவ்
விருளு கத்தினி யாருக் கிசைப்பதே. (௪)

பார்வை நீரிற் படிந்தது மெய்குளிர்
போர்வை கொண்டு புலர்த்த தும்பொரு
ளார மெங்கு மணிந்தது மானந்தச்
சார முண்டதுஞ் சால மறந்தனே. (௫)

அழுக்கு வத்திர மூன்று மவிழ்த்தொர்மி
னிழுத்து வெண்பட்டு முக்காடொன் றிட்டதும்
பழுத்த தோர்கிழ வன்னெனைப் பற்றியே
யிழுத்த ணைத்தங் கிருந்ததும் போயதே. (௬)

இருட்ட றையி விருந்த வெனையிரு
திருட்டு மங்கையர் பட்டணஞ் சேர்த்தது
மருட்செந் தீயினப் பட்டணம் வெந்ததும்
பொருட்பு னல்கொ டவித்ததும் பூத்ததே. (௭)

இருளை யோரொளி யெய்த்தது மவ்வொளி
யருளி னேடி யழிந்தது மவ்வருட்
டிரளை யின்பஞ் செகுத்தது மவ்வின்பப்
பொருள தாயதும் போதவும் பொய்த்ததே. (௮)

நோக்கச் சாய்ப்பி லலைந்தெனை நுண்ணருட்
டாக்குப் பேரகந் தன்னி னிருத்தநான்
போக்கப் பட்ட பெருந்தேன் பொருப்பினி
னீக்கி டாமற் சுகித்தது நின்றதே. (௯)

ஈர்த்த தீப மினியிழிந் திட்டதும்
போர்த்த மீனொளி யேறிப் பொலிந்தது
நீத்த நீணிலா வீழ்ந்தது நின்றனன்
தோற்ற நற்பகற் சூறைகொண் டிட்டதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 15. காணாமற்கண்ட களிப்பு.

அருட்கடைக் கண்ணா லிம்மை யல்லலாங் கடற்கு ளாகும்
வெறுப்பெனுங் கடலு நீந்தி யாகமக் கடலும் விட்டுப்
பொறுப்பதாங் கடலு நீந்தி யன்பாழி புகுந்து ஞானத்
திருக்கட னீந்தி யின்பத் தேயத்திற் றலைப்பட் டேனே. (௧)

திருவருட் கண்ணா னீப்புச் சிந்துரக் களிறொன் றேறிக்
கருவற வீசு ஞானக் கத்திகைக் கொண்டு சும்மா
விருண்மல மூன்றும் வீசி யெங்கணும் வெளியா நிற்கு
மருளுல கண்மி யின்பத் தேயத்தை யடைந்திட் டேனே. (௨)

மயலறு மருளின் கண்ணான் மயறருஞ் சீறார் நின்று
சயமுறு முறுதிப் பேரூர் தங்கியங் கிருந்து மெல்லச்
செயலறு நாட்டி லேய்ந்து திருவருட் பொருப்பி னேறி
நயமுறுந் தேனி ருட்டை நவித்துநா னக்கி னேனே. (௩)

உள்ளொளி தன்னா லுள்ளத் தோசையாஞ் சின்ன மூத
வெள்ளொளி விளக்க வெங்கும் வென்றகுத் தண்ணீர் வீசத்
தெள்ளிய வருட்டே ரேறிச் செய்யன்பு வடந்தொட் டீர்க்க
விள்ளரு மின்ப நாட்டோர் வீதியிற் றலைப்பட் டேனே. (௪)

தவாதுறும் பொறைத்தே ரோலுந் தண்ணளிப் புரவி யோலு
மவாவிறு முவாவி னோலு மையமில் பதாதி யோலுந்
திவாவிறு மொளியி னேல்கள் செற்றிடச் சிவந்தெழுந்த
சிவாதிர கசிய நாட்டைச் சேர்ந்தன னருட்கண் ணாலே. (௫)

காட்டினா லிம்மை வாழ்வு கடிந்துளக் கடலை வற்றி
யாட்டினா லாடொ ணாதே யளிந்தவொண் சுடரைப் பற்றிக்
கேட்டினாற் கெழுமு கின்ற கேளினை யடைந்து வையத்
தோட்டிலா திருக்கு மூரி னுற்றுவீற் றிருக்கின் றேனே. (௬)

அருளினா லருளைத் தேடி யன்பினா லழைத்திட் டாறி
வெருளுறு மருளைக் கண்டு விழுந்ததி னொளித்த தன்றிப்
பெருகிய கருணை வெள்ளம் பிடித்திழுத் தமிழ்த்தச் செய்த
பொருளினி னெழுந்து வீழ்ந்து போயதென் னுயிரு மம்மா. (௭)

கண்ணினாற் கண்ணு மந்தக் கண்ணினாற் கண்ணு மன்றிக்
கண்ணினாற் கண்ணு மந்தக் கண்ணினாற் கண்ணு மன்றிக்
கண்ணினாற் கண்ணு மந்தக் கண்ணினாற் கண்ணு மன்றிக்
கண்ணினாற் கண்ணு மந்தக் கண்ணினாற் கண்ணு ளேனே. (௮)

அவனரு டன்னுற் செய்த வவலமாம் வினையை நீக்கி
யுவமையி லாத மாயை தன்னையு மொறுத்திட் டுள்ளக்
கவலையை யீயு முள்ளக் கள்ளமு மழுக்கிக் கண்ணு
ளவனருள் பெருக்கி யின்பத் தயர்வர வமிழ்ந்தி னேனே. (கூ)

உள்ளரு டன்னு லூனு முற்றுணர் வினையுங் கண்டிட்
டுள்ளத்தை யொருக்கத் தக்க வுள்ளத்தை யருளால் வாங்கி
யுள்ளத்தை யொருக்கி யுள்ளத் தூடெழுந் துள்ள மாகி
யுள்ளத்தா லுள்ளொ ணாத வுள்ளமு முள்கி னேனே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 16. உதவிகொண்டொளிர்ந்த வுல்லாசம்.

பரிந்தவருளென்மேற் பண்புவைத்ததனு
லருந்தலாசையறப் பொருந்தலாசையற
வருந்துநோக்கமற வருளுமின்னியிட
விருந்துகண்டேனெம் மின்பவாழ்வினையே. (க)

தொடுங்கருணையினுற் சொலும்விடயங்களற்
றிடும்படிக்கென்னுளத் திருளதோவியிடக்
கடுங்கருணையொளி காட்டநானுவ
தொடுங்கிக்கண்டேனெம் முண்மைவாழ்வினையே. (உ)

சத்தருளென்மேற் றயவுவைத்ததனு
லத்தியொடுருகு மளிவுவந்தொளிரப்
பித்தனுகியிடப் பிண்டவண்டமிறச்
செத்துக்கண்டேனெஞ் செய்யவாழ்வினையே. (ந)

இன்னருளென்மே லிரக்கம்வைத்ததனு
லன்றிருண் மாயை யனைத்துமோவியிடத்
துன்றுமின்பவொளி துன்றிவந்தொளிர
நின்றுகண்டேனெம் நித்தவாழ்வினையே. (ச)

ஆய்ந்தவர்களுள மணைந்தொளிருமருட்
சேர்ந்தெளியேன்மேற் சிந்தைவைத்ததனுற்
காய்ந்தமாபிறவி கழிந்தழிந்துவிட
வோய்ந்துகண்டேனெம் முண்மைவாழ்வினையே. (ரு)

கூம்பிடாதவருட் கருணைகொண்டுலக
மோம்பிடாதவகைக் குண்மைதந்ததனாற்
றீம்பலாச்சுளையுஞ் சிந்தவேகனிந்து
சோம்பிக்கண்டேனெந் துய்யவாழ்வினையே. (சு)

துறந்தவர்களுளந் துன்னிநின்றொளிரும்
பெருங்கருணையென்மேற் பிறங்கநின்றமையாற்
கறங்கதாமுளமு நின்றுகாசினியை
மறந்துகண்டேனெம் வல்லவாழ்வினையே. (எ)

நோற்றபோக்கொளிரு மருணோக்கம்வைத்ததனாற்
பார்த்திடாதவகை பார்ப்பதுங்கிடைத்திட்
டீர்த்திடாதவகை யீர்ப்புவந்தெவையு
நீத்துக்கண்டேனெம் நித்தவாழ்வினையே. (அ)

திறங்குலாவுமருட் சிந்தைவைத்ததனாற்
புறம்பிதுள்ளிதெனப் பிறங்கல்பாறியிட
விறந்திடாதவரு ளெங்குநின்றொளிர
வுறங்கிக்கண்டேனெம் முண்மைவாழ்வினையே. (கூ)

உய்யுமாறருளு முவப்புவைத்ததனு
லையமும்மகல வன்புமேலதிடச்
செய்யபேரொளிக ளெங்கணுந்திகழப்
பையக்கண்டேனெம் பண்புவாழ்வினையே. (ம)

திருச்சிற்றம்பலம்.

## 17. சும்மா கண்ட சுகம்.

[இப்பதிகச்செய்யுட்களில் வெள்ள வென்பதன் முன் அருள் என்பதைக் கூட்டிப் பாடுக.]

செய்யிற்செய்யாதாய்த் தேடிற்றேடாதாய்க்
கையிற்கையாதாய்க் காணக்காணுதாய்ப்
பொய்யிற்பொய்யாதாய்ப் போகப்போகாதாய்
மெய்யிற்கண்டேனே வெள்ளவின்பினையே. (க)

உளங்கலக்காதா யுள்ளத்துள்ளாதாய்க்
களங்கமில்லாதாய்க் கம்பமொன்றுதாய்
வளங்குலாவியதாய் மாற்றொன்றில்லாதாய்
விளங்கக்கண்டேனே வெள்ளவின்பினையே. (உ)

தூண்டத்தோன்றாதாய்த் தோயத்தோயாதாய்க்
காண்டற்கொண்ணாதாய்க் காதற்கெட்டாதாய்த்
தீண்டற்கேயாதாய்ச் செல்லச்செல்லாதாய்
வேண்டிக்கண்டேனே வெள்ளவின்பினையே. (௩)

ஓட்டுக்கெட்டாதா யுண்மைக்குண்மையதாய்த்
தட்டிற்றட்டாதாய்த் தள்ளத்தள்ளாதாய்க்
கட்டிற்கிட்டாதாய்க் கட்டலோயாதாய்
விட்டுக் கண்டேனே வெள்ள வின்பினையே. (௪)

தொலையிற்றுன்னாதாய்ச் சொல்லிற்சொல்லாதாய்
நிலையினில்லாதாய் நிற்குநிற்பதுவாய்
வலையிற்சிக்குவதாய் வலையிற்சிக்காதாய்
மெலிவிற்கண்டேனே வெள்ளவின்பினையே. (௫)

இன்னற்கின்னாதா யென்னிற்றுன்னாதா
யென்னைக்கொல்லுமிடத் தெண்ணற்கொண்ணாதாய்த்
தின்னத்தின்னாதாய்த் தின்னிற்றின்பதுவாய்
மின்னிற்கண்டேனே வெள்ளவின்பினையே. (௬)

பழிச்சுக்கெட்டாதாய்ப் பார்க்கப்பாராதா
யொழிக்குமுள்ளத்து ளொளிக்குமுண்மையதாய்த்
தெழித்தல்விட்டாரைத் தேடற்கெய்துவதாய்
விழித்துக்கண்டேனே வெள்ளவின்பினையே. (௭)

தரையிற்றுன்னாதாய்த் தானமில்லாதாய்க்
கரையக்கூடாதாய்க் காயமில்லாதா
யிரையச்செய்வதுவா யிரையைச்செய்யாதா
விரையக்கண்டேனே வெள்ளவின்பினையே. (௮)

தாவத்தாவாதாய்த் தாழத்தாழ்வதுவாய்
வேவச்செய்யாதாய் வேவச்செய்வதுவாய்த்
தூவத்துன்னாதாய்த் தூய்மைச்சோதியதாய்
மேவிக்கண்டேனே வெள்ளவின்பினையே. (௯)

எல்லைக்கொல்லாதா யிச்சைக்கில்லாதா
யொல்லைக்குள்ளாகி யோயப்போகாதா
யில்லைக்கில்லாதா யேழைக்கெய்துவதாய்
மெல்லக்கண்டேனே வெள்ளவின்பினையே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 18. பேரின்பங் கண்டு பெருகல்.

உண்டி டாம லூறுமுள் ளமுதினைப்
பண்டு கண்டறி யாவருட் பண்பினை
யெண்டி சைபுக ழேரகத் தண்ணலைக்
கண்டு கண்டு குளிருமென் கண்களே. (௧)

உள்ளி யுள்ளி யுருகு பவருளம்
வெள்ள மாகிய மெய்யினைப் பொய்யினை
யெள்ளு வார்மகி ழேரகத் தண்ணலை
யள்ளி யுண்டங் கவிழ்ந்ததென் சிந்தையே. (௨)

பார்வை யற்றிடும் பார்வையிற் பட்டதை
யோர்வை யற்றிடு மோர்வி லுறுவதை
யேர்மி குத்தொளி ரேரகத் தண்ணலை
வாரி வைத்துண் மகிழ்ந்ததென் சிந்தையே. (௩)

நன்று நன்றெனு நாவி லுறுவமு
தொன்றை யண்ட ருணுவமு தத்தினை
யென்று நின்றிடு மேரகத் தண்ணலைத்
தின்று தின்றுதித் திக்குமென் சிந்தையே. (௪)

பேத மற்றுப் பிறங்கும் பொருளினை
யாதி யற்றங் கமரருட் டேனினை
யேத மற்றொளி ரேரகத் தண்ணலைக்
காத லுற்றுக் கலக்கந் தெளிந்ததே. (௫)

தவப்ப யன்றனைத் தண்ணினைத் தாரணி
யவப்ப யன்னணை யாம லணைவதை
யெவர்க்கு மன்பரு ளேரகத் தண்ணலை
யுவப்ப வென்னுள முற்றதுல் லாசமே. (௬)

உதைய மின்றி யுதையஞ்செய் தேவரு
முதிய சூரிய னுயிருண் மோதியே
யிதையம் வந்தொளி ரேரகத் தண்ணலைத்
துதைய வின்பந் துதைந்ததென் னுள்ளமே. (௭)

தாணு வாய்த்தழை யாமற் றழைப்பதைத்
தோணி யாயருட் டுய்கரை சேர்ப்பதை
யேணி போகிய வேரகத் தண்ணலைக்
காணக் காணக் கவலை கழிந்ததே. (௮)

நாடிக் காண வரிய நலத்தினைத்
தேடித் தேடித் தெரியாத் தெளிவினை
யேடப் பேயிறு மேரகத் தண்ணலை
யோடிக் கண்டு விழுந்துயர் டோயதே. (கூ)

தீர்த்த னுந்தெளி யாத தெளிவினைக்
கூர்த்த வன்பருட் கொண்டசெந் தேனினை
யீர்த்த பார்வைவா ழேரகத் தண்ணலைப்
பார்த்து நான்செத்த பாழைப் பறைவதே. (எ)

திருச்சிற்றம்பலம்.

## 19. வேறறக் கலந்து வீற்றிருத்தல்.

ஊனாகு முயிரொப்ப வுயிராகு முடலொப்ப
வானாகும் வளியொப்ப வளியாகும் வானொப்ப
நானாகு மெனையுள்ள நானாகப் பணியன்றி
நானாக மிறுமறிவு தானாக நயந்ததுவே. (க)

ஒளியாகு மொளியொப்ப வொளியாகு மொளியொப்ப
வெளியாகு மொளியொப்ப வொளியாகும் வெளியொப்ப
வொளியாகா வொளிக்குளுறு மொளியாக வொளிர்கின்ற
நளிராகு மறிவென்னைத் தானாக நயந்ததுவே. (உ)

இருளாகு மிருளொப்ப விருளாகு மிருளொப்பப்
பொருளாகும் பொருளொப்பப் பொருளாகும் பொருளொப்ப
வருளாகி யருளாகி யருளாகி யருளாகி
நரியாத வறிவென்னைத் தானாக நயந்ததுவே. (ங)

தேனாகுஞ் சுவையொப்பச் சுவையாகுந் தேனொப்ப
நானாகு நானொப்ப நானாகு நானொப்ப
வானாகி வானாகி வானாகி வானாகி
நானாக வறிவென்னைத் தானாக நயந்ததுவே. (ச)

வெளியாகும் வெளியொப்ப வெளியாகும் வெளியொப்பக்
களியாகு முளமொப்ப வுளமாகுங் களியொப்ப
வொளியாகி யொளியாகி யொளியாகி யொளியாகி
நளிராகு மறிவென்னைத் தானாக நயந்ததுவே. (ரு)

நாடாகு நாடொப்ப நாடாகு நாடொப்ப
வேடாகும் பூவொப்பப் பூவாகு மேடொப்ப
வீடாகி வீடாகி வீடாகி வீடாகி
நாடாத வறிவென்னைத் தானாக நயந்ததுவே. (௬)

உளமாகு முளமொப்ப வுளமாகு முளமொப்ப
வளமாகும் வளமொப்ப வளமாகும் வளமொப்ப
வளியாகி யளியாகி யளியாகி யளியாகி
நளிராகு மறிவென்னைத் தானாக நயந்ததுவே. (௭)

திதியாகுந் திதியொப்பத் திதியாகுந் திதியொப்ப
விதியாகும் விதியொப்ப விதியாகும் விதியொப்ப
மதியாகி மதியாகி மதியாகி மதியாகி
நதியாகு மறிவென்னைத் தானாக நயந்ததுவே. (அ)

துதியாகு மிழிவொப்ப விழிவாகுந் துதியொப்பப்
புதிதாகும் பழைதொப்பப் பழைதாகும் புதிதொப்பக்
கதியாகிக் கதியாகிக் கதியாகிக் கதியாகி
நதியாகு மறிவென்னைத் தானாக நயந்ததுவே. (௯)

இளியாகு மிசையொப்ப விசையாகு மிளியொப்பத்
தெளிவாகுந் தெளிவொப்பத் தெளிவாகுந் தெளிவொப்ப
வெளியாகி வெளியாகி வெளியாகி வெளியாகி
நளிராகு மறிவென்னைத் தானாக நயந்ததுவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 20. தன்னையறிந்து தலைவனை மறுத்தல்.

தடையா ணவமாஞ் சமுத்திரத்தின் வீழ்ந்து
விடையாழி வீழ்ந்தேனை மேல்விழுந்து வாரித்
தடமா மருளாழி தனிற்போட்டி டானைக்
கடையேன் மறக்கக் கணக்கேது காணே. (௧)

பொய்யாகு மலையேறிப் போதவிளை யாடி
மையாரும் விழியார்தோண் மலையின்விழு வேனைச்
செய்யாமற் செய்ததிரு வருண்மலைவைத் தானை
யெய்யாம னினைந்துருகி யிறைஞ்சன்மறந் தேனே. (௨)

காணாத சினமேடை யேறிவிளை யாடி
மாணாத மனமேடை வாடிவிழ வேனைப்
பேணாத வருண்மேடை பேணிவதிந் தானைக்
கோணாமற் கொடுத்துள்ளங் கொள்ளலுமற் றேனே. (ந)

போகாத பெருமானப் பூமிசையி னடந்திட்
டாகாத பார்வையிற்பட் டகநடந்திட் டேனைச்
சாகாத தலநடத்தித் தண்ணருள்வைத் தானை
நோகாம னினைத்துள்ள நோக்கன்மறந் தேனே. (ச)

தீராத மனவழுக்காஞ் செந்தீயி னேறி
யாராத செவியினிடை யலைந்தேறி னேனைப்
பாராமற் பார்க்குமருட் பாடேற்றி னானைத்
தீராம னினைப்பதுவுஞ் சிந்தைமறந் தேனே. (ரு)

இல்லாமை மறுகினிடை யிருந்துவிளை யாடிப்
பொல்லாத நாவினிடைப் புகுந்திருந்திட் டேனைக்
கல்லாமற் கற்கவரு கண்ணிருத்தி னானை
நில்லாம னின்றுள்ள நினைப்பதுபோ னேனே. (சு)

ஒப்பாரென் றேற்குரைக்கு முப்பரிகை நின்று
கைப்பாகுந் தோற்பரிச கண்ணினிற் பேனை
நிற்பாரை வீழ்த்தள்ளு மருணிறுத்தி னானை
வைப்பாகு மென்றிருந்த மதியைமறந் தேனே. (எ)

ஆறாத சங்கற்ப வாற்றிலலைந் தலைந்திட்
டூறாத மூக்கினிடை யகப்பட்டலைந் தேனை
மாறாத வருள்வீதி வந்தலைத்திட் டானைத்
தேறாமற் றேறியிடுஞ் சிந்தையுமற் றேனே. (அ)

அகலாத சந்தேக வாற்றினிடை யோடி
யிகலாருங் கலக்கநெறி யினிதோடி னேனை
யகலாத வருட்பொதும்பி னடித்தோட்டி னானைப்
புகலாமற் புகல்வதுவும் போக்கினன்வா யிடையே. (கூ)

கசியாத வுளவீதி கனன்றுதுளைந் தாடிச்
சுசிதீரும் பகைவீதி துளைந்தாடி னேனைச்
சுசியீந்திட் டருளீந்து துளைந்தாடென் றானைக்
கசியாமற் கசிந்துள்ளங் காண்பதுமற் றேனே. (ம)

திருச்சிற்றம்பலம்.

—oo✥oo—

## 21. ஏழைக்கிரங்கி யின்பாதல்.

எத்தினா னென்றல்ல விளகியுளங் குழைந்துகண்ணீ
ரூற்றினா னென்றல்ல வொருப்பட்டா னென்றல்ல
மாற்றிலா வீசன் மகிழ்ந்திவனுக் கருட்கடைக்கண்
சாத்தினே மென்றென்னைத் தண்ணருளின் வைத்ததுவே. (௧)

பட்டா னென்றல்ல பறந்தா னென்றல்ல
விட்டா னென்றல்ல வெருவினா னென்றல்ல
கிட்டாத வீசன் கிருபைவைத்து நாமிவனைத்
தொட்டேமென் றெண்ணியெனைத் தூயவருள் வைத்ததுவே. (௨)

கற்றா னென்றல்லக் கருதினா னென்றல்ல
வுற்றா னென்றல்ல வுறங்கினா னென்றல்ல
பற்றிலா வீசன் மகிழ்ந்திவனைப் பற்றியன்பு
வைத்தேமென் றெண்ணியெற்கு வானமுத மீந்ததுவே. (௩)

காத்தா னென்றல்ல கரும்புளக மாம்போர்வை
போர்த்தா னென்றல்ல புலம்பினா னென்றல்ல
வீர்த்தாளா மீச னிரங்கியிவன் றனைமறந்து
பார்த்தாமென் றெண்ணியெற்கு பண்பமுத மூட்டியதே. (௪)

நுனித்தா னென்றல்ல நுணங்கினா னென்றல்ல
தனித்தா னென்றல்ல தளர்ந்திட்டா னென்றல்ல
வினித்தா னீச னிரங்கியிவன் றன்னையுள்ள
நினைத்தேமென் றெண்ணியெற்கு நெஞ்சந் துறந்ததுவே. (௫)

எள்கினா னிவ்வுலக மென்றல்ல தன்னையுற
வெள்கினா னென்றல்ல மெய்மறந்தா னென்றல்ல
வுள்கிலா வீச னுகந்திவனை யொருபொருளா
யுள்கினே மென்றெற்கே யுன்னன்மறப் போட்டியதே. (௬)

ஒளித்தான் புலங்களுக்கென் றல்லவுள் ளன்பாழி
குளித்தா னென்றல்ல குறுகினா னென்றல்ல
வளித்தாளா மீச னகமகிழ்ந்திங் கிவனையுற
வளித்தேமென் றெண்ணியெற்கே யருளமுத மூட்டியதே. (௭)

நின்றா னென்றல்ல நிறுத்தியிடு முன்னினைவு
கொன்றா னென்றல்ல குலவினா னென்றல்ல
நின்றாளா மீச னேடியு முட்கொண்டே
மென்றெண்ணி யெற்கே குணக்குன் றளித்ததுவே. (௮)

கொய்தா னுளத்திமிற லென்றல்ல குலமறைந்திட்
டெய்தா னென்றல்ல விளைந்திட்டா னென்றல்ல
பொய்தீரு மீசன் மகிழ்ந்திவனைப் புல்கவருள்
செய்தேமென் றெண்ணியெற்குத் தித்திப் பளிப்பதுவே. (௬)

தருவினு னென்றல்ல சொல்லரிய மெய்யன்பு
பெருகினு னென்றல்ல பின்னிட்டா னென்றல்ல
வுருவில்லா வீசன் மகிழ்ந்திவனை யோர்பொழுது
சருவினே மென்றெண்ணித் தாங்காமற் றூங்கியதே. (௭)

திருச்சிற்றம்பலம்.

## 22. திருவருட் செந்தேன்.

பத்திக்கு மன்புக்கும் பகலோ டிரவுன்னும்
புத்திக்கும் பித்துக்கும் புளகிதங்கொண் டுள்ளுலவுஞ்
சத்திக்குஞ் சுத்திக்குந் தப்பித்தன் ஞேடொளிருந்
துத்திக்கும் பாதமுமென் சிந்தைக் கினியததுவே. (௧)

ஊனுெழுகு மூரு முணர்வொழுகும் பேருரு
நானுெழுகு நல்லூரு நல்லருட்ட நண்ணுவித்துக்
கூனுெழுகி யெங்குங் குதித்துப் பரந்தொளிர்ந்து
தேனுெழுகும் பாதமுமென் சிந்தைக் கினியததுவே. (௨)

உளைந்தெழுந்த துன்பமெலா மோடியிட மாயைதனிற்
றுளைந்தெழுந்த வின்பமெலாஞ் சோர்ந்துவிட மெய்யன்பு
விளைந்தெழுந்திட் டுட்பொறைகள் விட்டோட வுளமின்னித்
தெளிந்த செந்தேன் பாதமுமென் சிந்தைக் கினியததுவே. (௩)

திருச்சிற்றம்பலம்.

## 23. ஆட்பட்டடைந்த வருள்.

இன்னல்கெடத் தேயமெலா மெவ்வுயிர்க்குந் தாயாகு
மன்னராய் நின்று மதிமயங்கி வாடாமற்
றன்னை யறக்கெடுக்குஞ் சங்கரனுர்க் காளாகித்
தன்னைமறந் துன்னரிய தண்ணுலகஞ் சார்ந்தோமே. (௧)

இருளை யறக்கெடுத்திட் டெவ்வுயிர்க்கு மின்பீயு
மருணனுய்க் கற்சூழ்ந் தலைந்துலைந்திட் டெய்யாமற்
றெருணயமெ லாமுதவுஞ் செஞ்சடையார்க் காளாகி
யருணயமா மாழிவீழ்ந் தமுதினைய மானேமே. (௨)

தண்ணளியிய்க் துயிர்போற்றுஞ் சந்திரன்போற் றேயாமல்
விண்ணுலக மாளும் விபுதரோ டொவ்வாமற்
கண்ணுதலுக் காளாகிக் காசினி யெலாமறந்து
பண்ணெழுகும் பேரின்பப் பாராண் டிருந்தேமே. (௩)

சுந்தரமும் வாழ்வுஞ் சுகமுநமக் கேயுண்டென்
றிந்திரனுய் மேனியெலா மியோனிபரந் தெய்யாமற்
சுந்தரத்திற் சுந்தரங்கொள் கண்ணுதலுக் காளாகி
யந்திரத்தின் வாழ்வுமருட் டன்னை யணைந்தோமே. (௪)

சிருட்டியெலா மெற்கு வருமென்று திறம்பேசி
வெருட்டி மதிமயங்கி மேதினியின் வாடாம
லருட்டியெலா மோட்டு மருட்பொருப்பி னேறியே
மருட்டும் புலனீயை மாற்றித்தே னுண்டோமே. (௫)

அரிபோலப் பத்துப் பவமெடுத்திட் டாழாம
லெரிபோலக் கையொன் றிழந்துபுவி யேயாமற்
றெரியாத தெரிவருளுஞ் செஞ்சடையார்க் காளாகிப்
பிரியாப் பெருங்கருணைப் பேராறு பெற்றோமே. (௬)

மால்வாழ்வும் வேதியன் வாழ்வுமதி யேமென்று
சாலோகப் பொன்விலங்கிற் றுனமுங்கி நையாமற்
காலாதி தீர்க்கின்ற கண்ணுதலுக் காளாகி
மேலான பேரின்ப மேடைதனி லுற்றோமே. (௭)

கோமானை நித்தங் குறுகினோ மென்றெண்ணிச்
சாமீபப் பொன்விலங்கிற் றுனமுங்கி நையாம
லாமேன் மிகவொளிரு மண்ணறனக் காளாகி
நாமா னதுதீர்க்கு நல்லின்ப மேய்ந்தோமே. (௮)

மாரூப மெல்லாமு மாற்றினே மென்றெண்ணிச்
சாரூபப் பொன்விலங்கிற் றுனமுங்கி நையாமற்
காராருங் கண்டனுக்குக் காதல் பெருக்கியே
யாராலுங் காண்பரிய வானந்தம் பெற்றோமே. (௯)

உருத்திரனு மீசனு முண்மைச் சதாசிவனும்
வருத்தமுற்றுத் தற்றொழிலின் வாடித் தவியாமற்
கருத்தழியச் செய்தருளுங் கண்ணுதலுக் காளாகிக்
கருத்தழிந்திட் டின்பத்தைக் காணுமற் கண்டனமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 24. உள்ளி யெழுந்த வுல்லாசம்.

அன்னையு மாயுயிருக் கத்தனு மாகியுளே
பின்னையும் பேரமுதா மருட்பேரொளி யானையுன்னித்
தன்னை மறந்ததுபோய்த் தன்னை யறிந்ததுபோய்த்
தன்னை யறிந்ததும்போய்த் தன்னை யிழந்ததுவே. (௧)

உரிய தினும்முரிய னொளிய தினும்மொளியன்
பெரிய தினும்பெரிய னருட்பேரொளி யானையுன்னி
யிருமை யறிந்ததன்றி யிருமை யிகந்துவிடு
மருமை யறிந்ததன்றி யவ்வருமை யிகந்ததுவே. (௨)

எண்ண வரியவெணு யிறந்தவருக் கமுதாய
பெண்ணலி யாணுமலா வருட்பேரொளி யானையுன்னிக்
கண்ணுந் தெரிந்தருளின் கண்ணி னிருந்தமுதத்
தண்ணையு முண்டுகொலோ தன்னை மறந்ததுவே. (௩)

கோதி லமுதனருட் குன்றன் குணாதீதன்
பீதி யிகந்தொளிரு மருட்பேரொளி யானையுன்னி
நீதி யிறந்தழியு நெஞ்சி லமுதூறி
தாதி யெனநடனந் தானு நிகழ்ந்ததுவே. (௪)

காதல் காதலொடு முயிர்காக்குங் கருணையினாற்
பேதைமை தீர்ந்தொளிரு மருட்பேரொளி யானையுன்னித்
தீது மறந்ததன்றி தெருட்ட வரியதொரு
சோதி மறந்தறியாச் சூழ்ச்சி பிறந்ததுவே. (௫)

ஆசில் கருணையினா னுளத்தண்மிய மாதுறைவான்
பேச வரியவனா மருட்பேரொளி யானையுன்னி
யூசல் படுமனம்போ யென்றுமோதரு நானுற்ற
தேச முதமுவந்தென் சிந்தை கலந்ததுவே. (௬)

காணமிக வரியனன்றிக் கண்டவரை யூணாய
பேணு மெளியனருட் பேரொளி யானையுன்னி
நாண மிழந்தொளிரு நாத மிழந்திரண்டு
தாணு விடந்தருளி தாணு விழந்ததுவே. (௭)

துணையு முறுமலுறுந் துணிவு முறுமலுறும்
பிணையு மறுமலறு மருட்பேரொளி யானையுன்னி
நணவரி தாயதுவு நணவரி தாயதுவு
நணவரி தாயதுவு நணவெளி தாயதுவே. (௮)

கரியதி னுங்கரியுங் கனிவதி னுங்கனிவும்
பிரிவதி னும்பிரியா வருட்பேரொளி யானையுன்னி
யரியதி னும்மரிது மளிவதி னும்மளிவுந்
தெரிவதி னுந்தெரிவுந் திரண்டதென் சிந்தையினே. (௯)

வரமும் வரமதுவாய் வழங்கும் வழக்கமுமாம்
பிரமனு மாலுமுறு வருட்பேரொளி யானையுன்னி
யுரமு முரத்தினுறு மொளியு மொளிக்குளுறும்
பரமும் பரத்தினுறும் பதியுங் கிடைத்ததுவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 25. இன்பங்கண் டிரங்கல்.

பரியாப் பரிவதனைப் பாரமறப் பார்ப்பவர்க
ளறியா தறிவதனை யருளுலகக் கட்டியினைத்
தெரியாத் தெரிவதனைச் சிந்தியாச் சிந்திப்ப
நரியாத நல்லன்பா னுடிக்கண் டுய்ந்தேனே. (௧)

ஒல்லை யுடைப்பதனை யொல்லாம லொல்லதனை
யல்ல லறுப்பதனை யழியாப் பெரும்பயனை
யில்லையுல கென்பவருக் குள்ள வெழிற்பொருளை
நல்லவெளி நல்லன்பா னுடிக்கண் டுய்ந்தேனே. (௨)

நானறிந்து நானறிந்து நானழிய நிற்பவருக்
கூனுடைந்திட் டுயிருடைந்திட் டுளமுடைந்திட் டுள்ளொளியூர்
தானடைந்து தேனுதவுந் தாயகத்தை யாயாம
னுனறியா நல்லன்பா னுடிக்கண் டுய்ந்தேனே. (௩)

கண்டான் மறைவதனைக் கண்டாற் றெரிவதனைக்
கண்டாரைக் காட்டாதைக் கண்டதுவுங் காணுதைக்
கண்டாருங் காண்பதுவுங் காணுத காட்சியினை
நன்ருரு நல்லன்பா னுடிக்கண் டுய்ந்தேனே. (௪)

செத்தாரைத் தின்பதனைச் செத்தால் வருவதனைச்
செத்தார்க்குச் சாகாத சித்தியினைச் சாகாமற்
செத்தார்க்குச் சாகாத்தைச் செத்தாரைச் செத்ததுவை
நத்தாரு நல்லன்பா னுடிக்கண் டுய்ந்தேனே. (௫)

நின்று விருப்பதனை நில்லாக்கா னீங்குவதை
நின்றார் நினைவினெழு நீதி யொளியமுதை
நின்றாரு நிற்பதுவு நில்லாம னிற்பதுவை
நின்றாரு நல்லன்பா னடிக்கண் டுய்ந்தேனே. (௬)

காண வரியதனைக் காணாமற் காண்பதனைக்
காணாமற் காண்பவரைக் காணாமற் காண்பதுவைக்
காணாத கண்போகக் காணக்கண் ணுள்ளதுவை
நாணாரு நல்லன்பா னடிக்கண் டுய்ந்தேனே. (௭)

உள்ளமாய் நிற்பதனை யுள்ளமறி விப்பதனை
உள்ள முடைப்பதனை யுள்ளமாய் நிற்பதனை
உள்ளந் தெரிந்துள்ள மொளித்துள்ள மாவதனை
நள்ளாரு நல்லன்பா னடிக்கண் டுய்ந்தேனே. (௮)

பொய்யிற் புணர்ந்திருந்தும் பொய்புணராப் பொற்சுனையை
பொய்யைப்போய் யாயுணர்வார் பொய்யை யுடைப்பதனைப்
பொய்யிற்போய் பொய்யிற்போய் பொய்யிற்போய் யாவருனை
நையாத நல்லன்பா னடிக்கண் டுய்ந்தேனே. (௯)

ஆனந்த மாமுலக மானந்தீர்ந் திருப்பவருக்
கானந்தப் புளகிதமு மானந்தக் கண்ணீரு
மானந்த வருளுமுற வானந்த மாவதுவை
நானந்து நல்லன்பா னடிக்கண் டுய்ந்தேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 26. காட்டக் கண்ட கருணை.

விண்டுநின் றேனேயிந்த மேதினி வாழ்வையெலாங்
கண்டுகொண் டேனேயருட் கண்ணுத லரனாலே. (௧)

ஓட்டிவிட் டேயிந்த வூனுயிர் வாழ்வையெலா
மாட்டிக்கொண் டேனேயருண் மங்கையோர் பங்காலே. (௨)

தணந்துநின் றேனேயிந்தத் தாரணி வாழ்வையெலா
மணந்துகொண் டேனேயரு ளம்பிகை பங்காலே. (௩)

தூர்த்துநின் றேனேயிந்தத் தொல்லுல கமியாவும்
பார்த்துநின் றேனேயருட் பாவையோர் பங்காலே. (௪)

கோணற்செத் தேனேயுள்ளங் கொண்டிடுங் கொள்கையர்தாங்
காணப்பெற் றேனேயருட் கண்ணுத லரனாலே. (ரு)

வேவக்கண் டேனேயுள்ளம் வேவவிருட் காடதெல்லாந்
தாவிக்கண் டேனேயருட் சங்கர னாலே (சு)

நீங்கிக்கொண் டேனேயிந்த நீவரு மைம்புலனைத்
தாங்கிக்கொண் டேனேயருட் சங்கர னாலே. (எ)

தானும்விண் டேனேயிந்தத் தாரணி பொய்தரலா
னுனுங்கண் டேனேயரு ளாரியோர் பங்காலே. (அ)

ஓடக்கண் டேனேயிந்த வுள்ளத் திருக்கதெலா
நாடிக்கண் டேனேயரு ளாரியோர் பங்காலே. (கூ)

திருந்தவிண் டேனேயிந்தச் சித்த விகாரமெலா
மிருந்துகண் டேனேயரு ளேழையோர் பங்காலே. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 27. அருட்பேற்றி னருமையறிந்து அதிசயித்தல்.

விண்ணுலகு மண்ணுலகு மெவ்வுலகும் விளங்கின்
மித்தையாம் பேய்த்தேரை யொத்ததென வுடைத்துத்
தண்ணொளிரும் வெண்ணிலவ தென்னவெளி கண்டே
தரித்ததனை மறவாம லிருத்தியிடும் பொழுதிற்
புண்ணுலவி மின்னுடலப் போதினூ றிக்கதியாம்
புதியவொளி யதிசயமாய்ப் பொங்கி யுளத்தெங்குங்
கண்ணொளியைப் பொன்னினொளி கலந்ததென வென்கண்
கலந்தொளிரு மின்பசுகங் கண்டறிவா ரியாரே. (க)

உள்ளங்க ளுருகியிடக் கள்ளங்கள் பறிய
வுரோமங்கள் சிலிர்த்துலவத் தாகங்கண் மலிய
கள்ளங்க விழிமிசையின் வெள்ளங்கள் பொழியக்
கருத்தசையா வணமங்க ணிருத்தியிடும் பொழுதி
னுள்ளங்க ளொழியவென துள்ளங்க ளெங்கு
முள்ளங்க ளாகியென துள்ளங்கண் மறையக்
கொள்ளங்க மில்லாத நல்லங்க வின்பங்
கொண்டொளிரு மெனதுளத்திற் கண்டறிவா ரியாரே. (உ)

உறவாடு பந்தத்துட் டுறவாழி யெறிந்திட்
டுண்மைதருங் குரவனடி வண்மையொடும் பணிந்து
விறலாரும் பதியாதி திறலார நினைந்து
விருத்தியற வுண்ணினைவை யிருத்தியிடும் பொழுதிற்
பிறவாழி தனையேந்து மிருளாழி யதனுட்
பிரியாத வருளாழி விரைவோடு மிளிர
நறவாரு மமுதாழி யிறவாம லென்க
ணண்ணியிடு முண்ணினைந்து நண்ணிடுவா ரியாரே. (௩)

அனித்தியமா மாழிதனி னித்தியநா வாயி
லணைந்தேறி யருட்டீவை நினைந்துசெல வாங்கே
தனித்தலறுந் தனிச்சில்லந் தட்டாம லொட்டிச்
சரித்தலற வுண்ணினைவை யிருத்தியிடும் பொழுதி
லனைத்துயிருக் குயிராகி யனைத்துயிரு மாகி
யனைத்துலகுக் குயிராகி யனைத்துலகு மாகி
யனைத்தினையு முணருமரு ளெனக்குள்வெளி யாகி
யண்மியிடு முண்மையொடு மறிபவர்க ளியாரே. (௪)

தூலாதி நானல்ல காலாதி யல்ல
துன்பங்க ளுனல்ல வின்பங்க ளல்ல
மேலாகு மறிவென்றே மேலாகி நின்று
விருத்தமற வுண்ணினைவை யிருத்தியிடும் பொழுதிற்
காலாதி தானகல மேலாகி நிற்குங்
காரணமா யுள்ளெங்கும் பூரணமாய்க் கலந்து
பாலாழி யமுதத்தைக் கேலிபணித் துறந்து
படிந்தொளிரு மென்னுளத்திற் றொடர்ந்தறிவா ரியாரே. (௫)

ஆசைபய மாவதெலா நேசமற வீசி
யையங்க ளாவதெலா மையங்க ளென்றே
பேசுமுரை யாவதெலா மாசதென விடுத்துப்
பிரிந்தோவா துண்ணினைவை யிருத்தியிடும் பொழுதின்
வாசமொடு பேரொளியோ டாசையொடு பெருகி
வந்துவந்து தாக்கியிடுஞ் சுந்தரமு மாகி
மாசணுகா வின்பமுமாய்ப் பேசவரி தாகி
வந்தொளிரு மென்னுளத்திற் சென்றறிவா ரியாரே. (௬)

ஆதார மாறுநி ராதார மாக்கி
யப்பாலு முள்ளதெலா மிப்பாலென் றெண்ணி
மாதான மாகியதோர் நாதாந்த நாடி
வருத்தமற வுண்ணினைவை யிருத்தியிடும் பொழுதி

ளேதாம லோதுவதாய் வாதாந்த மதுவா
யொழியாத வருளாகி யழியாத பொருளாய்க்
கோதாட வேகிமு மாதனென்ற னுளத்திற்
குதித்துலவி மிகுத்தமரு மதித்தறிவா ரியாரே. (எ)

பிறப்பாகுந் துன்பத்து மிறப்பாந்துன் பத்தும்
பெய்வளையார் துன்பத்தும் வையகத்துன் பத்து
மறப்பாகுந் துன்பத்தும் படப்படா தென்று
வருத்தமற வுண்ணினைவை யிருத்தியிடும் பொழுதின்
மறப்பாகு மறப்பதனி னுறற்பால தாகி
வாராத செல்வங்கள் வாராமல் வந்து
வெறுப்போட விருப்போட விருப்போட வென்கண்
விளைந்துலவு ளளைந்ததனைத் துளைந்துணர்வா ரியாரே. (அ)

உண்டதெலா மொழிந்துவிடுங் கண்டதெலாங் கழியு
முற்றதெலா மிற்றுவிடுங் கற்றதெலா மிரியும்
விண்டதெலாம் விண்டுவிடு மென்றெண்ணிக் கொண்டு
விரித்தலற வுண்ணினைவை யிருத்தியிடும் பொழுதிற்
பண்டைமறை களுமிரிய வெண்டிசையு மிரியப்
பலசமய மாவதெலா நிலைகுலைந்திட் டிரிய
வண்டர்முத லைவர்களுங் கண்டறிய வரிதா
யமைந்தெழுமெ னுளத்தினமு தமைந்துணர்வா ரியாரே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

## 28. உதவியை இயல்பாய் உணர்தல்.

அந்தரத்திற் செந்தேனை யந்தரத்தி லேபிழுத்துத்
தந்தவனைக் காணாத தவிப்பென்னைச் சாராதே. (க)

மாய்ந்திடத்தின் மாயாமன் மாய்ந்தபொழு தூறிடுதே
னீந்தவெனைக் காண விடரென்னை யேயாதே. (உ)

வெளிற்றுமா மிரவு மின்னலென மின்னலுள
மளித்தவனைக் காண வனலென்னை யண்டாதே. (௩)

எடுத்தருளி னெற்றி யின்பாழி வீழ்த்திக்
கொடுத்தவனைக் காணக் கிலேசமெனைக் கிட்டாதே. (ச)

படுத்தெழுந்து விடுத்தயர்ந்து பற்றியிடுஞ் செந்தேன்
கொடுத்தவனைக் காணுக் கொடுமையெனைக் கொள்ளாதே. (ரு)

உற்றிட் டுருமு லுருமனுற்றுக் காண்பதுளந்
துற்றவனைக் காணுத் துயரமெனைத் தோயாதே. (சு)

கதியிற் கதியாகுங் கனிவைத் தனியான
வுதவியைக் காணு வுறுகணெனை யுன்னுதே. (எ)

உள்ளல்போ யுள்ளல்போ யுள்ளல்வீ ழவுமாழி
தள்ளிதனைக் காணுத் தறுகணெனைத் தட்டாதே. (அ)

எய்த்திருந்து செத்துவிழ வெய்தியிடு மின்பத்தின்
வைத்தவனைக் காணு மயக்கமெனை மன்னுதே. (கூ)

வாட்டமின்றி வாடி மதியழிய வூருழி
போட்டவனைக் காணுப் புலம்பலெனைப் பூணுதே. (கo)

கருத்துநடந் தேதவழ்ந்து காணு திருந்தவிடத்
திருத்திதனைக் காணு விரக்கமெனை யேயாதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## 29. அருட்சுவை யருத்தியை யள்ளி யள்ளூறல்.

விழியாமல் விழித்தருளின் மேவாமன் மேவினு
ஞெழியாம லொழித்தின்ப முண்ணும லுண்டுடல்க
ளழியாம லழித்தெல்லா மாகாம லாகியருள்
பொழியாமற் பொழிபவரைப் போற்றுமற் போற்றேனே. (க)

கல்லாமற் கற்றுக் கனியாம லேகனிந்து
ணில்லாம னின்றருளே நேடாம னேடியபின்
சொல்லாமற் சொல்லரிய தொல்லுலகந் தோய்வதுவு
மில்லா திருப்பவரை யெய்தாம லெய்தேனே. (உ)

நையாம னைந்துள்ள நலியாம னலிந்தொன்றுஞ்
செய்யாமற் செய்தருளின் றேறுமற் றேறியபி
னெய்யாம லெய்த்தின்ப மெய்தாம லெய்தியன்பு
வையாமல் வைப்பவரை மதியாமன் மதியேனே. (ங)

உள்ளத்தைத் தானொருக்கி யுள்ளத்து ளொளியெழுப்பி
யுள்ளத்தி னுள்ளாக வொளித்திட்டின் பம்பொருந்தி
யுள்ளத்தை முன்னிட்டி டுள்ளத்தை மேலாக்கி
யுள்ளத்துள் ளிருப்பவரை யுள்ளாம லுள்ளேனே. (ச)

உருகாம லுருகியுளத் துன்னும லுன்னியிடப்
பெருகாமற் பெருகியிடும் பெருங்கருணைப் பேராற்றை
யருகாம லருகியதி னமுழ்ந்தாம லமுழ்ந்தியின்பம்
பருகாமற் பருகியரைப் பன்னுமற் பன்னேனே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 30. உதவியை நினைத்த வுல்லாசம்.

உருத்தனைப் பின்ன மில்லா தீந்தத னுள்ளே நல்ல
கருத்தினை யீந்து தன்னைக் காட்டுமா கமங்கள் காட்டித்
திருத்தின தல்லா வுள்ளச் சிலையையுங் குழையச் செய்த
வொருத்தனை யுள்ளத் தானை யுன்னுத லொழிந்த தென்னே. (க)

நம்மையுங் காட்டி நம்மு ணவிதலைச் செய்து நின்ற
வெம்மையு மடக்க ஞாய வீதியுந் தந்திட் டன்பின்
செம்மையாஞ் செங்கோ லீந்து திருவருட் டேய மீந்த
வுண்மையை யுள்ளத் தானை யுன்னுத லொழிந்த தென்னே. (உ)

கருவிரு ளறுத்துக் காணுக் காட்சியும் வழங்கு கின்ற
குருவருள் கொடுத்துத் தேராத் தேர்ச்சியைக் கொணர்ந்து வீசுந்
திருவருண் முகப்பி னெற்றித் தேனினைச் சொரிந்து நின்ற
வொருவனை யுள்ளத் தானை யுன்னுத லொழிந்த தென்னே. (ங)

நித்தியக் கவரி வீச நீதிவாத் தியங்க றங்கச்
சத்தியச் சிவிகை மீதிற் றண்ணருட் குடைநி ழற்றச்
செத்தறி செந்தேன் மாரி சிந்திட வருளிச் செய்த
வொத்தனை யுள்ளத் தானை யுன்னுத லொழிந்த தென்னே. (ச)

அவக்கான முரிக்கு நீப்பா மானையு மானை மீதிற்
பவக்கோடை தீர்க்கு ஞானப் பந்தரும் பந்தர் மீதிற்
சிவத்தேனை வாரி வீசுந் தென்றலு மருளிச் செய்த
வுவப்பானை யுள்ளத் தானை யுன்னுத லொழிந்த தென்னே. (ரு)

மெய்யினில் விதிர்ப்புங் கண்டம் விம்மலு மோட்ட மாடல்
செய்யலுங் கண்க டெண்ணீர் சிந்தலு மயிர்க ளியாவுந்
துய்யதாம் சவர்நி றத்தந் தோன்றலு மருளிச் செய்த
வுய்யல்செய் யுள்ளத் தானை யுன்னுத லொழிந்த தென்னே. (சு)

உள்ளிருட் பதுங்கி யோட வுள்ளன்ப தெழுந்திட் டாடக்
கள்ளவைம் புலன்பின் செல்லக் கனிவரு ளருள தாகுங்
கொள்ளைகைக் காட்ட வின்பக் கொள்ளைநா டணுகச் செய்த
வுள்ளிடா வுள்ளத் தானை யுன்னுத லொழிந்த தென்னே. (எ)

நீப்பாகு மாட மேறி நிலவியுப் பரிகை யன்பின்
வாய்ப்பாகு மருட்பொ ருப்பின் மன்னிச்செந் தேனை யுண்டு
மீட்பதி லாத வாழ்வை வீசியீந் திட்டான் றன்னை
யோர்த்திடா வுள்ளத் தானை யுன்னுத லொழிந்த தென்னே. (அ)

திருச்சிற்றம்பலம்.

## 31. தன்னை யமிழ்த்திய சல்லாப மருகா.

விதிர்ப்புறுங் கடலுந் தழுப்புறுங் கடலு
மெய்ச்சிலிர்ப் புப்பொழி கடலும்
விழிபொழி கடலு மழிமனக் கடலு
மெய்ந்நடுக் குற்றிடுங் கடலும்
பதைப்பருங் கடலுஞ் சோம்புறுங் கடலும்
பாரினை மறந்திடுங் கடலும்
பாழ்வெளி யொளிரத் தாழ்வுசெய் கடலும்
பார்வை போய்ப் பார்த்திடுங் கடலும்
மதுப்பொழி கடலைப் படுத்திடுங் கடலும்
மனக்களிப் புற்றிடுங் கடலும்
வாழ்ந்திடுங் கடலைப் பொழிந்திடுங் கடலும்
வாதனை போய்விடுங் கடலும்
நதிப்பெருக் கெனவே யுளப்பெருக் கெடுத்து
நாற்றிசை நீத்திடுங் கடலு
நண்ணிட வடியேன் றன்னுள மகிழ்ந்த
ஞானவா னந்தபூ ரணமே. (க)

தனைத்தெரி யாத தன்மையுந் தெரியத்
தானுமுண் டென்பதுந் தெரியத்
தனைத்தெரி யாமற் றெரிந்ததுந் தெரியத்
தனைத்தெரிந் திட்டதுந் தெரிய
நினைத்தெரி யாத நீதியிற் றெரிய
நீயுமுண் டென்பதுந் தெரிய
நினைத்தெரி யாமற் றெரிந்ததுந் தெரிய
நினைத்தெரிந் திட்டதுந் தெரிய
வெனைத்தெரி யாம விளகலு மறைய
விளகினே மென்பது மறைய
விளகலு ளொளிக ளெழுந்தது மறைய
வின்பம்வந் துற்றது மறைய
நனித்தலுஞ் செய்து மறைந்திட நீயு
நானும்போய் மறைந்திடு நாடு
நண்ணிட வடியேன் றன்னுள மகிழ்ந்த
ஞானவா னந்தபூ ரணமே. (உ)

தந்திரக் கலையு மந்திரக் கலையுந்
தனியுப தேசமாங் கலையைச்
சார்ந்தரு ளாசா னுணர்த்திட வுணர்ந்து
தன்னுரு வறிவெனத் தனித்துச்
சிந்தனைக் கடலின் விடயமாஞ் சுழியிற்
சிக்கிடா வணமரு ளுடைத்தாய்த்
தெள்ளமு தாழி யுள்ளுற வமிழ்த்தித்
திளைப்பதென் னுளத்தினுக் கேய
விந்தியப் பறவை யிறகினை யொடித்திட்
டிருண்மன வானையை யிடந்திட்
டிரவிநற் பகலா மவரவ ரிசைத்திட்
டெழுப்பிடுங் கருவியா முழுவை
நந்திடர் படைத்துப் பந்தனைப் பேய்க
ணண்ணிடா வணமுளத் தெழுந்த
ஞானமா மலையிற் றேனென மிளிரு
ஞானவா னந்தபூ ரணமே. (ந)

திருச்சிற்றம்பலம்.

## 32. தன்னைத் தின்ற தயவு.

வஞ்ச கத்தி னிமிர்ந்த மனத்தனை
நெஞ்ச கத்தினி னீதி நிசங்களை
யஞ்சொன் மாமறை ஞானக் குரவனு
ரஞ்ச லென்ற தருமைய தாகுமே. (க)

இருளி னித்த மிருந்த விழுதையைப்
பொருளி னித்தம் புகுந்த புலையனைக்
கருவ றுத்தருண் ஞானக் கடலனு
ரருளின் வைத்த தருமைய தாகுமே. (உ)

இணைத்துக் கொண்டங் கரிவையர் வாயிதழ்ப்
பிணைத்துக் கொண்ட பெருமருட் பித்தனைப்
பணைத்த வன்புடை ஞானப் பரமனு
ரணைத்துக் கொண்ட தருமைய தாகுமே. (ங)

தீது குத்திடும் வாயனைத் தீயதிற்
காது வைத்திடும் பாழுங் கருத்தனைக்
கோத றுத்தருண் ஞானக் குரவனு
ராத ரித்த தருமைய தாகுமே. (ச)

மடிகை கொண்டு மருண்டு வணங்கிடாக்
கடிமை கொண்ட கசட்டுக் கருத்தனைக்
குடிமை கொண்டருண் ஞானக் குரவனு
ரடிமை கொண்ட தருமைய தாகுமே. (ரு)

விடக்கை கொண்டு மெலிந்தது மன்றியே
விடக்கிற் சென்று விழுந்திடும் வீணனைக்
கொடுக்க வாங்கிய ஞானக் குரவனு
ரடக்கிக் கொண்ட தருமைய தாகுமே. (சு)

இங்கு வைத்திடு மேழையர் வாழ்வினிற்
பங்க முற்றுப் பரந்த கருத்தனைச்
சங்கை யிற்றிட ஞானத் தலைவனு
ரங்கு வைத்த தருமைய தாகுமே. (எ)

வன்பில் வைத்த மயக்கம் வளர்ந்துளந்
துன்பில் வைத்த துவந்துவப் பேயனை
நன்பி னற்கருண் ஞானத் தலைவனு
ரன்பில் வைத்த தருமைய தாகுமே. (அ)

மலைவ டுத்து மதியு மயங்கிய
நிலைய டுத்த நெருட்டுள நீசனைக்
கொலநி னைத்தருண் ஞானக் குரவனு
ரலைவ றுத்த தருமைய தாகுமே. (௬)

எப்பி றப்பையு மப்பனென் றெண்ணிய
துப்ப னுக்குத் துலங்கிய பேரரு
ணப்ப தாக்கிய ஞானத் தலைவனு
ரப்ப னுன தருமைய தாகுமே. (௭)

திருச்சிற்றம்பலம்.

## 33. விடயத்தைக் கைத்த வியப்பு.

மையலையு முடற்று மருள்வாழ்வினை யும்மளிக்கு
நையக முங்கொடுக்கும் பவனுச முறக்கெடுக்கும்
பொய்யினி னும்மிருக்கு முயிர்க்குள்ளொளிர் புண்ணியனு
மையனை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (௧)

எப்பிணி யும்மகற்று முளத்தெங்கு மிராதிருக்கும்
வைப்பன வுங்கடுக்கும் விழிநெற்றியின் வாய்த்திருக்கும்
பொய்ப்பகை யும்மிருக்கு முயிர்க்குள்ளொளிர் புண்ணியனு
மப்பனை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (௨)

கண்ண னுக் கும்மயற்குங் காண்பரி தாயிருக்கு
மெண்ணிய வன்பருக்குந் தமதெண்ண மிறந்திருக்கும்
புண்ணுட லும்மழிக்கு முயிருள்ளொளிர் புண்ணியனு
மண்ணலை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (௩)

சத்தி யுடனிருந்துந் தணவாது தணந்திருக்கு
நித்திய மாயிருக்கு நினையாநினை வும்மிருக்கும்
புத்தி கடந்திருக்கு முயிர்க்குள்ளொளிர் புண்ணியனு
மத்தனை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (௪)

இருளினை யும்மறிக்கு முளத்தெங்கு நிலாவெறிக்குந்
தெருளினை யும்மளிக்கும் வெறுந்தீநடை யோர்க் கொளிக்கும்
பொருளுரை யும்மடக்கு முயிர்க்குள்ளொளிர் புண்ணியனு
மருளனை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (௫)

கோதறு மன்புடனே யருட்டேனுங் கொணர்ந்துதருஞ்
சோதிநுந் தாச்சுடரா யன்பருள்ளந் துலங்கியிடும்
பூதி பொலிந்துவரு முயிர்க்குள்ளொளிர் புண்ணியனு
மாதியை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (சு)

நமதொடு நாமிறக்கு நலருள்ள நணித்திருக்கு
மமைதி பிறந்திருக்கு மன்பருள்ள மகிழ்ந்திருக்கும்
புமனரி யுங்கடக்கு முயிர்க்குள்ளொளிர் புண்ணியனு
மமுதினை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (எ)

சிரந்தனி னுஞ்சிரமுந் தெளிந்ததனி னுறுந்தெளிவும்
பரந்தனி னும்பரம்பொருளு மிருந்தபண்பு மிருக்கும்
புரந்தனை யுமெரிக்கு முயிர்க்குள்ளொளிர் புண்ணியனு
மரந்தனை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (அ)

துன்னியிடு மருளதனிற் றூங்குபவ ருளத்து
மின்னல்கெடுத் தருளுக்கே யேங்கிடுவா ருளத்தும்
பொன்னென நின்றிருக்கு முயிர்க்குள்ளொளிர் புண்ணியனு
மன்னையை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (கூ)

மடிகளொடு மானமுதல் வஞ்சனைநெஞ் சிருளுங்
கடிகளொடு மவாவழுக் காறொழியக் கசிந்திருக்கும்
புடைகளிலா வெவ்வுயிருக் குள்ளொளிர் புண்ணியனு
மடிகளை யுள்ளலன்றி யுளமாரையு முள்ளாதே. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 34. இருவினை கைத்த விடம்.

உளியுளி யிளகுள முள்ளாவர் களிமுகு முளமது கல்லாவர்
நளிர்மிகு மருண்மலை நல்லாறர் தளிரடி யெனதுளந் தள்ளாதே. (க)

அருளரு ளருளிய வையாற ரிருளிரு ளிரிசெயு மின்னுதர்
நரைமிகு மருளொளி நல்லாறர் குரைகழ லலதுளங் கொள்ளாதே. (உ)

கொதியது முதிருளங் கொல்லாதார் பதிபதி யதியருண் பண்ணுளர்
நதிகட லெனவணை நல்லாறர் கதியது வெனதுளங் கையாதே. (ந)

ஒழியுள மழகிய வல்லாசர் பழகுளம் பழகிய வின்பாகர்
நழுவுள நழுவிய நல்லாறர் கழலிணை யலதுளங் கண்ணாதே. (ச)

மின்னலின் மின்னிடு மெய்யாளர் துன்னலிற் றுன்னிடு துன்னுளர்
நன்னல மன்னிடு நல்லாறர் தம்மருள் விழியெனத் ததையாதே. (ரு)

தனியுளந் தனிதருந் தண்ணுளர் கனியுளங் கனிதருங் கண்ணுளர்
நனியருள் பெருகிய நல்லாற ரினிதல தெனதுள மெண்ணுதே. (சு)

கண்ணினிற் கண்ணினிற் கண்ணுவ ரெண்ணினி னெண்ணினி னெண்ணுவர்
நண்ணினி னண்ணிடு நல்லாற ருண்ணினை வறியவு மொண்ணுதே. (எ)

நினைப்பவர் நினைப்பினி னில்லாதா ருனப்படும் பொருளுற வொவ்வாதார்
நனித்தென லாயொரு நல்லாற ரெனைத்தனி யாகவு மெண்ணுரே. (அ)

எள்ளள வும்மிட மில்லாதா ரள்ளள வும்முல குள்ளாதார்
நள்ளள வுந்நனி நல்லாற ரொள்ளிய கழலல துள்ளாதே. (கூ)

ஐயுறல் போமகத் தள்ளூறல் செய்தருள் பெய்திடுந் தெய்விகர்
நைபவர் வினைநைபு நல்லாறர் செய்யடி யலதுளல் செய்யாதே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 35. நாய்க்குப் பரிசளித்த நன்று.

சிந்தனை தள்ளூ ஞானத் தேனினைச் சொரிந்து வாழு
மந்தரத் தருவின் காவு மளிந்தகா வணமுந் தோன்றுஞ்
சுந்தர நாடன் றானே யென்னுளந் தொன்றி வந்த
திந்திரன் பண்ட மாறி யிற்புகுந் தொளிர்ந்த தன்றே. (க)

கருதலைக் கருதா தோடுங் கடந்திடு மலையு மன்றித்
தருதலைத் தாரா தோடுந் தள்ளூமுப் புரியு நின்று
வருதலும் போக்கு மில்லாத் தேயனேற் கெதிரே வந்த
தருணன்மின் மினியி னுருக் கெதிர்கொள லாய தன்றே. (உ)

கருணையா மாறு முள்ளச் செய்களுங் கதிரோன் மாழ்கு
மருணவொள் ளொளியுஞ் செய்யா தறியுநற் குடியு மின்பம்
பெருகிய வெளியாந் தேயப் பெற்றியன் புகுந்த தென்னுட்
புரவல னேழை சிற்றிற் புகுந்திட லொக்கு மன்றே. (ங)

பழகிடாப் பழக்கத் தார்வாழ் பாக்கியத் தெருக்க டோறு
மொழுகிடா தொழுகு மாரி யூற்றலு முடைத்தா யென்றுங்
கெழுமிடர்க் கெழுமற் றேய னின்னுளங் கெழுமி நித்த
லுழுவைபோய் நாயைத் தோட்கொண் டுலவிய தொக்கு மன்றே. (ச)

ஆய்வுறுப் பெரிய வன்பா மகிலமு மகில முற்று
மோய்வுறுச் சித்தாய் நிற்கு மொள்ளிய வெளியு முள்ளந்
தோய்வுறுச் செந்தேன் மாரி சொரிந்தென துளத்துட் டோற்ற
முயறுஞ் சவலைச் சேய்க்குத் தாய்கண்ட தன்மை யாமே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 36. திருவருட் புணர்ச்சி தேறல்.

பொய்யுறு மவல வாழ்க்கை போதுமென் றென்ற னுள்ள
மெய்யுற வெண்ண லெந்தப் புண்ணியம் விதித்த வாறோ
வையுற வெல்லா மோட்டு மருட்கடைக் கண்ணி னாலோ
வுய்வகை வந்த தென்ற னுறுதியோ வறிகி லேனே. (க)

அறிகிலே னிருளாய் நின்ற தறிகிலே னுடலாய் நின்ற
தறிகிலேன் வினையாய் நின்ற தறிகிலேன் வெறுப்பாய் நின்ற
தறிகிலே னன்பாய் நின்ற தறிகிலே னருளாய் நின்ற
தறிகிலேன் சிவமாய் நின்ற தறிகிலே னதுவு மம்மா. (உ)

அம்மவுன் றன்னைக் கண்ட பொழுதென்னை யறிய மாட்டே
னம்மவென் றன்னைக் கண்ட பொழுதுன்னை யறிய மாட்டே
னம்மவுன் றன்னைக் காணும் பொழுதுன்னை யறிவ னன்றே
வம்மவென் றன்னைக் காணும் பொழுதுன்னை யறிவ னன்றே. (ங)

அன்றுநீ யறிவா யென்னை யின்றுநா னறிவே னுன்னை
யன்றிது வரையுங் கொன்று யின்றுனக் கோய்வ ளித்தே
னன்றுநீ ரறிவாய் நிற்பீ ரின்றுநா னறிவாய் நிற்பே
னன்றுநீ ரருளா நாயே னின்றரு ளாவ னெப்பே. (ச)

ஒப்பிலை யுனக்கு மெற்கு மொப்பிலை யுலகத்தார்க்கு
ளெய்ப்பிலை யுனக்கு மெற்கு மெய்ப்பிலை யெண்ணிப் பார்க்கின்
வைப்பிலை யுனக்கு மெற்கும் வைப்பிலை மதித்து நிற்கிற்
றுப்பிலை யுனக்கு மெற்குந் துப்பிலை சொல்லி னென்றே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 37. அருட் பேயாடி வணக்கம்.

பூதியி னன்பு வைத்தார் புந்தியிற் குழைவு வைத்தார்
நீதியி னினைவு வைத்தார் நிலைப்பினி னிலைப்பு வைத்தார்
வாதனை யிரண்டும் விட்டார் வஞ்சனை நெஞ்ச மிற்றார்
சாதியைத் தூர விட்டார் தங்கட்குத் தாத னியானே. (க)

ஊனினை யுதறி யுள்ளத் துண்மையு மொருவி ஞானத்
தேனினை யுள்ளத் தெங்குந் தேக்கினர் தேக்க லாவார்
கானமோ டுடைய வின்பங் கண்டுங்கண் டறிய கில்லார்
தானென விறந்து நின்றார் தங்கட்குத் தாத னியானே. (உ)

இருக்கற்கு நினைவு வைத்தார் ரிராமலை யிகந்து நின்றார்
ருருக்கற்குள் ளுடைந்து நின்று ருருக்கத்தைக் கடந்து நின்றார்
பெருக்கத்தைப் பிறழ விட்டார் பேச்சினைப் பேச்சு மற்றார்
தருக்கத்தைத் தப்பி நின்றார் தங்கட்குத் தாத னியானே. (ங)

காய்ந்தவுட் டன்மை வைத்தார் கலக்கத்தைக் கலக்கங் கண்டார்
வாய்ந்தஞா னத்துட் டோன்றி மதியும்போய் மதியைக் கண்டா
ரோய்ந்திடு முளத்து ளேறி யோய்ந்திடும் பதியை யுற்றார்
சாந்தம தகத்தின் வைத்தார் தங்கட்குத் தாத னியானே. (ச)

அனைத்தையு மொன்றாய்க் கண்டா ரங்ஙன மமர்ந்து நின்று
யுனத்தனி யோடு நெஞ்சு முளப்படா தென்றொ ளித்தா
ரனைக்கன்னை யாகு மன்னை தனக்கன்னை யருட்குள் ளானர்
தனக்கெனச் செயலொன் றற்றார் தங்கட்குத் தாத னியானே. (ரு)

ஆவதை யழிவ தென்பா ரழிவதை யாவ தென்பார்
நோவதை நுங்கா தென்பார் நுண்ணிதைப் பெரிய தென்பார்
போவதை வாரா தென்பார் புண்ணியம் பாவ மென்பார்
சாவதைப் பிழைப்ப தென்பார் தங்கட்குத் தாத னியானே. (சு)

ஒப்பினை யொவ்வா தென்பா ரொருப்பட லுதிப்ப தென்பார்
நட்பினைக் காப்ப தென்பார் நண்ணினைப் பிரித லென்பா
ரெய்ப்பினை யிளையா தென்பா ரினித்தலைக் கசப்ப தென்பார்
தப்பினை யிப்பா லென்பார் தங்கட்குத் தாத னியானே. (எ)

செத்தது சாகா தென்பார் சாகாது செத்த தென்பார்
வைத்தது மறதி யென்பார் வையாது முயற்கோ டென்பார்
பொய்த்தது தெரியு மென்பார் புகுவது பிரியு மென்பார்
சத்திய மிரண்ட தென்பார் தங்கட்குத் தாத னியானே. (அ)

உள்ளுதன் மறப்ப தென்பா ருள்ளாதல் கள்ள மென்பா
ரெள்ளுத றுதிய தென்பா ரெங்கணுந் தானே யென்பார்
விள்ளுத றுன்ப தென்பார் விரைதலுங் கரையா தென்பார்
தள்ளுத லுள்ள மென்பார் தங்கட்குத் தாத னியானே. (௬)

கம்பமுங் கம்ப மென்பார் கவலையுங் கவலை யென்பார்
நம்புத னானே யென்பார் நம்பாது தானே யென்பார்
பண்பையு மின்ப மென்பார் பட்டிட மொட்ட தென்பார்
தம்பமுந் தாழ்வ தென்பார் தங்கட்குத் தாத னியானே. (௭)

திருச்சிற்றம்பலம்.

## 38. அன்பர்க்கடிமை.

எட்டொ ணாதவ ரெங்கு மிருப்பவ
ரட்ட மூர்த்தம தாகி யருளொடு
நட்ட மாடுவர் நல்லன்ப ரீசனர்க்
கிட்டஞ் செய்பவ ரெற்குத் தலைவரே. (௧)

கஞ்ச னார்தலை போகக் கடிப்பவர்
பஞ்ச பாணனைப் பாழ்படப் பார்ப்பவர்
நஞ்ச யின்றுய்ந்த நல்லன்ப ரீசனார்
தஞ்ச மென்பவ ரெற்குத் தலைவரே. (௨)

சொல்லொ ணாதவ ராயினுஞ் சொல்பவ
ரொல்லை யோடி வருபவ ரன்பரு
ளெல்லை நல்லன்ப ரீசரை யன்றிவே
றில்லை யென்பவ ரெற்குத் தலைவரே. (௩)

உன்னி யுன்னி யுருகு பவருளந்
துன்னி யின்னமு தாகத் துலங்குவ
ரின்னல் பாறிடு நல்லன்ப ரீசனார்
தன்னை யென்பவ ரெற்குத் தலைவரே. (௪)

துன்பி லாதவர் துன்பந் துடைப்பவ
ரன்பி லாதவர்க் கன்பு கொடுப்பவ
ரின்ப மாகிய நல்லன்ப ரீசரை
நம்பு வார்க்கு யாநல்ல வடிமையே. (௫)

விட்ட வர்பெறு மெய்ச்சுவை யின்பினர்
பட்ட வர்பெறு மாறுப் பதவியா
நட்ட வர்பெறு நல்லன்ப ரீசரைத்
தொட்ட வர்பெறுந் தொண்ட னெளியனே. (௬)

விண்ட வர்க்கருள் விண்ட விரகினர்
கொண்ட வர்க்கருள் கொண்ட குணத்தின
ரெண்டி சைக்குறு நல்லன்ப ரீசரைக்
கண்ட வர்க்குயான் றொண்டன் கருதிலே. (எ)

ஆய்ந்து ளாருள மாயாது மாய்பவ
ரோய்ந்து ளாருள மோயா துறைபவ
ரேய்ந்து ளாருறு நல்லன்ப ரீசரைச்
சார்ந்த பேரென்னைத் தாங்குந் தலைவரே. (அ)

வன்பு வைத்த மனத்தைக் குறைப்பவர்
பண்பு வைத்த கருத்துட் பதிபவ
ரின்பு வைத்திடு நல்லன்ப ரீசருக்
கன்பு வைத்தவர்க் கன்ப னெளியனே. (௯)

ஆணும் பெண்ணு மலியுமல் லாதவர்
காணு மென்பவர் காணுங் கருத்தின
ரேணு மின்பதா நல்லன்ப ரீசரே
தாணு வென்பவர் தாணுவெ னக்கரோ. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 39. பேரன்பரைப் பின்செலல்.

கைய லாமல ரோடுங் கருத்தலர்
கொய்து சாத்திடுங் கோவைமெய் வாழ்வினை
மெய்சொ லிப்பணிந் தெந்த மெலிவுக்கும்
பொய்சொல் லாரைப் பொருந்துமென் புந்தியே. (க)

எடுக்கு மாமல ரோடு மெடாதனைக்
கொடுத்துப் போற்றிடுங் கோவைமெய் வாழ்வினை
முடக்கந் தீரப் பணிந்தறி யார்மொழி
யடக்கு வாரை யடுக்குமென் சிந்தையே. (உ)

ஊனக் கண்ணு மொளிகள் பெருக்கிய
ஞானக் கண்ணொடு நாடுமெய் வாழ்வினை
வானைக் கண்ணும் விபுதரு மாந்திடாத்
தேனைக் கண்ணிடுஞ் சிந்தையென் றெய்வமே. (௩)

செய்தி யோடுஞ் செயாச்செய லுங்கலந்
தெய்தி யோடி யிறைஞ்சுமெய் வாழ்வினைச்
செய்தி யோடுஞ் செயாச்செய லும்விடுத்
தெய்து வாரை யிருத்துமென் னுள்ளமே. (௪)

வேண்ட லோடும் வெறுப்புங் கலந்தருட்
டுண்டு வாருட் டுலங்குமெய் வாழ்வினை
வேண்ட லோடும் வெறுப்பும் வெறுத்துனி
மாண்ட பேர்பணி வைக்குமென் சிந்தையே. (௫)

கருத லுங்கரு தாதலு மாயிடும்
விருதை யுங்கொடு மேவுசெய் வாழ்வினைக்
கருத லுங்கரு தாதலும் போயுனிப்
பருகு வாரைப் பருகுமென் னுள்ளமே. (௬)

மறப்ப தோடு நினைப்பு மருவிட
வுறைப்பொ டுந்தொழ வோங்குமெய் வாழ்வினை
மறப்ப தோடு நினைப்பு மருவிடா
துறைத்து ளாருக் கொருப்படு முள்ளமே. (௭)

கண்ட தோடுமுட் காணு தொடுங்கலந்
தண்டர் தேடியு மாற்றுமெய் வாழ்வினைக்
கண்ட தோடுமுட் காணு தொடும்விடுத்
துண்ட வன்பரை யுண்ணுமென் னுள்ளமே. (௮)

அறிந்த தும்மறி யாமையை யுங்கொடு
மறந்து தேடிப் பணியுமெய் வாழ்வினை
யறிந்த தும்மறி யாமையை யும்விடுத்
திறந்து கண்டவ ரெற்கிறை யாவரே. (௯)

அன்பொ டும்மன்பி லாமையை யுங்கலந்
தும்ப ருந்தொழு தோங்குமெய் வாழ்வினை
யன்பொ டும்மன்பி லாமையை யும்விடுத்
தன்பு கொண்டுகண் டாரெனை யாள்வரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 40. சங்கரனார் தண்ணாருள்.

ஊனகன்றிட் டுனுறைந்திட் டொளிரும் பேரின்பந்
தானறிவா ரெல்லாருஞ் சங்கரனார் தண்ணாருளே. (௧)

போகாமற் போய்த்துன்பம் வாராமல் வருமின்பஞ்
சாகாமற் செத்தறிவார் சங்கரனார் தண்ணாருளே. (௨)

ஊனுங் கசக்க வுயிர்கசக்க வுள்கசக்கத்
தானுங் கசக்கவரல் சங்கரனார் தண்ணாருளே. (௩)

சித்த முருக மயிர்சிலிர்க்கத் தீங்கண்ணீர்
தத்திப் பொழிந்திழிதல் சங்கரனார் தண்ணாருளே. (௪)

ஆனந்த மூனு மகமுமற் றுமொளிர்தல்
தானந்த மில்லாத சங்கரனார் தண்ணாருளே. (௫)

உளமறியப் பொய்யே யோதவொணா தென்றிருத்தல்
தலைவிக் குகந்தளிக்குஞ் சங்கரனார் தண்ணாருளே. (௬)

தன்னுயிர்போ லெவ்வுயிருந் தாழா தொளிரவெணல்
தம்மருமை தாமறியாச் சங்கரனார் தண்ணாருளே. (௭)

மதிபோய் மறதிபோய் வான்சுவை யோடெய்தல்
சதியோ டுறையாத சங்கரனார் தண்ணாருளே. (௮)

மறமதனைச் செய்தாலும் வாடி மனங்குழைதல்
தறுக ணடையாத சங்கரனார் தண்ணாருளே. (௯)

தன்னை வினையைத் தலைவனைநன் றாய்த்தெரிதல்
தன்னு ளொளிர்ந்துலவுஞ் சங்கரனார் தண்ணாருளே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 41. தற்செய லழிந்த தகைமை.

ஆதர வாகி யருளி னமிழ்ந்திடி
னாதர வாரறிவார் மின்னே
யாதர வாரறிவார். (௧)

செஞ்சிலம் போசைகள் சிந்தையே முந்திடற்
றன்செய லாரறிவார் மின்னே
தன்செய லாரறிவார். (௨)

வென்றிடு மைம்புலன் வென்ற பொழுதினில்
வென்றவ ரெங்குளரோ மின்னே
வென்றவ ரெங்குளரோ. (௩)

திருவருட் பூத்திடுஞ் செங்கனி தின்றவர்
கருவழி காணுவரோ மின்னே
கருவழி காணுவரோ. (௪)

கண்டதிற் கண்டதிற் கண்டதுட் கொண்டவர்
விண்டதை விள்ளுவரோ மின்னே
விண்டதை விள்ளுவரோ. (௫)

ஐயமில் லாம லருளுடன் றோய்ந்தவர்
வையகங் காணுவரோ மின்னே
வையகங் காணுவரோ. (௬)

ஓட்டத்தி னோட்டத்தி னோடி யுலைந்தவர்
நாட்டத்தை நண்ணுவரோ மின்னே
நாட்டத்தை நண்ணுவரோ. (௭)

நின்ற தெலாமாயை நில்லாது கேவல
மென்றவ ரெங்குறைவார் மின்னே
யென்றவ ரெங்குறைவார். (௮)

கைத்தலுந் தித்திப்புங் காணக் கசந்தவர்
செத்தவ ரென்றறிநீ மின்னே
செத்தவ ரென்றறிநீ. (௯)

உள்ளங் குளிர்ந்திட வுள்ளமொ டிந்தவர்
கள்ளங் கடந்தவர்காண் மின்னே
கள்ளங் கடந்தவர்காண். (௰)

திருச்சிற்றம்பலம்.

## 42. நெற்றிக்கண்.

பூண்பதுவாய்ச் சத்தாதி பூதமு மாயெங்குங்
காண்பதுவெ லாநெற்றிக் கண். (௧)

பொய்ப்பதுவெ லாம்பொய்த்துப் பொய்யாமை பொய்யாமைக்
கைப்பதுவெ லாநெற்றிக் கண். (௨)

பத்தியும் பேரன்பும் பஞ்சமலம் வீசியிடுங்
கத்தியு முற்றநெற்றிக் கண். (௩)

உள்ளமு முள்ளக் கவடு முடியாத
கள்ளமு முற்றநெற்றிக் கண். (௪)

விருப்பும் வெறுப்பும் விருப்புவெறுப் பாற்றுங்
கருப்புந் தெரியுநெற்றிக் கண். (௫)

அருளு மருளினெழு மானந்த மீயுங்
கருவுந் தெரியுநெற்றிக் கண். (௬)

ஆரணமு மாகமமு மல்லாப் புராணத்திற்
காரணமே லாநெற்றிக் கண். (௭)

அசைவதுவு மன்றி யசையாம லாதல்
கசிவதூஉ மாநெற்றிக் கண். (௮)

ஓட்டுவது நிற்பதுவு முள்ளத் துணர்வெலாங்
காட்டுவது மாநெற்றிக் கண். (௯)

பாய்வதூஉ மோடிப் பதுங்குவதுஞ் சீறியே
காய்வதூஉ மாநெற்றிக் கண். (௰)

திருச்சிற்றம்பலம்.

## 43. திருவருட் பெருமை.

கையொன்று மேறாக்கிக் காலொன்று தான்முடக்கி
நையென் றுரையாமன் ஞானவமு தீந்தானே. (௧)

என்புசீழ் செந்நீ ரிறைச்சிநீ யல்லவென
வன்பொடுங் காதினிலே யறிவுநீ யென்றானே (௨)

மண்ணிட் டுடல்கழுவி மாநிலத்தின் மாயாதே
தண்ணிட்ட வானந்த சாகரத்தின் வீழ்ந்தானே. (௩)

சொல்லாமற் சொன்னதொரு தூயவுப தேசத்தி
னில்லாம னில்லென்ற நித்தியவா னந்தனே. (௪)

உப்புவிற்பான் வாழ்வு முயிர்பிரமப் பிரளயத்தைத்
தப்பிநிற்பான் வாழ்வுஞ் சரியென்ற தாதாவோ. (௫)

எல்லாங் கழன்றவிடத் தேற்றியமு தூட்டி
நல்லார்போல் லாரென்னு நாட்ட மறுத்தானே. (௬)

கொடாமற் கொடுத்தருளைக் கொள்ளாமற் கொள்ளென்
றெடாம லெடுத்துரைத்த வெம்மானைச் சொன்னார். (௭)

வள்ளற் கதிரோன் வடக்குதெற் காயிடினு
முள்ளங் கலங்கா துரைத்தானைச் சொன்னார். (௮)

தந்தைதா யென்னுந் தணவாப் பிணியிருந்தோல்
வந்ததோ லென்றுரைத்த மாகுருவைச் சொன்னார். (௯)

பேரிடபந் தானேறும் பிஞ்ஞகர்க்கு மப்பாலாஞ்
சீரிடமீ தென்றுரைத்த சிற்பரனைச் சொன்னார். (௧௦)

நீச்சு நிலைப்புமற்ற நித்தியவா னந்தவெளத்
தேச்சழைத்துத் தள்ளிவிட்ட விராசாவைச் சொன்னார். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## 44. சொல்ல வரிய சுகம்.

பிறவா நெறியும் வருபே தைமையோ
மறவா மனமு மருள்வாழ் வினையு
மிறவா வமுதுந் தருமெம் பெருமான்
பிறழா மலிருப் பதுபே சரிதே. (௧)

தரியா மனமோ டுதரித் துலக
நரியா மனமு மடியர்க் குநல்கித்
தெரியா தடுதெரி வருடெள் ளியனுர்
பிரியா மலிருப் புதுபே சரிதே. (௨)

முதிரும் பருவத் துண்மொட் டவிழக்
கதிரோ டெழுபே ரமுதங் கனிவோ
ரெதிரே வருமின் பமென மிளிர்வாம்
பிதிரா மலிருப் பதுபே சரிதே. (௩)

தீரா தவன்பு மிகத்தீர்ந் தவன்புந்
தாரா மறரும் படிதந் தெனகம்
வாரா மல்வரு பவவண் மகிழ்ந்து
பேரா மலிருப் பதுபே சரிதே. (௪)

நீச்சோ டுநிலைப் பதுதீ ரிடமுங்
காச்சோ டுகளிம் புகழன் றிடமும்
வாச்சோ டியிருக் கமகிழ்ந் தருள்வான்
பேச்சோ டவிருப் பதுபே சரிதே. (ரு)

கழையோ டுசெந்தே னிவைகைத் திடவும்
விழைவோ டுவெறுப் புவெறுத் திடவுங்
குழைவோ டுகொடுத் தருள்செஞ் சடையன்
பிழையோ டவிருப் பதுபே சரிதே. (சு)

அயரா வயர்வைத் தருமா தியனு
முயரா வுயர்வுந் தருமுத் தமனு
முயிரா யுயிருக் குயிரா யவனும்
பெயரா மலிருப் பதுபே சரிதே. (எ)

நணப்பா லதுமன் றெனலா கிநணுத்
தணப்பா லதுமன் றெனலா கிதணு
லுணப்பா லதுமன் றியுணப் படுவான்
பிணிப்போ டவிருப் பதுபே சரிதே. (அ)

கறங்கொத் திடுமுள் ளமுநின் றுகசிந்
துறங்கித் தெளிவின் விழித்தோ தரிய
நிறம்பெற் றிடப்பார் வைநிரப் பிடுவான்
பிறங்கிக் கொடிருப் பதுபே சரிதே. (கூ)

பாடோ டிடப்பா டுபுகுந் திடவன்
பூடோ டிடவூ டுபுகுந் திடவுள்
வீடோ டிடவீ டுமகிழ்ந் தருள்வான்
பீடோ டுமிருப் பதுபே சரிதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 45. பேரானந்தப் பெருக்கு.

காண வரியதடா கண்டாரைக் கொல்வதடா
வாணும் பெணுமலியு மல்லா தொளிர்வதடா. (க)

மாலாதி வாழ்வை மருளாக் கியதன்றிக்
காலாதி ஞானங் கருவறுத்தா னந்தமடா. (உ)

பாயும் புலனறுத்துப் பாயு மிருளிடித்துச்
சாயு மனமகற்றித் தாங்குமா னந்தமட. (ந)

கண்டான் மறைவதட கண்டா லொளிர்வதட
வுண்டான் மறைவதட வுண்டா லொளிர்வதட. (ச)

எய்த்தா லிருப்பதட வெய்த்தா லெழுவதட
செத்தால் வராததட செத்தால் வருவதட. (ரு)

நின்றால் விரைவதட நில்லாக்கா லோய்வதட
தின்றாற் கசப்பதட தினக்காற்றித் திப்பதட. (சு)

அழைத்தால் வராததட வழைத்தால் வருவதட
குழைத்தால் வராததட குழையாக்கா னிற்பதட. (எ)

ஓடினாற் போவதட வோடினா னிற்பதட
தேடினாற் காணாதாய்த் தேடினாற் காண்பதட. (அ)

என்னையிழுத் தென்னையொழித் தென்னுள்ளே யின்பமாய்த்
தன்னையளித் தெனைத்தனையுந் தாக்காத சாரமட. (கூ)

வீழ்ந்தாரைக் கொல்வதட வீழார்க் கிளைப்பதட
தாழ்ந்தாரைப் பாழாக்கித் தாழாரை வாழ்த்துமட. (ഖ)

திருச்சிற்றம்பலம்.

## 46. ஒழியாவின்பத் துல்லாசம்.

ஆய்ந்து கழித்தருளை யண்மியழைத் தானந்தந்
தோய்ந்தவரை நிட்டை யுருட்டுமோ வொண்ணுதலே. (க)

பத்திபோ யன்புபோய்ப் பார்வைபோ யின்பத்திற்
செத்தவரை நிட்டை சிலுகிடுமோ தேன்மொழியே. (உ)

கண்டவரைக் கண்டதுடன் காட்டாச் சுகத்தாரைப்
பண்டனுகு நிட்டை பகட்டுமோ பான்மொழியே. (ந)

அருங்கருணைப் பூவேணி யருளின்ப வரையேறி
யிருந்தவரை நிட்டையும்வந் தெய்திடுமோ வேந்திழையே. (ச)

இந்தனம் பார்வைபரை தீயாக வின்பத்தின்
வெந்துகுளிர்ந் தாரைநிட்டை வெருட்டுமோ மெல்லியலே. (ரு)

8

46-வது பதிகம் 11-வது செய்யுளை
45-வது பதிகத்தின் 11-வது செய்யுளாகவும் சேர்த்துக்கொள்க.

ஒளித்தருளி னின்பத்தை யுண்ணும வுண்டு
களித்தவரை நிட்டை கருதுமோ காரிகையே. (௬)

ஆழ்ந்தருளி லின்பத் தெழுந்ததுமேற் கொள்ளாத
தாழ்ந்தவரை நிட்டை சருகுமோ தாழ்குழலே. (௭)

அருளினொளித் தேற்றற்று யானந்த மாகும்
பொருளினொளித் தாரைநிட்டை பூணுமோ பூங்குழலே. (௮)

அளியு மருட்சுடரோற் கையமுறு மேலிரவி
யொளியை யிருள்சினந்தங் கோட்டுமே யுத்தமியே. (௯)

மெய்யின்ப முண்டார்கள் சிற்றின்பம் வெஃகுவரேற்
செய்யவரி தேரையையுந் தேடிடுமே சேயிழையே. (௧௦)

திருவருட்கு மப்பாலுந் தித்தித்த வின்ப
மொருவருக்குங் காணாத வுண்மையடி யொண்ணுதலே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## 47. அத்தைக் கும்மி.

அசையா திருப்பா னழைத்தால் வருவானோ அத்தைக் கும்மி
முசியா திருப்பான் முசியார்க்குக் காண்பானோ அத்தைக்கும்மி. (௧)

செத்தால் வருவானைச் சாகாதார் சேருவாரோ அத்தைக்கும்மி
கைத்தாற்றித் திப்பானைக் கையாதார் காண்பாரோ அத்தைக்கும்மி. (௨)

கண்டான் மறைவானைக் கண்டிடுவார் காண்பாரோ அத்தைக்கும்மி
தண்டாமற் றண்டிதனைத் தண்டிடுவார் தாங்குவரோ அத்தைக்கும்மி. ()

செத்தாரைத் தின்றிடுவான் சாகாரைத் தின்பானோ அத்தைக்கும்மி
யெய்த்தாற் பிலத்தொளிர்வா னெய்யார்க் கொளிர்வானோ அத்தைக்கும்மி. (௪)

நீங்கா திருப்பானை நீங்கிற் றெரிவானோ அத்தைக்கும்மி
தூங்கா திருப்பானைத் தூங்குவார் தோய்வாரோ அத்தைக்கும்மி. (௫)

ஒளித்தா லொளியா னொளியாருக் குண்டோதா னத்தைக்கும்மி
களித்தாற் களியான் களிப்பார்க்குக் கண்டிடுமோ அத்தைக்கும்மி. (௬)

மறந்தாற் றெரிவானை மறவாதார் மன்னுவரோ அத்தைக்கும்மி
பிறந்தாற் பிழைப்பா ரிறவாதார்க் கேய்வானோ அத்தைக்கும்மி. (௭)

இழுத்தா லசையா னிழுப்பார்க் கிளைப்பானே அத்தைக்கும்மி
விழித்தா லுறங்கி விழிப்பாருக் கேய்வானே அத்தைக்கும்மி. (அ)

இருந்தால் விழுவா னிராதார்க் கிசைவானே அத்தைகும்மி
பொருந்திற் பகைப்பான் பொருந்தாரைப் பூணுனே அத்தைக்கும்மி.()

நின்று விருந்திடுவா னில்லாதார்க் கேய்வானே அத்தைக்கும்மி
கொன்றுற் கொலாதானுங் கொன்றிடுவார்க் கேய்வானே அத்தைக்கும்மி. (ώ)

திருச்சிற்றம்பலம்.

## 48. அருட்டலைவியை அருட்டலைவி யதிசயித்தல்.

மானந் தவிர்ந்து மறதிமறந் தருணெறிபோ
யானந்த வாரிதியி லாழ்ந்தனையோ வாரணங்கே. (க)

விட்டனையே காலாதி வெந்தபுரி போலிருந்து
தொட்டனையே யின்பாழி தோய்ந்தனையே தூமொழியே. (உ)

உருக்கத் துருக்கத் துருகவுரு கித்திருக்கற்
றிருக்கின்ற தேயத்தைச் சேர்ந்தனையே யேந்திழையே. (ங)

ஒளிக்குள் ளொளிக்குள் ளொளிபெருக்கு முள்ளூர்
வெளிக்குள் வெளிக்குள் வெளியின் மிதந்தனையே. (ச)

நாணும னூறி னுணுமே நாணினையே
காணுமற் காண்பதனைக் காணுமற் கண்டனையே. (ரு)

ஓராம லுள்ளாம லொன்றோடு நீயாகச்
சேராமல் வெள்ளவெளி சேர்ந்தனையே சேயிழையே. (சு)

வானிறந்து வான வெளிவா னமர்ந்துபோய்
நானிறந்த வாழ்வதனை நண்ணும னண்ணினையே. (எ)

ஒருத்தரு மற்ற வொருவெளியை யுள்ளக்
கருத்தினிற் கண்டு களித்தனையே காரிகையே. (அ)

இருளு மருளு மெவ்வுலகு மவ்வுலகி
னருளு மருளு மருளாக வண்மினையே. (கூ)

அசைவற் றிருக்கின்ற வவ்வுலகத் தப்பாற்
கசிவற் றிருக்கின்ற காரணமுங் கண்டனையே. (க0)

உள்ளத்துக் குள்ளே யொளிர்கின்ற வுள்ளத்தை
யுள்ளத்துக் குள்ளே யொளித்தனையே யொண்ணுதலே. (கக)

தவாப்பே ரருள்வழியைச் சார்ந்துமே நீதனியே.
யவாப்போ யிருக்கின்ற வானந்த மாயினையே. (கஉ)

விட்டத்தை விட்டு விடாததை மிகக்கவ்வித்
தொட்டத்தைத் தொட்டுச் சுகித்தனையே சுந்தரியே. (கங)

நிகராரு மில்லாத நீதிதா னேவுதவப்
பகராத செல்வம் படைத்தனையே பான்மொழியே. (கச)

உச்சிக்கு மேலே யொழுகியிடுஞ் செந்தேனை
யுச்சிக்குங் கீழேநின் றுண்டனையே யொண்ணுதலே. (கரு)

தாய்கண்ட சேய்போலத் தண்கண்ட வெம்மைபோற்
பேய்கண்ட பேர்போற் பிதற்றினையே பெண்மயிலே. (கசு)

இங்கு மறந்திட் டிடையிலுள தும்மறந்திட்
டங்கு மறந்திட் டகமு மறந்தனையே. (கஎ)

ஆட்டினு லாடாத வானந்த வாரிதியை
யாட்டாம லாட்டி யயர்ச்சி மறந்தனையே. (கஅ)

எண்ணுக் கியலாத வெண்ணத்தை யெண்ணியே
கண்ணுக் கிருள்போய்க் கவலை யழிந்தனையே. (கசு)

ஆராலுஞ் சாராத வானந்த மேல்வீட்டை
நேராம னேர்ந்ததனு ணில்லாம னின்றனையே. (உo)

திருச்சிற்றம்பலம்.

## 49. கண்டதலைவி கண்டதலைவி கருத்தறிதல்.

நானேறத் தானேறு நானிழியத் தானிழியுந்
தேனுறு கண்ட திறமெனக்குச் செப்பியிடே. (க)

தான்போயோ தானிருந்தோ தானடந்தோ தானிழந்தோ
தேன்பாயு மாறுநீ கண்டதிறஞ் செப்பியிடே. (உ)

சுத்தந் தொடங்கியோ வசுத்தந் தொலைந்திட்டோ
தித்தித்த துள்ளநிற்குக் கண்டதிறஞ் செப்பியிடே. (ங)

தானு மிழுத்ததோ நீபோ யிழுத்தனையோ
தேனுழி கண்ட திறமெனக்குச் செப்பியிடே. (௪)

கண்டதோ காணுமற் கண்டதோ கண்டவரை
யுண்டதோ நீயாக வுண்டனையோ வோதியிடே. (௫)

பார்த்தனையோ பாராமற் பார்த்தனையோ வன்றியது
பார்த்ததுவோ வந்து பதிந்ததுவோ பான்மொழியே. (௬)

நின்றனையோ நில்லாம னின்றனையோ வன்றியது
நின்றதுவோ தானே நிகழ்ந்ததுவோ நேரிழையே. (௭)

ஊறியதோ வூறும லூறியதோ வுன்னுள்ளந்
தேறியதி னாலே திகழ்ந்ததோ சேயிழையே. (௮)

தேறினையோ தேறுமற் றேறினையோ வன்றியது
தேறினதோ தேறல்வந்து சேர்ந்ததுவோ தேன்மொழியே. (௯)

அன்பின் பிறகோ வளித்ததுள மன்பதனை
யன்பென் றறிந்ததுநீ யன்பான தோவணங்கே. (௧௦)

தெருளத் தெருளத் தெருள்வந் தடைந்ததோ
தெருள்வந் தருள்வந்து சிக்கியதோ தேன்மொழியே. (௧௧)

பற்றியோ விட்டோதான் பற்றுமற் பற்றியோ
பற்றியிட நீதானும் பற்றினையோ பான்மொழியே. (௧௨)

திருச்சிற்றம்பலம்.

## 50. நன்மனைக்கிழத்தியோடு ஞானக்கிழத்தி நவிறல்.

நின்றாலும் வாரார் நினைத்தாலும் வாரார்நான்
கொன்றாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௧)

இளைந்தாலும் வாரார் விளைந்தாலு மென்முன்வரார்
குழைந்தாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௨)

ஈர்த்தாலும் வாரா ரியைந்தாலு வாராருட்
கூர்த்தாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௩)

உறைத்தாலும் வாரா ருழைத்தாலும் வாரார்போய்
குறைத்தாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௪)

அவிந்தாலும் வாரா ரயர்ந்தாலும் வாராருட்
குவிந்தாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௫)

மதித்தாலும் வாரார் மகிழ்ந்தாலும் வாராரூன்
குதித்தாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௬)

அமைந்தாலும் வாரார்கா ணுகத்திற் பற்றுக்
குமைந்தாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௭)

நீப்பினல் வாரார் மிகநேடி வாடிக்கை
கூப்பியும் வாரார்காண் கொடியர்கா ணென்கொழுநர். (௮)

தேடினல் வாரார் திகைக்கினும்வா ரார்வலியன்
கூடினுற் கூடார் கொடியர்கா ணென்கொழுநர் (௯)

மனத்துக்கு மெட்டார் வாங்கலுக்கும் வாரார்நற்
குணத்துக்கே யேயார் கொடியர்கா ணென்கொழுநர். (௧0)

கெஞ்சுக்கும் வாரார் கிறிக்குக் கெழுமியிடார்
கொஞ்சுக்கும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௧)

வலிக்கும்வா ராரன்றி யேழைக்கும் வந்தொளிரார்
கொலைக்கும் வெருவார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௨)

நடைக்கு நலியார் நயத்தையு நச்சியிடார்
குடைக்கு மகிழார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௩)

வதிப்புக்கும் வாரார் மருந்துக்கும் வாடியிடார்
கொதிப்புக்குங் கூடார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௪)

இச்சைக்கும் வாரா ரிகழ்தற்கு மேங்கியிடார்
கொச்சைக்கும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௫)

ஒட்டுக்கும் வாரா ரூடற்கொ ருப்பட்டார்
குட்டுக்கும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௬)

வயத்துக்கும் வாரார் மடிவுக்கும் வந்தொளிரார்
குயத்துக்கு நச்சார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௭)

பார்வையிற் பற்றூர் பணிக்குமியை யார்புத்தி
கூர்மையை நத்தார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௮)

ஊனு முடையும் மொறுத்தாலும் வந்தொளிரார்
கோணகன்றும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௧௯)

தரித்தாலும் வாரார் தணந்தாலு மற்றன்பு
குருத்தாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௨0)

வேளுக் கியையார் வெள்கிற்கும் வெள்கியிடார்
கோளுக் கியையார் கொடியர்கா ணென்கொழுநர். (௨௧)

பரப்புக் கணையார் பசலையைப்பா ராரிரங்குங்
குரைப்புக் கியையார் கொடியர்கா ணென்கொழுநர். (௨௨)

தெள்ளுக் கியையார் திறற்கியையார் பேரன்பின்
கொள்ளைக் கியையார் கொடியர்கா ணென்கொழுநர். (௨௩)

வைதற் கியையார் வணக்கத்தை மன்னருட்
கொய்தற் கியையார் கொடியர்கா ணென்கொழுநர். (௨௪)

ஆடப் பொருந்தியிடா ராய்வுபொருந் தார்புலனைக்
கூடப் பொருந்தார் கொடியர்கா ணென்கொழுநர். (௨௫)

ஊடினுற் கூடா ருகைக்கினுங்கூ டாருள்ளங்
கோடினுற் கூடார் கொடியர்கா ணென்கொழுநர். (௨௬)

பழுத்தாலும் வாரார் கருக்காய்க்கும் பாங்காகார்
கொழுத்தாலும் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௨௭)

மாய்ப்பிட்டால் வாரார்காண் வாஞ்சைக்கும் வந்திழியார்
கூப்பிட்டா லென்னென்னுர் கொடியர்கா ணென்கொழுநர். (௨௮)

கலைக்கினுல் வாரார் கனிந்தழுதால் வாரார்மெய்
குலுக்கினுல் வாரார் கொடியர்கா ணென்கொழுநர். (௨௯)

எடுத்தாலும் வாரார் விடுத்தாலும் வாராருட்
கொடுத்தாலுங் கூடார் கொடியர்கா ணென்கொழுநர். (௩0)

புலாலோவற் காகார் புளகிதத்துக் கெட்டார்
குலாவுதற்கும் வாரார் கொடியர்கா ணென்கொழுர். (௩௧)

திருச்சிற்றம்பலம்.

## 51. முனைப்பா ரறியா மூத்தி.

பார்த்தவர் பார்த்திலர் பார்த்தவர் பார்த்திலர்
பார்த்தவர் பார்த்திலரே
யார்த்தவ ரார்த்தில ரார்த்தவ ரார்த்தில
ரார்த்தவ ரார்த்திலரே

தீர்த்தவர் தீர்த்திலர் தீர்த்தவர் தீர்த்திலர்
தீர்த்தவர் தீர்த்திலரே
யீர்த்தவ ரீர்த்தில ரீர்த்தவ ரீர்த்தில
ரின்பநன் னுடனேயே. (க)

கண்டவர் கண்டிலர் கண்டவர் கண்டிலர்
கண்டவர் கண்டிலருட்
கொண்டவர் கொண்டிலர் கொண்டவர் கொண்டிலர்
கொண்டவர் கொண்டிலரே
விண்டவர் விண்டிலர் விண்டவர் விண்டிலர்
விண்டவர் விண்டிலரே
யெண்டிசை யுந்தரு மெண்டிசை புகழ்தரு
மின்பநன் னுடனேயே. (உ)

தின்றவர் தின்றிலர் தின்றவர் தின்றிலர்
தின்றவர் தின்றிலரே
துன்றியர் துன்றிலர் துன்றியர் துன்றிலர்
துன்றியர் துன்றிலரே
யொன்றிய ரொன்றில ரொன்றிய ரொன்றில
ரொன்றிய ரொன்றிலரே
யின்றிய ரின்றில ரின்றிய ரின்றில
ரின்பநன் னுடனேயே. (ந)

தொட்டவர் தொட்டிலர் தொட்டவர் தொட்டிலர்
தொட்டவர் தொட்டிலரே
விட்டவர் விட்டிலர் விட்டவர் விட்டிலர்
விட்டவர் விட்டிலரே
கிட்டியர் கிட்டிலர் கிட்டியர் கிட்டிலர்
கிட்டியர் கிட்டிலரே
யெட்டிய ரெட்டில ரெட்டிய ரெட்டில
ரின்பநன் னுடனேயே. (ச)

நேடினர் நேடிலர் நேடினர் நேடிலர்
நேடினர் நேடிலரே
பாடினர் பாடிலர் பாடினர் பாடிலர்
பாடினர் பாடிலரே
கூடினர் கூடிலர் கூடினர் கூடிலர்
கூடினர் கூடிலரே
யீடிளை யாதவொ ரீடிட மருளிடு
மின்பநன் னுடனேயே. (ரு)

வைத்தவர் வைத்திலர் வைத்தவர் வைத்திலர்
வைத்தவர் வைத்திலரே
யுற்றவ ருற்றில ருற்றவ ருற்றில
ருற்றவ ருற்றிலரே
கற்றவர் கற்றிலர் கற்றவர் கற்றிலர்
கற்றவர் கற்றிலரே
யிற்றவ ரிற்றில ரிற்றவ ரிற்றில
ரின்பநன் னுடனையே. (சு)

நண்ணினர் நண்ணிலர் நண்ணினர் நண்ணிலர்
நண்ணினர் நண்ணிலரே
கண்ணினர் கண்ணிலர் கண்ணினர் கண்ணிலர்
கண்ணினர் கண்ணிலரே
நுண்ணினர் நுண்ணிலர் நுண்ணினர் நுண்ணிலர்
நுண்ணினர் நுண்ணிலரே
யெண்ணின ரெண்ணில ரெண்ணின ரெண்ணில
ரின்பநன் னுடனையே. (எ)

மருவியர் மருவிலர் மருவியர் மருவிலர்
மருவியர் மருவிலரே
சருவியர் சருவிலர் சருவியர் சருவிலர்
சருவியர் சருவிலரே
வெருவியர் வெருவிலர் வெருவியர் வெருவிலர்
வெருவியர் வெருவிலரே
யிருமையு மிலகிட விருமையு மெய்திடு
மின்பநன் னுடனையே. (அ)

கேட்டவர் கேட்டிலர் கேட்டவர் கேட்டிலர்
கேட்டவர் கேட்டிலரே
போட்டவர் போட்டிலர் போட்டவர் போட்டிலர்
போட்டவர் போட்டிலரே
வேட்டவர் வேட்டிலர் வேட்டவர் வேட்டிலர்
வேட்டவர் வேட்டிலரே
யீட்டிய ரீட்டில ரீட்டிய ரீட்டில
ரின்பநன் னுடனையே. (கூ)

ஆய்பவ ராய்ந்தில ராய்பவ ராய்ந்தில
ராய்பவ ராய்ந்திலரே
தோய்பவர் தோய்ந்திலர் தோய்பவர் தோய்ந்திலர்
தோய்பவர் தோய்ந்திலரே

பாய்பவர் பாய்ந்திலர் பாய்பவர் பாய்ந்திலர்
பாய்பவர் பாய்ந்திலரே
யேய்பவ ரேய்ந்தில ரேய்பவ ரேய்ந்தில
ரின்பநன் னுடனேயே. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 52. தேடாதெழுந்த சித்தத்துட் டித்திப்பு.

தானே கருவி கழன்றிடி னல்லது தாக்காதுட் டித்திப்பட
ஊனுசை தானே யொருவின லல்லதங் கூறுதுட் டித்திப்பட. (க)

காண்பது தானே கலந்திடி னல்லது காணுதுட் டித்திப்பட
பூண்பது நீயும் பொருக்கற்று லல்லது பூணுதுட் டித்திப்பட. (உ)

உள்ளத்தி னுள்ளே யொளியெழுந் தன்றி யுதியாதுட் டித்திப்பட
கள்ளத்தி னுள்ளே கனிவெழுந் தன்றிக் கலவாதுட் டித்திப்பட. (ந)

நானுன தானே நடந்திடி னல்லது நாடாதுட் டித்திப்பட
தானுன தொன்றுமே நானுனு லல்லது தாக்காதுட் டித்திப்பட. (ச)

என்று மிருப்ப திரங்கிடி னல்ல திலகாதுட் டித்திப்பட
பொன்று முருப்பை புதுக்கினு லல்லது பூணுதுட் டித்திப்பட. (ரு)

சும்மா விருப்பது தோன்றினு லல்லது தோன்றுதுட் டித்திப்பட
சும்மா விருப்பது தோன்றினு லல்லது தோன்றுதுட் டித்திப்பட. (சூ)

தானே பதைப்பற் றிருந்திடி னல்லது தாக்காதுட் டித்திப்பட
நானுன தானே நடந்திடி னல்லது நாடாதுட் டித்திப்பட. (எ)

நெஞ்சினி னுசை நிரப்பினு லல்லது நேராதுட் டித்திப்பட
தஞ்செய ருனே யழிந்திடி னல்லது தாக்காதுட் டித்திப்பட. (அ)

மறதிபோல் வந்த மறதியும் வந்திடின் மன்னுமுட் டித்திப்பட
மறதியில் லாமனந் தானே வதிந்திடின் மன்னுமுட் டித்திப்பட. (கூ)

தூங்குத ருனே யுளத்தினிற் றேன்றிடிற் றேன்றுமுட் டித்திப்பட
தூங்காமற் றூங்கலுந் தானே துதைந்திடிற் றேன்றுமுட் டித்திப்பட.

திருச்சிற்றம்பலம்.

---

இப்பதிகத்தும் இதன் பின்னரும் அட ( அடா ) என வருமிடந்தோறும் அடி ( அடீ ) எனத் தக்க உடம்படுமெய் சேர்த்துப் பாடுக. (பக்கம் 79 பார்க்க.)

## 53. அரிதென்ற தெருட்டலைவிக் கெளிதறிவித்தல்.

குமைத்து ளாசையைக் கோண னிமிர்ந்தபோ
தமுக்கிக் கொண்டதடி அருட்சுவை
யமுக்கிக் கொண்டதடி. (க)

விடுத்துத் தன்செயன் மெலிவும் விழுந்தபி
னடக்கிக் கொண்டதடி அருட்சுவை
யடக்கிக் கொண்டதடி. (உ)

தனித்துச் சென்றலுந் தானே மறந்தபி
னணைத்துக் கொண்டதடி அருட்சுவை
யணைத்துக் கொண்டதடி. (ங)

தேடிப் போயொரு வீதியிற் செத்தபி
ளுடிப் பாய்ந்ததடி அருட்சுவை
யாடிப் பாய்ந்ததடி. (ச)

தூண்ட னின்று துளக்க மிலாதபோ
தாண்டு கொண்டதடி அருட்சுவை
யாண்டு கொண்டதடி. (ரு)

இம்மைச் சும்மை யிடித்துக் கரைத்தபி
னம்மிக் கொண்டதடி அருட்சுவை
யம்மிக் கொண்டதடி. (சு)

உள்ளத் துள்ளி யுணருவ மென்றபோ
தள்ளிக் கொண்டதடி அருட்சுவை
யள்ளிக் கொண்டதடி. (எ)

நீக்கி நானென னின்ற போதுதனக்
காக்கிக் கொண்டதடி அருட்சுவை
யாக்கிக் கொண்டதடி. (அ)

குவிந்து நின்றருட் கூடுவோ மென்றபோ
தவிழ்ந் திழிந்ததடி அருட்சுவை
யவிழ்ந் திழிந்ததடி. (கூ)

எங்குப் போவோமென் றெய்த்திட் டிருந்தபி
னங்குக் கண்டதடி அருட்சுவை
யங்குக் கண்டதடி. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 54. தெருட்டலைவிக் கருட்டலைவி சிந்தை தேற்றல்.

எட்டடிக் குச்சுக்குளே யெத்தனை நாளிருப்பாய்
விட்டடி யுள்ளருளால் வெட்ட வெளிப்பதியே. (க)

இருட்டுப் பருவீட்டி னெத்தனை நாளிருப்பாய்
வெருட்டித் திருவருளான் மேலுல கம்மேறே. (உ)

எய்க்கு மனவீட்டி னெத்தனை நாளிருப்பாய்
கைக்கும் படியருளாற் கண்டருட் பூவேறே. (ங)

இடுக்கண் டரும்வீட்டி லெத்தனை நாளிருப்பாய்
விடுத்திட் டுளத்தருளான் மேலுல கம்மேறே. (ச)

இன்ன றரும்வீட்டி னெத்தனை நாளிருப்பா
யின்னல் விடுத்தருளா லேறுதி மேலுலகே. (ரு)

இன்ப மிலாவீட்டி னெத்தனை நாளிருப்பாய்
துன்ப மகற்றருளாற் றுன்னிடு மேலுலகே. (சு)

ஏதந் தரும்வீட்டி னெத்தனை நாளிருப்பாய்
வாதனை விட்டருளான் மன்னிடு வானுலகே. (எ)

இட்ட மிலாவீட்டி னெத்தனை நாளிருப்பாய்
விட்டிட் டுளத்தருளான் மேலுல கம்மேறே. (அ)

இடும்பை தரும்வீட்டி னெத்தனை நாளிருப்பாய்
தடங்க ணுளத்தருளாற் சாருதி தன்னுலகே. (கூ)

இயக்கந் தரும்வீட்டி னெத்தனை நாளிருப்பா
யியக்க மிலாவருளா லேறுதி யவ்வுலகே. (க0)

இடரைத் தரும்வீட்டி னெத்தனை நாளிருப்பா
யிடரை விடுத்தருளா லேறுதி யவ்வுலகே. (கக)

ஈர மிலாவீட்டி னெத்தனை நாளிருப்பா
யீரந் தருமருளா லேறுதி வானுலகே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

## 55. உண்ணேக்கொ டுண்மகிழ்ந்துரைத்தல்.

நெஞ்சேநீ வாவிங்கே நீதியொன்று சொலுவேன்கே
ளெஞ்சாத பிறப்பிறப்பி னினைத்தழுங்கு மிடரேவி
நெஞ்சம்போய் நெஞ்சினுறு நினைவும்போய் நினைவினுறு
மஞ்சும்போ யஞ்சிலகு மஞ்சிலடை யஞ்சாதே. (க)

மனனேநீ வாவிங்கே மதியொன்று சொலுவேன்கே
ளினரேடி யினலாகு மெரிநிரயத் தெய்தாதே
யனையாகு மருணடி யருளாகி யருளினுறுந்
தனிநாடித் தனியாகுந் தன்னையடை தாழாதே. (உ)

உள்ளமே யோடிவா வுனக்கிங்கொன் றுரைசெய்வேன்
பள்ளமாம் படுகுழியிற் படிந்தழுங்கிப் பதையாதே
வெள்ளம்போல் விழிபொழிய மெய்விதிர்த்து மெய்ஞ்ஞானத்
துள்ளன்பா யுள்ளிலங்கு முள்ளங்கண் டுருகாயே. (ங)

பொறியேநீ பொருந்தவா புகலரிதொன் றுரைசெய்வே
னுறவாகி மகளிருரு வுண்ணாதே யுரையாதே
யறவாழி தனின்மூழ்கி யன்பாழி தனின்மூழ்கி
யறிவாழி தனின்மூழ்கி யமுதாழி விழுந்தனமே. (ச)

அறிவேநீ விரைவாய்வா வதிசயமொன் றுளததுகேள்
அறியாமன் மாயைதனி னழுங்கிவிழுந் தாற்றாதே
அறிவாகு மறிவறிந்திட் டறியாமை யறிவிறந்திட்
டறியாம லருளணைந்திட் டறியாம லறிவறியே. (ரு)

உணர்வேவா வுனக்கொன்றிங் குரைசெய்வே னுதவாத
பிணையான துணையென்றிப் பேயுலகிற் பிதற்றாதே
துணையாகுந் துணையறிந்து தொழிலான விழவெறிந்திட்
டெணலாகா வெணினமிழ்ந்தி யென்னுணை யிருந்துவிடே. (சு)

மதியேநீ வாவிங்கே மகிழ்வோடொன் றுரைசெய்வேன்
சதியாகு மிவ்வுலகந் தனிநேடித் தவியாதே
முதிதாம்வா டகவானை கொடுவேறி யிருண்மோதிக்
கதியாகும் பதிவாங்கிக் களியாமற் களியாயே. (எ)

சித்தமே வாவிங்கே தெவிட்டாதொன் றுரைசெய்வேன்
பித்தமா மிவ்வுலக மெய்யென்று பிதற்றாதே
சுத்தமாம் பெரியர்தரு தூயேவற் றுணைவலிபோய்ச்
சத்தியமாய்த் தரித்தருளின் றண்ணுலகந் தனையாளே. (அ)

கண்ணேநீ வாவிங்கே கனிவாயொன் றுரைசெய்வேன்
விண்ணுளும் வாழ்வனைத்து மெய்யல்ல வென்றெள்ளிக்
கண்ணுகிக் கண்ணுக்கோர் கருத்தாகிக் கருத்துக்கோர்
கண்ணுகிக் கண்ணிற்குங் கருத்தாவைக் கருதியிடே. (கூ)

கருத்தேநீ வாவிங்கே களைகண்ணென் றுரைசெய்வேன்
வருத்தமா மிவ்வுலகந் தனினழுங்கி மாயாதே
யுரித்தேதென் றுய்ந்ததனை யுள்கியுளங் கரைந்து கண்ணீர்ப்
பெருக்கமிழ்ந்தித் திருவருளின் பெருக்கழுந்திப் பேறுபெறே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 56. இருளிரித்தருளார்ந்த விதயம்.

அருள்க லந்திட் டமுதங் கலந்திடும்
பொருள்பு குந்திடும் புந்தியர் புந்தியி
னிருள்க லந்திட் டிகலுங் கலந்திடும்
பொருள்பு குந்துபொ லிந்திடல் போயதே. (க)

ஈர்த்த பார்வையு நீத்திடும் பார்வையு
மார்த்த பார்வையு மாறும கத்தினிற்
கூர்த்த பார்வைக் கொடுஞ்சின முங்கொலை
யார்த்த பார்வையு மோடி யகன்றதே. (உ)

மெய்வி திர்ப்புங் குழைவும் வெதும்பலுங்
கைவி டுத்த புளகமுங் கம்பமும்
வைமி குத்து வழங்குமு ளத்தினிற்
பொய்யி கத்துழல் கின்றது போயதே. (ங)

அருளி னேடைவ் வமுத வொளிதரும்
பொருளி னேடு புகுந்திடும் புந்தியிற்
கருவி னேடுமே கண்கே டொளிதரு
மிருளு மோடி யிகந்து பறந்ததே. (ச)

வாச மெய்யருட் டேனை வழங்கிட
வோசை செய்பொரு ளுந்து மகத்தினிற்
பாச மாமழுக் காறும் விகற்பமு
மாசை யாவு மழிந்த தழிந்ததே. (ரு)

அருளும் பட்டிட லன்றி யமுதமாம்
பொருளும் பட்டிடும் புந்தியர் புந்தியி
னிருளும் பட்டு வினைபட் டிடருருப்
பொருளும் பட்டுப் புறமுளும் பட்டதே. (௬)

தந்தி டாமற் றராதது தந்திடுஞ்
சுந்த ரப்பொரு டுன்னிய தூயகம்
வந்தி டாமல் வராதது வந்தன்றி
வெந்தி டும்புரி யென்ன வியந்ததே. (எ)

விட்டி டாம லுலகங்கள் விட்டிடு
மெட்டி டாப்பொரு ளெய்து மகத்தினிற்
கட்டி டாமலுங் கட்டிய காசினி
யொட்டி டாமலு மொட்ட லொளிர்ந்ததே. (அ)

அன்பின் மாவி னருட்பூ வெழுந்தன்றி
யின்ப மாங்கனி யெய்து மகத்தினர்
துன்ப வின்பமுஞ் சொல்லுந் தொழில்களு
மென்புஞ் சீயு மிறையென லாயதே. (௯)

ஓட்ட மோசை யிரண்டு மொழிந்தொன்றிற்
றேட்ட மற்றிடஞ் சிக்கிய செவ்வகம்
வாட்ட மற்று மதியற்று மங்கிடு
மாட்ட மற்றிட் டளிகள் பிறந்தவே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 57. உள்ளதுணர்தல்.

[ஞானப்பூசையின் பெருமை வியந்து கூறியது.]

தண்கதிர் தண்ணு னந்தந் தண்ணறி வறியா ரெல்லாம்
வெண்கலங் கடவு ளென்றிம் மேதினி மோது வாரே. (க)

பம்பர வுள்ளங் கொல்லும் பாழ்வெளி யறியா ரெல்லாஞ்
செம்பினைக் கடவு ளென்றே திகைத்தகந் தியங்கு வாரே. (உ)

இராப்பக லற்ற ஞான விருஞ்சுட ரறியா ரெல்லாந்
தராத்தனைக் கடவு ளென்றே தவிப்பரே புவிக்கு ணின்றே. (ங)

அருட்சுட ருள்ளு லாவு மானந்த மறியா ரெல்லா
முருக்களைத் தெய்வ மென்றே யுலைந்துலைந் துழலு வாரே. (ச)

உள்ளினு ளுலகா யுள்ள மோய்விட மறியா ரெல்லாங்
*கள்ளினைத் தெய்வ மென்றே கலங்குவர் நலங்கு லைந்தே. (ரு)

வாதனை யிரண்டு மோட்டி வருமின்ப மறியா ரெல்லாம்
பூதியைத் தெய்வ மென்றே புழுங்குவா ரழுங்கி யீங்கே. (சு)

ஆவியா யுயிர்கட் குள்ளா மறிவறி யார்க ளெல்லாங்
§காவியைத் தெய்வ மென்றே கழறியீங் குழலு வாரே. (எ)

துஞ்சலும் விழிப்பு நீக்குந் தூய்வெளி யறியா ரெல்லாஞ்
செஞ்சடை தெய்வ மென்றே தியங்கியே மயங்கு வாரே. (அ)

உரத்தினுக் குள்ளே யின்ப முள்ளத்துள் ளுணரா ரெல்லா
மரத்தினைத் தெய்வ மென்றே வழாதுளஞ் சுழலு வாரே. (கூ)

எங்கணு மிருக்கு மின்ப மெங்கணு மறியா ரெல்லாம்
பெண்களைத் தெய்வ மென்றே பிதற்றிவீழ்ந் தரற்று வாரே. (க0)

இந்தன வுள்ள மெங்கு மெறிக்குமின் பறியா ரெல்லா
மெந்திரந் தெய்வ மென்றே யிறைஞ்சிவீழ்ந் திறந்து ளாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## 58. அருளிழந்தாரை யிகழ்தல்.

கற்றி டாவணங் கற்றுக் கசிந்தங்கே
பற்றி டாவணம் பற்று பவருள
மிற்றி டாமலி லங்கொளி யீசனை
யுற்றி டாதவ ருற்றது முற்றதே. (க)

வாடி டாவணம் வாடியர் நெஞ்சினு
ளாடி டாவண மாடிய வற்புத
னீடு ளோரினி லங்கொளி யீசனை
நாடி டாதவர் நாடலு நாடலே. (உ)

தூர்த்தி டாம லுதரத் துருத்தியை
யார்த்தி டாமற் பவம்வெகுண் டன்பினை
யீர்த்தி டாம லிலங்கொளி யீசனைப்
பார்த்தி டாதவர் பார்ப்பதும் பார்ப்பதே. (ங)

---

* கல்லினை என்பதும் பாடம். § காவியை என்பதும் பாடம்.

மண்டி டுந்தய வென்றும் வதிந்தவ
னுண்டி டின்பம தன்பர்க் குடையவ
னெண்டி சையு மிலங்கொளி யீசனைக்
கண்டி டாதவர் கண்டதுங் கண்டதே. (௪)

போட்டி டாத பொருளன் புவியினின்
மாட்டி டாத மதியன் வரைந்துகொண்
டேட்டி டாம விலங்கொளி யீசனைக்
கேட்டி டாதவர் கேள்வியுங் கேள்வியே. (௫)

புகுந்தி டாமற் புகுந்திடும் வீட்டினின்
மிகுந்தி டாமன் மிகுந்து நடப்பவர்க்
கிகந்தி டாம விலங்கொளி யீசனை
முகந்தி டார்கண் முகப்பு முகப்பதே. (௬)

நின்றி டாவண நிற்பவர் நெஞ்சினுட்
டுன்றி டாவணந் துன்றிய சோதிய
னென்றி டாநெஞ் சிலங்கொளி யீசனைத்
தின்றி டாதவர் தின்றதுந் தின்றதே. (௭)

தேறி டாவுளந் தேறியன் றேறலி
னூறி டும்மமு துள்ளவ னுள்ளினி
னேறி டும்மன் பிலங்கொளி யீசனைக்
கூறி டாதவர் கூறலுங் கூறலே. (௮)

கொச்சை யாவு மிகுந்து குணமொடு
நிச்சி யாவண நிச்சயஞ் செய்பவர்க்
கெச்சி டாம விலங்கொளி யீசனை
யிச்சி யாதவ ரிச்சையு மிச்சையே. (௯)

தட்டி டாவணந் தட்டிய தாயகம்
விட்டி டாமல் விளங்கு பவர்க்கலா
லெட்டி டாம விலங்கொளி யீசனைத்
தொட்டி டாதவர் தொட்டதுந் தொட்டதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 59. திருவருண் மகிழ்ச்சி தேறல்.

அண்டரு மண்ணேரு மளிந்து கரைந்துருகி
மண்டிய வன்புசெயு மருளொளிர் வான்சுவையைத்
தொண்டொ டுறுமடியார் தொல்லுல கமியாவும்
விண்டொளி ருஞ்சோதி விண்டிட வல்லவரே. (க)

ஆயோ டுமையெனலா யாருயிரி யாவையினு
மாய்வற வுள்ளிலகு மருளொளிர் வான்சுவையை
யோய்வொ டுளுமடியா ரோய்வுறு முள்ளமுதைத்
தோய்வினி னேங்குசுகத் தோய்ந்திருந் துண்பவரே. (உ)

உள்ளதி னும்முள்ளி னுள்ளதி னும்முள்ளன்
வள்ளலு மாய்வழங்கு மருளொளி வான்சுவையை
யுள்ளி யிடுமடியா ருள்ளிடு முள்ளமுறு
முள்ள மிழந்தருளி னுள்ளும் புகுவர்களே. (ங)

புண்ணிய பாவமெலாம் போயபின் றம்முடைய
வண்ணம தாக்கியிடு மருளொளிர் வான்சுவையை
யெண்ணிய வன்பரெலா மெண்ணிடு மெண்ணமெலா
மெண்ணி யிடும்பொழுதே யெய்துவ தும்மறிதே. (ச)

வேசறு மன்பருளம் வேறற வெளியாக
மாசினை யோட்டிவரு மருளொளிர் வான்சுவையைப்
பேசு மவர்வாயிற் பேசரு மின்பமெலா
மோசையொ டும்முறைந்தங் கோசை யொழிந்திடுமே. (ரு)

நித்த நிராமயனு ணிருமல னுயெவர்க்கு
மத்துவ மாயொளிரு மருளொளிர் வான்சுவையைச்
சுத்தமு றும்மடியார் சித்தமுஞ் சுத்தியுற
பத்தி மிகுந்தன்பும் பற்றுவர் பண்ணமுதே. (சு)

பண்பொடு நண்புமுறப் பண்ணோ டிசையுமுற
வன்பதி கந்தகல வருளொளிர் வான்சுவையைத்
துன்ப மியாவுமறத் தொண்டுப டும்மடியா
ரின்ப மிலாதுகண மிருக்கவும் வல்லவரே. (எ)

பண்டை மறையறியாப் பண்ப தகமீர்க்க
மண்டிய வன்புதவு மருளொளிர் வான்சுவையைக்
கண்டவர் கண்டெரிந்து கண்ணி னொளியதுவே
கண்டி னினுமினிது கண்டவர் கண்டிடிலே. (அ)

விட்டவர் தம்முளமும் விடாதவர் தம்முளமு
மட்டொளிர் பூவதென வருளொளிர் வான்சுவையைத்
தொட்டவர் நீதியது தொட்டு மயிர்ப்புளகந்
தொட்டரு டொட்டின்பந் தொட்டிடு வார்துணிவே. (கூ)

கூர்த்த மறைசைவங் கொண்ட பொருள்களொரு
வார்த்தை யிலாமனத்தி னுள்ளொளிர் வான்சுவையைப்
பார்த்தவர் பாராமற் பார்த்த கணுமமுங்கிப்
பார்த்த பொழுதின்பப் பாழ்வெளி பற்றுவரே. (൭)

திருச்சிற்றம்பலம்.

## 60. ஞானவானந்த நாடு.

உள்ளச் செய்யிற் கள்ளக் களையை யொருங்குண்ணு
மள்ளற் செந்தேன் வெள்ளம் பாயு மருணாடு
உள்ளக் குழைவும் வெள்ள விழியு முடைத்தாகித்
தெள்ளித் தெளிவார் மெல்லப் புகுந்து திளைப்பாரே. (க)

எங்கும் மருளு மெங்குஞ் சுகம தெங்கெங்கு
மங்கே யொளிரு மங்கா வாழ்வா மருணாடு
துங்கந் தருநெஞ் சோடு மகிழ்ந்து தொழிலோய்ந்திட்
டெங்கெங் கங்கா யிருப்பா ரோடி யிருப்பாரே. (உ)

சத்தாய்ச் சித்தாய்த் தானு யெங்குந் தணவாதே
யத்த னன்னை யெவ்வுயிர்க்கு மாகு மருணாடு
கற்று ரோடுங் கற்றிட் டாடிக் கசிவுள்ளம்
பெற்று ரன்றி மற்றுர் கொள்வார் பேசீரே. (ந)

கவலை யிடித்துக் கசிவா மாரி கடிதெய்தி
யவலம் போகச் செந்தே னூற்று மருணாடு
சவலைச் சமயந் தள்ளி யுள்ளத் தருக்கோடச்
சிவனு முளக்கண் சேர்ந்தா ரன்றிச் சேராரே. (ச)

கருணைக் கரும்புங் குழைவாம் வருக்கைக் கனிஞான
வருணக் கொக்கின் கனியும் பெருகு மருணாடு
தருணச் செவிபொன் மலபா கங்க டான்வாய்த்துள்
ளிருளைக் கெடுத்திட் டருளைப் பெறுவா ரியைவாரே. (ரு)

கதியாங் காவுங் கதறுக் கடலுங் காலின்றி
யதிரா நடையும் பெருகி யொளிரு மருணூடு
முதிரும் பருவம் வரப்போய் வாழ்வை முடித்தொட்டிச்
சதிரோ டுறைவார் பெறுவா ரன்றிச் சார்வாரே. (சு)

உயராக் கரையுந் தாழா வாறு முடைத்தன்றி
யயரா வயர்வா மேடை பெருகு மருணூடு
மயலா யருண்மேன் மகிழ்வாய்க் கண்டார் பான்மன்னிச்
செயல்போய் நின்றார் பெறுவா ரன்றிச் சேராரே. (எ)

வாரா மணமுந் தீரா விழைவு மகிழ்ந்தென்று
மாராக் காதல் பெருகி யொளிரு மருணூடு
பாரா ரறியாக் குழைவா மாழி படிந்தங்ங
னேரா வோர வுறுவார் புகுந்திட் டொளிர்வாரே. (அ)

தன்னு லறியாச் சாரல் வாழுந் தயவாமி
னண்மி யாடிப் பாடி மகிழு மருணூடு
மென்னு லுன்னு லென்றென் னுளு முரைசெய்பு
மின்னு விகந்தா ரென்னு ளும்போ யிருப்பாரே. (கூ)

ஊரு மின்றிப் பேரு மின்றி யுறவாவா
ராரு மின்றிப் பெருவாழ் வளிக்கு மருணூடு
பாரும் விசும்பு மெல்லா வுலகும் பகையாகிச்
சாரு முளத்த ராரு மென்றுந் தணவாதே. (ய)

திருச்சிற்றம்பலம்.

சகசானந்த வுல்லாச வாழ்வு அதிகாரம் கூ0-க்குத்

திருப்பாட்டு கூக0.

# உ. மலபரிபாக வாழ்வு.

## 1. பரிபாகங் கழறல்.

பொய்யென் று கண்டு புவிதன்னைத் தானிழந்தார்
மெய்யென் று கண்டு வினைவ றுடங்குமடி. (க)

சொற்றிரக்க மற்றுத் துணிமேல் விருப்பற்று
வெற்றுரக்க மற்று வெருட்சி மிகுக்குமடி. (உ)

ஆகத்திற் பற்று மழியு மழன்றுவருந்
தாகத்தைப் போலவோர் தாக மெடுக்குமடி. (ந)

அச்ச மடியுமடி யபிமான நீங்குமடி
பிச்ச ரிவரென்னப் பெருமை யழியுமடி. (ச)

ஆரியப்பேய்ச் சாதி யழிந்து வருவதன்றிக்
காரியப்பேய்க் காணி கடாவுதலுங் காணுமடி. (ரு)

சோம்பலுஞ் சோர்வுந் தொடங்கி வருவதன்றித்
தாங்க வரிய தளர்ச்சி பிறக்குமடி. (சு)

நித்தந் திகைப்பு நிலைத்து வருவதன்றிப்
பத்தியு மன்பும் பழக்கம் பறிக்குமடி. (எ)

ஊரழியும் பேரழியு மூணுசை யைவளர்க்கும்
வேரழியு முள்ளம் வெதும்ப றுடங்குமடி. (அ)

பிணையற் றிருந்துவிடப் பேராசை கொள்ளுமடி
துணையற்றார் போலச் சுழன்று மறுகுமடி. (கூ)

நின்றதே நிற்பு நிலையே நிலையுமாய்ச்
சென்றதே செல்லாய்த் தியக்க மிகுக்குமடி. (க0)

தனித்திட் டழியாமற் றுனிருந்த வூரை
யனித்தியச் செந்தீக்கதிரை யாக்குதலுங் காணுமடி. (கக)

உள்ள முருக்குமடி ரோமஞ் சிலிர்த்துக்கண்
வெள்ள மெடுக்குமடி வீழ்ந்து புரளுமடி. (கஉ)

விதிர்க்கும் பரக்குமடி மெய்நடுக் கங்கொண்டு
துதிக்குங் களைக்குஞ் சுகிக்குமந்தச் சோர்விலடி. (கந)

நீதி பெருக்குமடி நெஞ்ச நிலைத்துளத்திற்
சோதி பெருக்கித் துயர மழிக்குமடி. (கச)

எவ்வுயிருந் தன்னுயிர்போ லேகமாய்க் காணுமடி
யவ்வுயிருக் குள்ளே யருட்பிரபை தோன்றுமடி. (கரு)

ஈய்க்குங் கடையாகி யெங்கு முலாவுமடி
நாய்க்குங் கடையாகி நான்போ யொளிருமடி. (கசு)

ஓசை தொடங்குமடி யூனின் விருப்பாகி
யாசை தொடங்கி லருட்சி பிறக்குமடி. (கஎ)

உள்ளத்தை மெல்ல வொருக்கு மொருக்கதனிற்
கள்ளத்தைக் காணிற் கசிவு பெருக்குமடி. (கஅ)

அன்று தொடங்கி யலைக்கும் பிணியகற்ற
லென்று பெறுவமென வேங்கி யிருக்குமடி. (ககூ)

பொய்யன்பு நீங்கிப் பொருள்கண் டிருக்கின்ற
மெய்யன்பர் செய்திமேல் வேட்கை மிகுக்குமடி. (உ0)

அருள்கண் டொருக்கா லமிழ்ந்துவமோ வானந்தப்
பொருணின்ற சாகரத்தி னென்று புலம்புமடி. (உக)

நன்றுதீ தொத்திருக்கு ஞாயமாம் வீதிதனி
னென்றுபோய் சும்மா விருப்பமென வேங்குமடி. (உஉ)

கவலையற்ற சிந்தையரைக் கண்டு நமக்கிவ்
வவல மற்ற வாழ்வென் றகப்படுமென் றேங்குமடி. (உங)

நில்லாம னிற்குமடி நெடுநேர மூச்செறிந்து
சொல்லாமற் சொல்லுகின்ற தொல்லுலகந் தோயுமடி. (உச)

அன்பருண்ட செந்தே னடியேனு முண்டுவிடி
னென்குறையு மீசருக்கென் றேங்கி யிருக்குமடி. (உரு)

நெருப்பி னிருந்தார் நிழலி னொதுங்குவபோற்
கருப்பைவிடுத் துள்ளத்தைக் காணத் தவிக்குமடி. (உசு)

நியமங்க ளெல்லா நிலைகுலைந்தே நிற்குமடி
பயமங் கிலாமற் பளிச்சென் றெரிக்குமடி. (உஎ)

செய்ததுஞ் செய்யாமற் செய்தது வும்நீங்கிச்
செய்யாமற் செய்த திரளுங் கருத்தினடி. (உஅ)

காலங் கடக்குங் கடும்பசிக ளோங்கிவிடின்
ஞாலந் தெரிந்ததற்கு நாய்போ லருந்துமடி. (உகூ)

திக்கு மறக்குமடி தேயங்க ளோடுமடி
பொக்கம் பறக்குமடி புன்மை யொருக்குமடி. (௩0)

கள்ளச் சுசியைக் கடிந்து வெருட்டுமடி
யுள்ளச் சுசியென் றேங்குமுள மென்குமடி. (௩க)

புகழாப் பொருளாசை பூண்டு புலம்பும்போ
திகழா திருக்குநா ளின்னுநா ளேயுமடி. (௩௨)

நகைப்புத் திரட்சி நயத்தைப் பயக்குமடி
யுவப்போ டுங்கண்ணீ ரொழுகுமடி யொண்ணுதலே. (௩௩)

அடி—மகடூஉமுன்னிலை. அட, அடா—தோழன் தாழ்ந்தோன் இவர்களை விளித்தற்கண் வரும் இடைச்சொல். இகழ்வு வியப்புக்களின் குறிப்பு. இவ்வாறு கீழ்நின்ற அதிகாரங்களிலும் வந்துள்ளன. சில பிரதிகளில் அடி, அட எனவே எங்குங் காணப்படும்.

திருச்சிற்றம்பலம்.

## 2. இன்பசாகரத் தமிழ்ந்திளைத்தல்.

பவத்துன் பார்க்கும் பருஞ்சென் மறுமை
யுவப்பாந் தெண்கட றுவைப்ப மொண்டிட்
டனித்திய மின்ன வினிப்புற மின்னக்
கேள்விக் காலுறப் பாழைம் புலனை
யடக்கு மிடிக டுடைக்கி யார்ப்ப
மெய்ச்சிலிர்ப் பென்னு முட்குளி ரெடுப்பச்
சொரியுங் கண்மழைப் பெரிய கங்கையி
னன்பாலிப் பரம விண்பாய் வாளை
கருமக் கதலி சாடி யருமை
மாயைப் பூகஞ் சாயத் தள்ளி
யாணவ வருக்கைத் தாணுவை மோதிக்
களிக்கு மருளூர்க் கண்ணுத றன்னை
யளிக்கு மளியை யொளிக்கு மொளியை
யுள்ளத் தொளிருங் கொள்ளைக் கதிரை
மனப்பசை மண்ணு நினைப்பருந் தேனை
யன்புல னகன்ற வின்புறும் வெளியை
நாதங் கடந்த நல்லரும் பொருளை
வேதங் கடந்த மெய்ஞ்ஞா னத்தை

விருப்பு வெறுப்பு விட்ட வெளியை
யிருப்பற் றிருந்த வின்பத் தேனை
யெல்லாம் பொறுக்கு மின்பத் தூணைக்
கல்லா ருள்ளங் காணுக் கண்ணை
வானத் துறைவார் மன்னு மணியை
ஊனைக் கடந்தா ருண்ணு மூனை
ஞான பூதரத் துச்சியி னட்பை
தானற நிற்பார் சாயு மேடையை
நீத்தா ரெல்லாம் நின்று குலாவி
வீற்றிருந் தொளிரு மேல்வீ டதனை
யென்று மிறவா திருக்கு மிருப்பை
யொன்று முதவா துதவுந் தருவைக்
கண்டா ரறியுங் காணுக் காட்சியை
விண்டா ரறியா மிளிரா மிளிர்வை
யுள்ளங் குழையா ருண்ணு வமுதைக்
கள்ளங் கடந்தார் காணுங் கனியை
யசையா திருந்தங் கசைக்கு மசைவை
யிசையா திசைவா ரெய்ப்பினின் வைப்பை
மதிப்பவர் மனத்தி னுதித்தொளிர் விளக்கைக்
கரண மெல்லாங் கடந்த வானை
முரண மலக்கான் முறிக்குங் கரியை
யற்றவ ருள்ளத் தடங்கும் பரப்பை
மற்றவ ருள்ள மடங்கா மலையை
நின்று விருக்கு நிறைந்த சுகத்தைக்
குன்று தொளிருங் குணப்பொற் குன்றை
யுருக்கு முள்ளத் திருக்குங் கரும்பை
யடியா ருள்ளங் குடியா மளியைக்
காண்பதெக் காலமென் றென்னுண்
மாண்பசி யுடையான் மனதொத் தனவே. (க)

திருச்சிற்றம்பலம்.

## 3. தானறக் குழைந்த தண்ணமுது.

உற்றிடத் திருப்பீ ரென்று முருதிடத் திருக்க மாட்டீர்
கற்றிடத் திருப்பீர் தன்னைக் கழன்றிடத் திருப்பீ ரன்பு
பெற்றிடத் திருப்பீர் காயம் பெற்றிடத் திருக்க மாட்டீர்
வைத்திடத் திருப்பேற் கெற்றே வல்வினை தொடர்ந்த வாறே. (க)

சகலத்தின் விட்டா லங்ஙன் சாருவன் கள்ள வீடா
மகலத்தின் விட்டா லங்ஙன் மருவுவ னன்றி ஞானக்
ககனத்தின் வைத்தா னின்னைக் காணுவன் செயலற் றென்னை
யிகவிட்டிட் டிடும்பை யீத லெவ்வண மீந்த வாறே. (உ)

பத்தியு மறிவீ ரன்பின் பாவையும் பதிக்க வல்லீர்
வைத்தது முள்ளீ ரொன்றும் வைப்பது மற்றீ ரெல்லாச்
சித்தியு முள்ளீர் தோன்றாத் திறங்களுந் தானே யுள்ளீர்
புத்தியி லேற்குத் துன்ப மெவ்வணம் புகுந்த வாறே. (ங)

தலைமையு மில்லே னென்றுஞ் சார்வது மில்லேன் சாரு
நிலைமையு மில்லே னேடி நிற்பது மில்லேன் கற்குங்
கலைமையு மில்லேன் காணுங் காதலு மில்லேன் சற்றும்
வலிமையி லென்னைத் துன்ப மெவ்வணம் வதைத்த வாறே. (ச)

வேட்டிட மில்லீர் வேளா வெள்ளிட மில்லீ ரொன்றுங்
காட்டிட மில்லீ ரோடிக் கருதிட மில்லீ ரொன்றுந்
தேட்டிட மில்லீ ராளும் பண்டங்கள் போலச் சென்றே
போட்டிடத் தடைவேற் கச்ச மெவ்வணம் புகுந்த வாறே. (ரு)

பாடுண ராதே னுள்ளப் பசியுண ராதே னுள்ள
வீடுண ராதே னென்றும் விரகுண ராதே நிற்கு
நீடுண ராதே னின்னை யன்றியென் னுரு மென்னே
நாடொறு மைவர் கூடி நலித்திடப் பெற்ற வாறே. (சு)

பாழுக்கு ணில்லீ ரென்றும் பாழுக்கு ணிற்பீர் வாடு
மூழுக்கு ணில்லீ ரென்று மூழுக்கு ணிற்பீ ரும்மால்
வாழ்வுக்கு ணின்று நாளுந் தாழ்வுக்குள் வதிதல் செய்யு
மேழைக்குப் பிறவி நோய்க ளெவ்வணம் புகுந்த வாறே. (எ)

தயவினுக் கியானூர் நல்ல சதிரினுக் கியானூர் செய்யும்
புயவலிக் கியானூர் செய்ய போதத்துக் கியானு ரந்தோ
குயவர்க்கு மண்ணை யொத்த கொள்கையென் கொள்கையானூற்
பயமிக்க காயத் துன்பம் பதிந்ததெற் கேய்ந்த வாறே. (அ)

மாதினை யுடையே னென்பீர் மக்களைப் பெற்றே னென்பீர்
தீதினை விலக்க வல்ல செய்தொழி லுடையே னென்பீர்
நீதியை யுடையே னென்பீர் நீங்கிடாப் பவத்துன் பாகும்
வேதனைக் கிலக்கா யென்னை விட்டவா றெந்த வாறே. (கூ)

அன்றுநா னறிய கில்லே னுக்கையை யடியேற் கீயு
மின்றுநா னறிய கில்லே னிழுத்துநீர் செய்தா லன்றி
யொன்றுநா னறிய கில்லே னுன்வினை யென்றென் றென்னைக்
கொன்றவா றெந்த வாறே கூறுவீர்க் கோது வீரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 4. ஆனந்த வுருக்கத் தண்மல்.

திருகிப் பொக்க மிகுந்து சிறந்துளங்
கருகிச் சிக்கறன் கட்பார்வை யாஞ்சுகம்
பெருகித் துன்பங்கள் பேர்க்கும் பொருளுக்கே
யுருகிக் கண்கணீ ரூற்றுமென் னுள்ளமே. (க)

துக்க சாகரந் தோன்றுச் சுகக்கட
லெக்கி யெக்கி யெழுந்தெழுந் தெங்கணுஞ்
செக்கர் வானொப்ப நின்றசெந் தேனுக்கே
நெக்கி நெக்கி யுருகுமென் னெஞ்சமே. (உ)

ஆக்க நல்குர வாருப் பெருங்கலை
சாக்கி ராதி சகலஞ் சகசமோ
டுக்க மியாவையு மோட்டும் பொருளுக்கே
யேக்க மாகி யிரங்குமென் னுள்ளமே. (ங)

வருவ தற்றுப்போக் கற்று மலைவுளந்
தெரிவ தற்றுத் தெரியாத் தெரிவினைப்
பிரிவ தற்றுப் பிறங்கும் பொருளுக்கே
யுருகி நெக்கி யுடையுமென் னுள்ளமே. (ச)

தேனின் பாகுங் கனியுந்தித் தித்திடு
மானின் பாலு மமுதொடு கட்டிக
டானுங் கைக்கத் தருமுட் பொருளுக்கே
யூனு மென்பு முடைத்துள் ளுருகுமே. (ரு)

குழைவு மன்புங் குலைதலுங் கம்பமும்
விழைவு போமுளம் வெம்பித் ததும்பிக்கண்
மழையு மோட்டி வரும்பெருந் தேனுக்கே
யிழையு மோடி யிருந்துள் ளிடியுமே. (சு)

உறவொ டும்பகை யும்மொளி யும்மிருள்
விறலும் வெற்றியுந் தோல்வியு மேதினி
மறமு மோட்டி வரும்பெருந் தேனுக்கே
யறவு மன்பொ டளியுமென் னுள்ளமே. (எ)

கண்ணிற் காணு வுருவம்போ னுன்கினுந்
துன்னிக் காணு விரதமத் தூய்மன
மெண்ணக் கூடாப் பரித்தசெந் தேனுக்கே
கண்ணிக் கண்ணிக் கழியுமென் னுள்ளமே. (அ)

செம்மை யற்ற சிவப்பென மற்றதன்
றன்மை யற்றதோர் தன்மை யெனப்பரந்
தம்மை காட்டு மரிய பொருளுக்கே
யுண்மை வைத்துள் ளுருகி யுடையுமே. (கூ)

பார்வை தீர்க்கின்ற பார்வையு மோசையிற்
சேர்வை தீர்க்கின்ற சேர்வையுந் தந்துளத்
தோர்வை யோட வுரிய பொருளுக்கே
யார்வ மாகி யழுங்குமென் னுள்ளமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 5. திருவருளைச் சேரத் திகைத்தல்.

வேற்றுரு வதனிற் றேய்ந்திடா மெய்யை
விழைவிலார் தமைவிழை வதனைப்
போற்றிடு முயிரைக் காத்திடுந் தண்ணைப்
புந்தியைக் கடந்தொளிர் பொற்பை
யூற்றிருந் தூற்று முள்ளத்துள் ளமுதை
யுளவிரும் புருக்கிடு நெருப்பை
மாற்றிகந் தொளிரு மின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (க)

அன்பர்க ணீறு பூசிமுப் பொறியு
மகழ்ந்தெடுத் தருந்திடுந் தேனைத்
துன்பிரு ளகற்று ஞானசூ ரியனைத்
தோய்வறத் தோய்பவ ராடு

மின்புறு ஞான கங்கையை யுள்ள
மெங்கணுங் காட்டிடுங் கண்ணை
வன்பிகந் தொளிரு மின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (உ)

உரைப்பவ ருள்ளத் தொளிர்செழும் பாகை
யோய்வற நினைபவ ருள்ளைப்
பரிப்பினை யிகந்தார் தமைப்பரிப் பதனைப்
பங்கயன் மாலறி யாத
விருப்பினை யன்பர்க் கெளிவருஞ் சுவையை
யிருந்துல கெங்கணுங் கடந்து
மரிப்பிலார் பரவு மின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (ந)

நினைப்பற நினைப்பார் நெஞ்சுறுங் கனியை
நெக்கற நெக்குமுண் ணிதியைத்
தனித்திடத் துதவுந் தாயைமா யங்க
டாழ்ந்தவர் மேல்வருஞ் சதிரைக்
குனிப்பொடும் பெருகு மானந்தக் கூத்தைக்
குணங்குறி யிறுங்குணக் குன்றை
மனத்தொடர் பறியா வின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (ச)

கருப்பிணி யகற்றும் வயித்தியன் றன்னைக்
கவலையை யிடித்திடுங் கல்லை
யுருப்பொறை தணிக்கு ஞானவொள் வாளை
யொருப்படு மனத்தொருப் பட்டு
விருப்பொடு மிளிரும் வெறுவெளி யதனை
விட்டவர் தமைவிடாத் துப்பை
மருட்கொளி பெருக்கு மின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (ரு)

அறிவதற் கரிய வறிவினைத் தன்ற
னறிவினு லறிவரி யதனை
யறிவறி யாம லறிபவ ருளத்து
ளறிவொளி யமுதமா னவனை
யறிவிகந் தறிவோ டிருந்தறி பவருக்
கறிவினை யளித்திடு மறிவை
மறுவறுந் தெளிவை யின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (சு)

சுத்தனை நித்த முத்தனை யென்றுஞ்
சுதந்தர வாழ்வையை வருக்குங்
கத்தனைத் தாளிற் கண்ணிடுங் கண்ணன்
கண்ணெனக் கண்ணிடுங் கண்ணைச்
சித்தசன் றனக்குத் தீயையென் றனக்குத்
தீங்கனி யாஞ்செழும் பாகை
மத்தனைச் சிவனை யின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (எ)

கண்டிட வரிய காட்சியைக் காணுக்
காட்சியைக் கண்டவ ரெல்லாம்
விண்டிட வரிய விளைவினை விளைவின்
விளைவினின் விளைவினின் விளைவைப்
பண்டறி யாத பண்பினைப் பண்பிற்
பண்பினிற் பண்பினிற் பண்பை
மண்டிய கருணை யின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (அ)

எய்ப்பினின் வைப்பை யிரங்கிடு முளத்தை
யினியதி னினியதி னினிவைத்
துப்பினிற் றுப்பைச் சுடரினிற் சுடரைச்
சொல்லினிற் சொல்லினை யுள்ள
நிற்பினி னிருப்பை நிலையினி னிலையை
நெற்றியிற் கண்ணுமொன் றுளதை
வைப்பினின் வைப்பை யின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (கூ)

செய்யனைக் கரும்பைக் கட்டியை யுள்ளத்
தேறலைத் தீர்வற நினைப்பா
ரையனை யளிந்த கருணையை விளிந்தோ
ரகத்தினிற் புகுந்தொளி ரன்பைப்
பொய்யினி னிருந்து பொய்யினைப் போக்கு
மெய்யினைப் பொய்யரிற் பொய்யை
மையலை யுடற்று மின்பவுள் வாழ்வை
வஞ்சனே னெஞ்சுகந் திலனே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 6. அருட்காசையாகி யழல்.

உளமெலாம் வெதும்பப் புளகமெய் யரும்ப
ஒவொள்ளிய கண்கணீர் ததும்பக்
களமற வின்பங் கண்டுகண் டடியேன்
களிப்பறக் களிக்குநா ளிலையோ
வளவறு முயிரு மளவறு முலகு
மம்பர்நான் குறைவது போல
வளமொடு மருவா வணமுற மருவி
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (௧)

அருளுறு நின்னு னினைப்பற நினைக்க
வகத்தெழுஞ் சுகச்செழுந் தேனை
யிருளற வடைந்து தோய்வறத் தோய்ந்தங்
கிருப்பற விருந்துவா ழேனே
தெருளொடு தெருளுந் திறமொடு திறமுஞ்
சிந்தைதீர்ந் திட்டசிந் தனையு
மருளறு மருளு முளவெளி யோடு
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (௨)

உனையுள நினைத்துப் புலனிற வழித்திட்
டுளம்விடுத் துரையெலாங் கெடுத்துத்
தனையிற வுடைத்துள் ளொளிமிக வெழுப்பித்
தற்பர மெப்பொழு துறுவே
னனலொடு மொளிரிந் தனமென விருந்து
மவரவர்க் கப்புற மாகி
மனவிரு ளிரிய நிலைதலை யுதவி
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (௩)

கோவியாய்க் கோறன் மிகுத்தொரு காலுங்
குழைவுறுக் கிழவுள முடைய
பாவியே னுள்ளந் தாவிடா திருக்கப்
பண்ணிடி னென்னபா றிடுமோ
வாவியா யாவிக் காருயி ராயவ்
வாருயிர்க் கமுதமு மாகி
வாவிரே ணுமை லன்னிய மாகி
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (௪)

தன்செய லழியத் தந்திடு நினைவைத்
தகர்த்திடும் பேரொளி யதனுள்
விஞ்சிய வின்ப மெழுந்தெழுந் தொளிர
மேவியென் னுவிபோ வேனே
வஞ்சினை யஞ்சி யாறினை நாறி
யன்பொடு வன்பையு மறுத்து
வஞ்சனை யிருளு மாயையு மடிய
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (ரு)

உடலது மறந்திட் டுயிரையு மறந்திட்
டுணர்வுட னுரையெலா மறந்து
தடவருள் மறந்திட் டின்பசா கரத்துட்
டனைமறந் தினிதுவீற் றிரேனே
விடமெலா மிடிய வெதிரெலா மழிய
வெங்கணும் வெறுவெளி யாக
மடமெலா மகல நடனநீ செய்து
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (சு)

இருந்திருந் துனதா ளின்பமே யறியா
வேழையர் போலவிவ் வுலக
மருந்துவ தல்லாற் செயலறச் செய்தங்
கருட்கட லமுதருந் தேனே
வருந்திடா நினைவு முதவியந் நினைவின்
மாறிடா வின்பமுந் தந்தே
யருந்திடா நினைவு மிருந்திடச் செய்து
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (எ)

அனைத்துள பவமு மொன்றினுக் கனந்த
மடுத்தடுத் தெடுத்தலைந் தேனுக்
கினிப்பிற வாத வரந்தர விசைந்தா
லென்குறைந் திடுவதோ வறியே
னினைப்பரு நினைவா யளப்பறு மளவாய்
நிலைப்பரு நிலையதாய் மூகர்
மனக்கரி யதுவாய்ச் சுமக்கெளி யதுவாய்
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (அ)

அத்தனு மனைபு மாயுளத் திருந்து
மருந்துணை நாமென வறிந்து
மித்தனை காலம் படுந்துய ரறிந்து
மிரங்கிடா திருத்தனிற் கழகோ

முத்தனு யெவர்க்கு முதல்வனு யன்பு
முளைத்திட முளைத்திட வொளியாய்
வத்துவா யதெலா மிற்றிடின் பதுவாய்
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (கூ)

நினைப்பவ ருளத்து நீண்மணி விளக்கே
நெஞ்சிரு டறக்குமா தவனே
முனைத்திடு மனத்தி னுரைப்பரு மிருளே
முத்தியிற் றித்தியா நின்று
தினத்தொலை யாத செழும்பெருங் கனியே
தீவினைக் காவதோர் மருந்தே
மனத்தலை வதனை யெனக்கொழி யாயோ
மலைவறு முளத்தின்வாழ் சுவையே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 7. என்று கிட்டுமென் றிரங்கல்.

உள்ளிலே னுள்ளா வண்ண முள்ளியுள் ளுருகி யுள்ளந்
தெள்ளிலேன் றெள்ளா வண்ணந் தெள்ளித்தெள் ளமுத வாரி
மொள்ளிலேன் மொள்ளா வண்ண மொண்டுதான் முகந்துண் டன்பை
யள்ளிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (க)

நேடிலே னேடா வண்ண நேடியோ டாம லோடிக்
கூடிலே னின்னை யுள்ளங் குழையாமற் குழைத்துக் கொஞ்சிப்
பாடிலேன் பாடு போகப் பதைத்துளம் பதறி நெக்கி
யாடிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (உ)

எறிகிலே னுலக மன்பர்க் கிணங்கிலே னேவற் சற்றும்
பிறிகிலே னுடல மன்றிப் பேய்பிடி யுண்டார் போலச்
செறிகிலேன் சித்தி யாமற் சிந்தித்துச் சித்த மாள
வறிகிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (ந)

தேய்கிலேன் யான்றுன் றேய்ந்து திரிமல மிறந்திட் டன்பு
தோய்கிலேன் றோயா வண்ணந் தோய்ந்தரு டோய்ந்திட் டின்ப
மேய்கிலே னுலக மஞ்சி யினிப்பிற வாத வண்ண
மாய்கிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (ச)

தேறிலே னுள்ள மெய்கள் சிலிர்த்திலேன் கண்ணீ ராறாய்த்
தூறிலேன் குழறச் சொற்கள் சொல்கிலேன் றுணையொன் றில்லே
னூறிலே னுளத்து வின்ப முளமெங்கு மோடா வண்ண
மாறிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (ரு)

கற்றிலே னடங்கு நூல்கள் கான்றசோ ருக வுள்ள
முற்றிலே னுலகந் தீரா துருகிலேன் மனத்தி ருக்கைச்
செற்றிலே னின்ப வெள்ளந் திளைத்திலேன் றுரியந் தீர
வற்றிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (சு)

துஞ்சிலே னுலக நின்கண் விழித்திலேன் றுலங்க வந்தோ
வெஞ்சிலேன் சங்கற் பத்திற் கிளைத்திலேன் யானென் வீர
நெஞ்சிலே னுசை தீர நின்றிலேன் பிறவித் துன்ப
மஞ்சிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (எ)

நீள்கிலே னின்பா னெஞ்ச நினைப்பற நினைந்திட் டந்தோ
மாள்கிலே னுள்ளம் பொல்லா மாக்கடஞ் சங்க மெல்லா
மீள்கிலே னன்பர் கூட்டம் விரும்பிலேன் புலனேற் காளா
யாள்கிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (அ)

தூக்கிலே னிகப ரத்தைத் துடைத்திக பரத்தை நாடித்
தேக்கிலே னமுத முள்ளஞ் செற்றுவீற் றிருக்கும் வாழ்வை
நோக்கிலே னுலக நோக்கி னுழைந்திடு மனத்தை நின்பா
லாக்கிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (கூ)

தேற்றிலே னுளமிவ் வாழ்வு செவ்விதன் றென்று ஞான
மேற்றிலே னருளா சான்பா லெய்ப்பினின் வைப்பே யென்று
போற்றிலேன் பிறவி யாகும் புண்ணினி னண்ணி நோத
லாற்றிலே னென்செய் கேனியா னருளமு தாய கோவே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 8. மெய்ப்பொருளைத் தழுவ விரைதல்.

ஆற்றுக் குழைவோ டகமகிழ்ந்து மெய்சிலிர்த்திட்
டூற்று விழிநீரோ டோய்வா யுயிர்யாவுங்
காத்தாளு மீச னிறைந்தொளிருங் கழலிணையைப்
பார்த்தா லொழியப் பரதவிப்புப் பாறுதே. (க)

தொண்டாகிப் பேரன்பர் சொற்கியைந்து நின்றேனே
தண்டா விருப்பகலத் தாங்கா வெறுப்பகல
விண்டா ரறியா விமலச் சிவன்பாதங்
கண்டா லொழியக் கவலை தெளியாதே. (உ)

ஓடிடா வுள்ளத் துருக்கா துருக்கிவரும்
வாடிடா வன்பாய மனவாக்குக் காயத்தாற்
றேடிடா வீசன்றன் றித்திக்கு மெய்ப்பாதங்
கூடினா லன்றியென் னுள்ளங் குளிராதே. (ந)

ஆய்ந்தாய்ந் துளமவிழ வங்ஙனிருந் தேகருத்து
மோய்ந்தோய்ந் துடைந்தொழிய வுள்ளிருளை யன்பருக்காக்
காய்ந்தருளின் கண்ணீயு மீசன் கழலிணையைச்
சேர்ந்தா லொழியத் திகைப்புத் தெளியாதே. (ச)

அன்றோடி துவரையு மல்ல லுழன்றதெலா
மின்றோட வேண்டு மென்ற னுளமவிழப்
பொன்றாத வீசன் புகலாப் பதக்கட்டி
தின்றா லொழியத் தியக்கந் தெளியாதே. (ரு)

வருந்தா மனமோடு மாறா மகிழ்ச்சியொடும்
பொருந்தாப் புலனோடும் பூணாச் சமாதியொடு
மிருந்தாலு மீச னிணையடியா முள்ளூரி
விருந்தா லொழிய வெனக்கவத்தை நீங்காதே. (சு)

தொடர்ந்த மனமோடுஞ் சொல்லாத சொற்பொருளின்
மிடைந்த கருத்தோடும் விழையா விழைவோடு
நடந்து தவழ்ந்திருந்து நண்ணுஞ் சிவனுரை
யடைந்தா லொழிய யவலமெனக் ககலாதே. (எ)

முதிர்ந்த வுளமோடு முனைபோன கண்ணோடுஞ்
சுதந்தர மெல்லாமுந் துஞ்சுங் கருத்தோடுங்
கதந்தா னொழியக் கதியீயு மீசன்பால்
வதிந்தா லொழிய மயக்கந் தெளியாதே. (அ)

உன்ன லகல வுரையகல வுன்னியிடு
மென்னதி யானென்னு மிடறகல வெய்தரிய
கன்னல்போ லூறியிடு மீசன் கழலிணையை
மன்னினா லன்றி மகிழ்ச்சி பிறவாதே. (கூ)

மனந்தாழ்வாய்ச் செய்யும் வலிதாழ்வாய் மீறுஞ்
சினந்தாழ்வாய்ச் செய்யுந் தெளிந்த கருத்தாகி
நனைந்தோடுந் தேனிதழி நற்றூரான் பாத
முனைந்தா லொழிய வுறுகணை யோவாதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 9. அருட்டலைவியோடு மருட்டலைவி யழுங்கல்.

பத்தியளித் தன்பளித்துப் பண்பொடுதா கமுமளித்துச்
சித்த சலனத் திருக்கறுக்குந் தெள்ளியனைச்
சற்று நினையா மனம்விழிநீர் தானொழுகா
தெற்றுக்குப் பூசிமுடித் துண்டுடுத்தே னேந்திழையே. (௧)

உள்ளத் துருக்களித்து ரோமச் சிலிர்ப்பளித்துத்
தெள்ளத் திறமளித்துத் தித்திக்குந் தெள்ளியனை
யள்ளிப் பணியா தணைத்து முகவாது
கள்ளப் புலனைக் கருதினேன் காரிகையே. (௨)

நீதி யளித்து நிலையளித்து நிற்குமொரு
வீதியளித் தருள்வெளியின் விட்டருளுந் தெள்ளியனை
யோதி யழைத்துவப்பா யுள்ளத் திருத்தாமற்
றீதி லகப்பட்டுத் தியங்கினேன் சேயிழையே. (௩)

அருளுக் கருளளித்திட் டாருக் குழைவளித்துப்
பொருளிற் பொருளிற் பொருளுதவும் புண்ணியனைத்
துருவிப் பெரியா தரவொடுந்தோட் கொள்ளாமற்
கருவித் திரளோடுங் கைகலந்தேன் காரிகையே. (௪)

ஊனளித்திட் டுள்ளத் தொளியளித்திட் டுள்ளரிய
தேனளித்துத் தேராத் தேர்வருளுந் தெள்ளியனை
நானழுத்தி யுள்ளத்தே நைந்துநைந்து நண்ணும
லேனிழுத்துப் போர்த்தேனிவ் வைம்புலனை யேந்திழையே. (௫)

தாழாத தாழ்வுந் தணியாத பேரன்பும்
வாழாத வாழ்வு மகிழ்ந்தருளு மன்னவனை
வீழாத வீழ்வோடு மேல்விழுந்து நண்ணுமற்
பாழாகு மைம்புலனைப் பற்றினேன் பான்மொழியே. (௬)

கருவருளாய் வென்ற கழியக் கவலையிறத்
திருவருளின் மேடைமேற் றென்றறருந் தெள்ளியனை
வெருளகலப் புல்லி விழைந்திழைந்து மேவாமன்
மருளுலக த்தேய்ந்து மயங்கினேன் வார்குழலே. (எ)

தானந்த மாக்கித் தனக்குள் ளொளியெழுப்பி
யானந்த மாக்க வருளருளு மண்ணறனை
யேனைந் துருகி யியைந்தயர்ந்து மேவாமன்
மானந் துணையாய் மயங்கினேன் வார்குழலே. (அ)

இவ்வுலக வாழ்வை யிடித்துக் கரைத்தூற்றி
யவ்வுலக வாழ்வருளு மானந்த வாரிதியைக்
கவ்வையற நின்று கருதியணைந் தாராமற்
செவ்வையிறுந் தீப்புலனைச் சேர்ந்துலைந்தேன் தேன்மொழியே. (கூ)

அளித்தருளு மொளித்தருளு மானந்த மாமருளுங்
களித்தருளுந் தந்தருளுங் காண்பரிய வான்சுவையை
விளித்துவிளித் தென்னேர் மெய்சோர்ந்து மேவாமற்
றளிர்த்ததுயர் தரும்புலனைச் சார்ந்தேன் றகையணங்கே. (ம)

திருச்சிற்றம்பலம்.

## 10. தலைவி வாய்விட்டுத் தவித்தல்.

சத்தாவான் சித்தாவா னனந்தந் தானவான்
பித்தாவார் தம்மைப் பிடிப்பான் மிகப்பாய்ந்து
சித்தாக வான்மாத் தெளிவிப்பா னெற்கன்பு
வைத்தா தரவாய் மகிழ மகிழானே. (க)

வரும்போதும் போம்போது நிகழ்போது மன்னியிடா
னுருவாக ஞானகுண மொன்றுமியல் பாயுடையான்
கருவாம் விருப்பாதி கொல்லுங் கடுஞ்சினத்தா
னொருபோது மென்னெஞ் சுருக வுருகானே. (உ)

காண்பானுங் காண்பானுங் காணாத காட்சியுளான்
மாண்புரைய வெங்கு மதியாய் வதிந்தொளிர்வான்
பாழ்ம்புலனோ டேயிருந்துந் தன்னைப் பரப்பிடுவான்
வீண்பணிதா ராமலெனை மேவ நினைவானே. (ங)

உணவாவான் பேரன்பர்க் குள்ளத் துறைந்திருந்துந்
தணவாவான் பேதையர்க்குச் சத்தாதி யாய்வழங்குங்
குணமாகா னுள்ளங் குளிர்க்கு ளிருந்தொளிர்வான்
கணமானு மென்னுட் கனியக் கனியானே. (ச)

கையா னவர்க்கன்பு காணுக் கருத்ததனை
நையான் மனங்கடந்த நாடா னழுக்கோடு
மெய்யா னுலகம் விரும்புயிரை மேல்வீட்டின்
வையா னெனக்கன்பு வையான் மகிழ்வோடே. (ரு)

பற்றேது மில்லாதான் ருனுய்ப் பழகிடுவான்
செத்தாரைத் தின்றிடுவான் றீதுநலஞ் சேராதான்
மற்றுரு மில்லாதான் வாராமல் வந்தொளிர்வான்
சற்றுனு மென்னைச் சருவ நினையானே. (சு)

உள்ளொளியான் பேரொளியா னுள்ளத்துள் ளேயெழுந்த
வெள்ளொளியா னென்னை விடுமொளியா னன்பாகி
யள்ளொளி யானன்றி யமுதவொளி யான்மகிழ்ந்திட்
டெள்ளளவு மென்னே டியைய வியையானே. (எ)

நோக்குவான் கள்ள மறநுங்கு வான்பொருளாய்த்
தாக்குவா னின்ப சமுத்திரமாய்த் தானொளிர்வா
னீக்குவா னென்னை நினைப்பான் றனதுருவ
மாக்குவா னென்னை யணைய வுணரானே. (அ)

உய்ப்பான் பெருநெறியி னேதரிய வுள்ளொளியி
னுய்ப்பா னுளத்திருக்கை யோட்டியிடு முள்ளன்பி
னுய்ப்பான் கவலையற வூட்டுவா னுள்ளமுதத்
துய்ப்பா னெனையமுதத் துய்யா னுவப்போடே. (கூ)

*ஒழிப்பா னொளிக்கு ளொளியைவிடுத் தெனையீர்க்க
நினைப்பா னினையா நினைப்பு நிகழ்த்திடுவா
னினிப்பா னெனக்குள்ளே யெவ்வுருவுந் தானுய்க்
களிப்பா னிரக்கங் கடுகளவு தாரானே. (க0)

உருப்பா னுளத்திருளை யுள்ளுலக மீய
விருப்பா னிரக்க மிகுப்பா ருளத்தலத்திற்
பருப்பான் விருப்பாகிப் பாராமற் பார்க்குமுளத்
திருப்பா னெனதுள் ளிருக்க வியையானே. (கக)

**திருச்சிற்றம்பலம்.**

---

* ஒளிப்பா னென்பதும் பாடம்.

## 11. ஆருமற்றழுங்கி யருளுடன் முறையிடல்.

நன்றெலாந் தீதாய்க் கொள்ளு நாயினே னலங்கு லைந்திட்
டின்றெலா மழுதிட் டாலு மென்னென்பா ரொருவ ரில்லைக்
கன்மிய கருத்த னாகிக் கவலைமேற் கொள்ளு வேனுக்
கென்றரு டருவீ ருள்ளத் திருந்துமென் னென்றி டரே. (௧)

ஒழுங்கினைத் திருக லாய்க்கொள் ளுள்ளம துடையே னென்று
மழுங்கலிற் றலைப்பட் டாலு மளிதரு வார்க ளில்லைக்
கொழுந்துயர்க் கருத்த னாகிக் குலைந்துள நடுங்கு வேனுக்
கிரங்குவ தெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டரே. (௨)

அரும்பிணி யின்ப மாய்க்கொ ளவலவுள் ளுடையே னித்த
மிருந்துய ருழந்திட் டானு மென்னென்பா ரொருவ ரில்லை
வருங்கருங் கருத்த னாகி வாடியுட் டளரு வேனுக்
கிரங்குவ தெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டரே. (௩)

சீற்றம தாற்ற லாய்க்கொள் சித்தம துடையே னென்று
மார்த்துள மழுதிட் டானு மளிதரு வார்க ளில்லைப்
பார்த்திடாக் கருத்த னாகிப் பயமிகுந் துழலு வேனை
யீர்த்திட லெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டரே. (௪)

பொய்யினை மெய்யாய்க் கொள்ளும் புந்திய துடையே னென்று
நைவது தலைக்கொண் டாலு நயந்தரு வார்க ளில்லை
கைதவக் கருத்த னாகிக் கவலைமேற் கொள்ளு வேனை
யெய்திட லெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டரே. (௫)

அயர்ந்திட லுயர்ந்த தாய்க்கொள் ளவலவுள் ளுடையே னென்று
முழந்தழு தயர்ந்திட் டாலு மோயென்பா ரொருவ ரில்லை
யயந்தருங் கருத்த னாகி யல்லன்மேற் கொள்ளு வேனை
யினைந்திட லெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டரே. (௬)

அணங்கினைப் பிணங்கா துட்கொள் ளவலவுள் ளுடையேனைசை
கணங்கொள வலறி னாலுங் கைதரு வார்க ளில்லை
யுணங்கிடுங் கருத்தனாகி யுலைதன்மேற் கொள்ளு வேனை
யிணங்கிட லெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டரே. (௭)

அழுங்கலை யுவப்ப தாய்க்கொள் ளவலவுள் ளுடையே னுள்ளம்
புழுங்கிவீழ்ந் தழுதிட் டாலும் புந்தியை நிமிர்ப்பா ரில்லை
குழம்பிய கருத்த னாகிக் கோதுமேற் கொள்வே னுள்ளத்
தெழுந்திட லெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டரே. (௮)

தேறலை மாறுய்க் கொள்ளுஞ் சித்தம துடையேன் கன்றி
மாறிடா தழுதிட் டாலு மாற்றுவா ரொருவ ரில்லை
மீறிய கருத்த ஞகி வேதனை மேற்கொள் வேனுள்
ளேறிட லெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டீரே. (சு)

அன்பினை வன்பாய்க் கொள்ளு மவலவுள் ளுடையே னென்றுந்
துன்புழந் தழுதிட் டாலுந் துயரந்தீர்த் தருள்வா ரில்லை
வன்புகொள் கருத்த ஞகி மயக்கமேற் கொள்வே னுள்ளத்
தின்பிட லெப்போ துள்ளத் திருந்துமென் னென்றி டீரே. (எ)

திருச்சிற்றம்பலம்.

## 12. உடற்பொறை தாங்கா துரைத்தல்.

விடப்படுங் கான்ற சொன்றி யென்னமே தினிக்கு மாகி
யிடர்ப்படு முலக வாழ்வி னெய்த்திடு மேழை யானேன்
கடற்கையா னீந்து வார்போற் கலங்கினேன் கருணை காணே
னுடற்சுமை தாங்க மாட்டே னுள்ளத்து ளுறைந்து ளீரே. (க)

மாயமே செய்யும் பொல்லா மகளிரோ டுறவ தாகி
ஞாயம்போய் நரகின் வீழு மேழைபோ னலிவ தானே
னேயவோ ரிடமி லாத பரவைபோம் பறவை யொத்தேன்
காயம்யான் றுங்க மாட்டேன் கருத்துறைந் தொளிர்ந்து ளீரே. (உ)

யானென தென்னு நோயி னிருந்திருந் திடிந்து வீழு
நீணில முறையு மேழை நிகரென லானே னந்தோ
வானினைக் கவ்வு வார்போன் மாயையைக் கவ்வி நின்றே
னூனினைத் தாங்க மாட்டே னுள்ளத்து ளுறைந்து ளீரே. (ங)

கருவெடுத் தெறிய வெல்லா வுலகத்துங் கலங்கி வீழ்ந்தேன்
றெருளிடத் துணரு கில்லா வேழைபோற் சிந்தை நொந்தே
னிருளிடத் துறைந்த கண்போ லெங்கணுந் தடவு கின்றே
னுருவெடுத் துலைய மாட்டே னுள்ளத்து ளுறைந்து ளீரே. (ச)

விடம்படு முலக வாழ்வின் மெலிந்துநா டோறு மங்கித்
திடம்படுஞ் சிந்தை யில்லா வேழைபோற் றியங்கு கின்றேன்
படம்படும் பாடு போலப் பறந்துநா னலைந்தே னந்தோ
வுடம்பெடுத் துழல மாட்டே னுள்ளத்து ளுறைந்து ளீரே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 13. திருவருட் கிரங்கிச் சிந்தை தேய்தல்.

நெஞ்சம திளகு மன்பு நெக்குநெக் குருகு மன்புந்
தஞ்செய லழியு மன்புந் தடங்கணீர் பொழியு மன்பும்
வஞ்சனை தீரு மன்பு மன்னுவார் மன்ன நாயே
னெஞ்சிட லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (க)

களித்திடு மன்பு மாசை கலங்கிடக் கொல்லு மன்புந்
தளிர்த்திடு மன்பு முள்ளந் தனித்திடு மன்பு மின்பம்
விளைத்திடு மன்புங் கொண்டு மின்னுவார் மின்ன நாயே
னிளைத்திட லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (உ)

தேசொளி பெருகு வாருந் தெளிவொடுண் மகிழு வாரு
மாசணு காத வின்ப வாரியின் மூழ்கு வாரு
மூசல்போ யொளிரு வாரு மொளிர்ந்துள மகிழ நாயே
னேசற லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (ங)

கைத்திடு முலகங் கைக்கக் கண்டுள மகிழு வாரு
மெய்த்திடு மன்பு கொண்டு விளங்கிடு வாரு மின்பந்
துய்த்திடு வாரு முள்ளந் துலங்கியுண் மகிழ நாயே
னெய்த்திட லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (ச)

தொடர்வொடுண் மகிழு வாருந் தொடர்ச்சிவிட் டுயர்ந்து ளாருங்
கடைபடு முலக வாழ்வைக் கடந்துநின் றொளிரு வாருந்
திடமுறு தெள்ளி யாருந் தெளிந்துள மகிழ நாயே
னிடருற லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (ரு)

தாக்கறு மேடை மீதுஞ் சாந்தமாந் தவிசின் மீது
நோக்கறு நோக்க தாகு நோன்மையுப் பரிகை மீதுந்
தூக்கறு மூசன் மீதுந் துலங்குவார் மகிழ நாயே
னேக்கற லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (சு)

தாமறு நிலாமுற் றத்திற் றனித்துவீற் றிருந்து ளாருங்
காமுறு கண்ணின் மீது கண்டிடுங் குன்று ளாரும்
போமறு பகையி னாரும் புந்தியுண் மகிழ நாயே
னேமுற லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (எ)

புகலிட மேல்வீ டேறிப் பொய்மைதீர்ந் தொளிர்ந்து ளாரு
மகலிடந் தனக்குள் ளாக வயர்ச்சிவிட் டுயர்ந்து ளாருந்
திகழிடப் பதிபெற் றாருந் திகழ்ந்துள மகிழ நாயே
னிகலுற லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (அ)

கைச்சிட வுலக மஞ்ஞை கலங்கிட வினைகள் யாவு
மிற்றிடக் கருணை வெள்ளத் திருந்தொளிர் வாரும் பார்வை
தைச்சிடப் பிறங்கு வாருந் தழைத்துள மகிழ நாயே
னெச்சிட லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (கூ)

துப்பறுந் துப்ப தென்னுஞ் சுவர்க்கத்திற் குளிர்ந்து ளாரும்
பொய்ப்புறம் போக மெய்யிற் புளகம்போர்த் திட்டு ளாரு
மொப்புறு முகம லர்ச்சி யுளாருமுண் மகிழ நாயே
னெய்ப்புற லென்னை கொல்லோ யாவர்க்கு மன்னை யீரே. (ῶ)

திருச்சிற்றம்பலம்.

## 14. அருட்பராமுகங்கண் டழுங்கல்.

தன்னை யழிக்குகிலீர் தாக மெழுப்புகிலீர்
நின்னை யெனக்களிக்கு நீதி தரக்கருதீ
ரின்ன லகற்றல்செயு மின்பநல் லன்பருளீ
ரென்ன கருத்துளுளீ *ரென்னுண் மகிழ்ந்திடவே. (க)

ஓதன் மறத்தல்செயீ ருற்று மிருக்கல்செயீர்
நாத மெழுப்புகிலீர் நாடல் விடுக்குகிலீ
ரேத மகற்றல்செயு மின்பநல் லன்பருளீர்
யாது கருத்துளுளீ ரென்னுண் மகிழ்ந்திடவே. (உ)

வவ்வ லுடைக்குகிலீர் வஞ்ச மறுக்குகிலீர்
செவ்வை கருத்தழியீர் தேக மறத்தல்செயீ
ரெவ்வ மகற்றல்செயு மின்பநல் லன்பருளீ
ரெவ்வண முய்யல்செய்வீ ரென்னுண் மகிழ்ந்திடவே. (ங)

வைப்பது வைக்குகிலீர் வாங்குதல் வாங்குகிலீர்
கைப்பது கைக்குகிலீர் காட்டுதல் காட்டுகிலீ
ரெய்த்த லகற்றல்செயு மின்பநல் லன்பருளீர்
சித்த மிருந்ததெனோ வென்னுள் சிறந்திடவே. (ச)

எட்டனை யன்பருளீ ரீறுல காதல்செயீர்
கிட்டிய நெஞ்சருளீர் கேட்பது மீட்குகிலீ
ரிட்ட மளித்தருளு மின்பநல் லன்பருளீ
ருட்கருத் தென்னைகொலோ வென்னுள் ளொளிர்ந்திடவே. (ரு)

*எனதுள்ள மென்றும் ஒட்டிப் பாடுக.

விருத்தி யுடைக்குகிலீர் விரைவு தடுக்குகிலீர்
வருத்த மறநினைக்கு நினைவு மகிழ்ந்தருளீ
ரிருக்கு முழங்கியிடு மின்பநல் லன்பருளீர்
கருத்து ளடைத்ததெனோ *வென்னுள் களித்திடவே. (சு)

தண்ணென் விதிர்ப்பளியீர் கண்டந் தழுப்பளியீர்
துண்ணென் பசப்பளியீர் தூங்குங்கண் ணீரளியீ
ரெண்ணே யெனநிறையு மின்பநல் லன்பருளீ
ரெண்ண மிருந்ததெனோ வென்னுள் ளியைந்திடவே. (எ)

அன்பருக் கன்பருளு மன்புமு தவிசெய்யீர்
முன்பு விழுந்திறைஞ்சு மின்பமு கந்தளியீ
ரென்புங் கரைத்துருகு மின்பநல் லன்பருளீ
ரன்பு ளிருந்ததெனோ வென்னுள் ளகன்றிடவே. (அ)

கொள்ளுங் கருத்துடையீர் கொள்ளாக் கருத்துடையீர்
துள்ளு மறியுடையீர் தூய்நுதற் கண்ணுடையீ
ரெள்ள விகந்தொளிரு மின்பநல் லன்பருளீ
ருள்ள மிருந்ததெனோ வென்னுள் ளொளிர்ந்திடவே. (கூ)

துதியு மிழியுமிறுஞ் சுகமு முளத்தளியீர்
புதிதும் பழைதுமுறும் புன்மை தவிர்த்தருளீ
ரெதிருஞ் சினமியையா வின்பநல் லன்பருளீ
ரிதைய மிருந்ததெனோ வென்னுள் ளியைந்திடவே. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 15. உய்ய வேண்டி யுடைதல்.

வீழ்வு மவாவுள் விருப்பும் வரத்தன்னை வென்றுவிடுந்
தாழ்வு மவாவரத் தாழாத் திருவரு டானும்வரப்
பாழும் வெளிவரப் பாழும் வெளிவரப் பாழ்வெளியின்
வாழ்வுந் தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (க)

ததியிற் சுழலு மொருமத் தெனவுளந் தான்கலங்கித்
துதியு மிழிவுந் தொடர்ந்தறி யாமையைத் தோயுமுனங்
கதியுங் கதியுங் கதியிற் கருத்துங் கலங்கியிடா
மதியுந் தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (உ)

*எனதுள்ள மென்றும் ஒட்டிப் பாடுக.

களமு மழியக் கவலே யழியக் கவலேயுறு
முளமு மழிய வுளத்தொடு மோடுமோ ரைந்துக்கப்பாற்
குளமு மழியச் சிலம்பொலி குன்றக் கொதிப்படக்கும்
வளமுந் தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (௩)

இகழ்வும் புகழ்ச்சியு மில்லா விடத்தி விருப்பவரைப்
புகழும் பொலிவும் புலனெனத் தோன்றும்பொல் லாங்குமுற்று
மகழு மருளு மருளணேந் தின்ப வரையமரு
மகிழ்வுந் தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (௪)

ஊனந் தருமும் மலமுர்விட் டோடவிவ் வூனினுக்குட்
கானந் தருமருட் பேரொளி வாய்க்கக் கவலேயிறத்
தானுந் தளருஞ்செந் தேனுந் தழைக்குந் தழைப்பினுறும்
வானந் தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (௫)

ஒழுங்கிட வுள்ளமுந் தூறிட வாசை யொருமைக்குளே
முழங்கிட வோசை முழங்கிடும் பேரொளி மோதவென்னே
விழுங்கிட நானும் விழுங்கிட வின்பம் விளேயும்வழி
வழங்கிட நீவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (௬)

ஓகை தரவன் புதயந் தரவவ் வுதயத்துளா
மோகை தரவரு ளுண்மை தரவரு ளோயவெழும்
பாகுந் தரவந்தப் பாகினிற் பற்றும் பதறிவிடும்
வாகை தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (௭)

அகழ்ந்து விடலு மகழாது மன்போ டருள்பெருகிப்
புகழ்ந்து கொளலும் புகழாதும் போகத்திற் போகுமுள
மிகழ்ந்து விடலு மிகழாது மென்னுள மின்னியிட
மகிழ்ந்து தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (௮)

நீக்கப் படாத நினேவு நினேவினி னின்றனவின்
மாய்க்கப் படாத வரமும் வரத்தினின் வந்துவந்து
தாக்கப் படாத தரமுந் தரத்தினிற் றண்ணிணேயும்
வாய்க்கத் தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (௯)

நொந்திடு மோவெளி யென்னுள மாயையி னுங்கிநுங்கி
வெந்திடு மோவினே வெய்யிலி லேமிக வெந்துவெந்து
கந்திடு மோவிருட் கந்தினென் னுவிக் கருட்கரையை
வந்து தரவர வெண்ணு நிராலம்ப வான்சுவையே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 16. அருடரத் தருமென் றழுங்கல்.

தன்னை யுணர்ந்தறியாத் தாழ்வுடை யேனென்னு
ணும்மை நினைத்தறியா நோயுள ளுனுளும்
சொன்ன படிபுரியாத் தூறுடை யேனுனு
மென்னை விடாதிர்கண்டீ ரெதிர்போ முளத்தீரே. (க)

ஆளும் பருவங்கண்டி ராதர வில்லைகண்டீர்
தாளுந் தலைமிசையிற் றந்திட வேணுங்கண்டீர்
மாளு நினைவுந்தந்துள் வந்திட வேணுங்கண்டீ
ரேழை மிகவுங்கண்டீ ரெதிர்போ முளத்தீரே. (உ)

வைக்கப் படாதவன்பும் வைத்தருள் வாங்கறியேன்
றுய்க்கப் படாதசுகந் துய்க்கத் துணிந்தறியேன்
கைக்கப் படாதபுலன் கைக்குங் கருத்தறியே
னெய்க்கப் படாதுகண்டீ ரெதிர்போ முளத்தீரே. (௩)

ஊழைத் துரத்தியென துள்ளத் தொளிருங்கண்டீர்
தாழ்வைத்தந் திவ்வுலகத் தாழ்வைத் தவிருங்கண்டீர்
பாழைத் துறந்தொளிரும் பாழைப் பதியுங்கண்டீ
ரேழைக் கிரங்குங்கண்டீ ரெதிர்போ முளத்தீரே. (ச)

உருக்கக் கருதுங்கருத் துள்ளத் தளியுங்கண்டீர்
திருக்குத் துறந்தெளியேன் றேறக் கருதுங்கண்டீர்
பிரிக்கப் படாதசுகம் பிணிக்கும் பிணிப்பருளி
யிருக்கக் கருதுங்கண்டீ ரெதிர்போ முளத்தீரே. (ரு)

கொதியுளங் கொய்யுங்கண்டீர் குணக்குன் றளியுங்கண்டீர்
துதியு மிழிவுமிறுந் தொல்பதி யீயுங்கண்டீர்
நுதியி னுதியிலென்னை நுணங்கக் குணங்கொள்கண்டீ
ரெதிருற வாருங்கண்டீ ரெதிர்போ முளத்தீரே. (சு)

கனியுங் கனிவுந்தந்து கவலை யழியுங்கண்டீர்
தனியுந் தனியுந்தருந் தகவு மளியுங்கண்டீர்
துனியுந் துகளுமிறுந் துணையு மருளுங்கண்டீ
ரினியரு டாருங்கண்டீ ரெதிர்போ முளத்தீரே. (எ)

அன்னையு மையனையு மகிலத்தொ டொக்கலையும்
பொன்னையு மண்ணினொடும் பூங்குழ லார்தமையுந்
தன்னையுந் தன்னதெனுந் தாழ்வையுந் தள்ளிவிட்டு
மின்ன மிரங்கிரோ வெதிர்போ முளத்தீரே. (அ)

துன்பந் துடைத்தருளுந் துய்யருட் பார்வையுளீர்
வன்பினின் வன்பகலும் வாழ்வும் வழங்குங்கண்டீர்
புன்புற மாவதெலாம் போகப் பொலிந்துவரு
மின்ப மருளுங்கண்டீ ரெதிர்போ முளத்தீரே. (கூ)

பார்த்தரு ளும்படியும் பார்த்தரு ளும்படியுந்
தீர்த்தரு ளும்படியுந் தீர்த்தரு ளும்படியும்
போர்த்தரு ளும்படியும் போர்த்தெளி யேனையுமக்
கீர்த்தரு ளக்கணக்குண் டெதிர்போ முளத்தீரே. (ம)

திருச்சிற்றம்பலம்.

## 17. தனது குற்றந்தெரிந்து தவித்தல்.

அன்பர்நகைப் பாரெனவோ வைய முளனெனவோ
கெம்பறுங்கேள் வித்துணைக்கா திற்ற கிடங்கென்றே
நம்பினவ னன்றெனவோ நல்லநல் லன்பரின்வா
ழும்பர்பிரா னென்னையொருக் காலு மழையாதே. (க)

தனக்குச்செய லுளனென்றே தவப்பகை யின்றென்றே
நினைக்குநினை வுளனென்றே நீதி யிலனென்றே
நனைக்குமருட் கண்ணின்றே நல்லநல் லன்பரின்மன்
மனனெனக்கு மனமொட்டி யருளோ டிலங்காதே. (உ)

அளியகத்தி னிலனென்றே பவத்துன் பிலதாலோ
வெளிமிகுத்திட் டிலனென்றே வீர மிலனென்றே
நளிர்புளக மிலனென்றே நல்லநல் லன்பரின்மன்
ஞளியிருளை யொளித்தருளு மொளிக்கை யுதவாதே. (ந)

வெவ்வுமுள னிலனெனவோ விதிர்ப்பிலன் மெய்யெனவோ
கவ்வையற லின்றெனவோ கனிவு மிலனெனவோ
நவ்விவிழி பொழிவின்றே நல்லநல் லன்பரின்மன்
னெவ்வுலகு மொளிக்குமரு ளென்னுள மின்னுதே. (ச)

உற்றுளொளி யிலனென்றே வொளிக்கு ளிலனென்றே
வுற்றுளியு மொளிப்பவரு மொளிப்ப திலதாலோ
நத்துத விலதாலோ நல்லநல் லன்பர்மனச்
சித்துலகு நற்றேன்க ளென்னுள் திதியாதே. (ரு)

வருக்கமொழித் திலனெனவோ மான முளனெனவோ
பெருக்கமற வருட்கரசைப் பித்து மிலனெனவோ
நரிக்குமுள முளனெனவோ நல்லநல் லன்பர்மன
னிருக்கவுறு முருக்கவொளி யென்று மொளிராதே. (௬)

தீராத துளனென்றோ தீர்ந்த திலனென்றோ
வாராத துளனென்றோ வந்த திலனென்றோ
நாராத திலனென்றோ நல்லநல் லன்பரின்மன்
சாராத வருளுலவிச் சகசம் பிறவாதே. (௭)

இருளாவின் புளனெனவோ வென்னு ளுளனெனவோ
தெருளாத தெளிவின்றோ தெளிவு மிலனென்றோ
நரியாவுள் ளிலனென்றோ நல்லநல் லன்பரின்மன்
னருளாரு மருளுலவி யழகு பொழியாதே. (௮)

ஒட்டாவொட் டிலனென்றோ வுள்ளன் பிலனென்றோ
வெட்டாவெட் டிலனென்றோ வேழை யிவனென்றோ
நட்டாநட் டிலனென்றோ நல்லநல் லன்பரின்மன்
கட்டியினை யெள்ளியிடுங் கட்டி யருளாதே. (௯)

துறந்தார்க்கன் பிலனென்றோ தூய்மை யிலனென்றோ
பிறந்தும்பிற வாதாரைப் பின்செல் கிலனென்றோ
நறுங்கருணை யிலனென்றோ நல்லநல் லன்பரின்மன்
கறங்கெனவே சுழலுமுளக் கவலை கழியாதே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 18. அகங்குழைந் தாற்றல்.

கருவிழித் தீந்தீர் சொன்றி கான்றிடு மனுட யோனி
யுருவிழுத் தீந்தீர் சூக்க வொளியிழுத் தீந்தீ ரேறி
யிருளிழுத் தீந்தீ ரின்ப துன்பங்க ளியாவு மீந்தீ
ரருளளித் தீந்தீ ரில்லை யதுநும தருட்க டாதே. (௧)

ஊனெனக் கிசைய தில்லை யுளமெனக் கிசைய தில்லை
நானெனக் கிசைய தில்லை நனவெனக் கிசைய தில்லை
யானுமக் கிசைய தில்லை யாருயிர்க் களிக்கு நீரு
மேனெனக் கிசைய தில்லை யிதுவருட் கியைவ தன்றே. (௨)

பணித்திடு மன்பாய்த் தாயர் பாலனை யடிப்பர் நொந்தா
வினைத்தெடுத் தாற்றி யின்ப மீகுவ ருலகத் துள்ளே
குணத்தினை யுடையீ ருள்ளத் தூசலிற் கொல்வ தல்லா
லணைத்திடக் கண்டே னில்லை யதுநும தருட்க டாதே. (ங)

சொற்பொரு டெரியச் செய்வீர் தோன்றுத தோற்ற மெல்லாங்
கற்பது மருளிச் செய்வீர் கனிவுளங் காட்டி நிற்பீர்
பொய்ப்பொரு ளிவையென் றென்னுள் புதுக்குவீர் பழையீ ரின்பந்
துய்ப்பது காட்ட மாட்டீர் சுதந்தர ராகை யாலே. (ச)

வல்லது மாட்டா தோடும் வழங்குவீர் வழங்கா வுள்ளக்
கல்லதுந் தருவீர் சற்றுங் கசிந்திடாக் கண்ணு மீவீர்
செல்வதும் வரத்தும் போக்கச் சிந்தையி லூறி நிற்கு
நல்லது தாரீர் நும்போ னடுவுடை யார்கள் யாரே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 19. பவப்புலிக்குப் பயந்துரைத்தல்.

முயங்கிய வேட்கை விட்டு முதுக்குறைந் தனர்கட் காளாம்
வயங்கொளி யுள்ளத் தாரை வாழ்த்திநா னுய்ந்தி டாம
லியங்கிய கரணத் தாலே யிரும்புல னருந்தி நாளு
மயங்கினேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (க)

நாடுமஞ் செழுத்தாந் தீப நல்லுளத் தேற்றி யன்று
கூடிய விருளை மாய்த்துக் கொழும்பெருந் தேனு ணும
லோடிய கண்ணு றென்னு மொருபெருஞ் சுழியிற் பட்டு
வாடினேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (உ)

பொருந்திய மண்ணும் பொன்னும் பூவையு மிகழ்ந்திட் டன்பு
திருந்திய வுள்ள மாய்மெய் சிலிர்த்துக்கண் ணீர்சிந் தாம
லருந்தலும் பொருந்தன் மீது மாசைவைத் தன்றோ டின்றும்
வருந்தினேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (ங)

புலன்களை வென்று ஞானப் பூம்படை யேந்தி மற்ற
மலங்களாங் குறும்பை நூறி வாழ்பதி வாங்கி டாமற்
றலங்களி னடங்கா மோக சாகரத் தழுந்தி யுள்ள
மலங்கினேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (ச)

அறந்தலை நின்று ரேவ லன்பொடுஞ் செய்து நாளுந்
திறந்தலை கொண்டு ஞானத் தெண்கட லமுதுண் ணுமற்
புறந்திகழ் தோலின் கூத்திற் போக்கலாற் கருத்து நின்னை
மறந்துளேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (௫)

வழங்கிய விழிநீர் வார வஞ்சக மற்று ருள்ளம்
விழுங்கிய நின்று டன்னை விழுங்கியே விளங்கி டாம
லழுங்கிய வுலக வாழ்வின் னழுங்கலி னுலை புந்தி
மழுங்கினேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (௬)

தங்குநின் னருட்கை யீர்க்கத் தத்துவப் படிக ளேறி
யெங்கணு மிருக்கு மின்ப வுச்சிவீற் றிருந்தி டாமற்
பொங்கிய வெகுளி காம மயக்கமாம் புலிவாய்ப் பட்டு
மங்கினேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (௭)

குலைந்துள நடுங்கிக் காயக் குப்பையைச் சுமந்து நாளு
மலைந்திட முடியா தேனங் கருளினை யணைந்தி டாமற்
றலைந்திட வரிய சென்ம சாகரச் சுழியிற் பட்டு
மலைந்துளேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (௮)

இருண்டிடும் வினைகண் மூல மலத்தொடு மேக நின்று
தெருண்டிடு முணர்வொ டுள்ளத் தேறலைக் குறுகி டாம
லுருண்டிடும் வாழ்வை மெய்யென் றுன்றுவிட் டொன்று பற்றி
மருண்டுளேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (௯)

தறுகணைம் புலனைச் சாடிச் சாந்தமா வேலி கோலி
யுறுமருட் சாலி யன்பா லுள்ளத்துள் விளைவி யாம
விறுமுட றன்னை மெய்யென் றிதற்கிரை தேடி யோடி
மறுகினேன் பாசம் வீச வல்லவர் நல்ல வாழ்வே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 20. பேரின்பம் வேண்டிப் பிதற்றல்.

தீண்டிய மனத்தை யீந்து தெள்ளிய ளுகி ஞானத்
தாண்டவா னந்தம் வாங்கித் தழைத்துளம் வாழ மாட்டேன்
காண்டகு விடயத் தீயிற் கருகினேன் கருகா வண்ண
மாண்டுகொள் ளுளத்தி னுன்னு மன்பருக் கமுத னேனே. (௧)

கல்லாமற் கற்குங் கல்வி கற்றரு ளாசா னாலே
நில்லாம னின்று பாழும் பிறவியை நீக்க மாட்டேன்
பொல்லாத விடய வேலை புகுந்துளேன் பொறுத்தா ருள்ளத்
தல்லோட வுளத்தி னுன்னு மன்பருக் கமுத னானே. (௨)

நிணத்துக்கண் ணகன்ற காய நீக்கியன் போடு முன்னக்
கணத்துக்கண் விளையு மின்பங் கண்டுநான் களிக்க மாட்டேன்
பிணத்துக்க வாற்றி நின்று பிரிந்திலேன் பிரித்து நின்பா
லணைத்துக்கொ ளுளத்தி னுன்னு மன்பருக் கமுத னானே. (௩)

பிறந்திறந் துலக வாழ்வைப் பேணிநின் றயர்ந்த தெல்லா
மெறிந்தெழி லருள்வி டாம விருந்தமு துண்ண மாட்டேன்
மறிந்தெழு மயக்க வேலை நரலையின் மாய்ந்தே னென்னை
யறிந்துகொ ளுளத்தி னுன்னு மன்பருக் கமுத னானே. (௪)

இருந்திருந் திருளை மாய்த்திட் டெழிலுடை யருளாங் கண்ணைப்
பொருந்திநின் றின்பங் கண்டு போகாநோய் போக்க மாட்டேன்
றிருந்திய மாயா போகத் தீக்குழி சேர்ந்தே னன்பை
யருந்திட வுளமு மீந்திட் டடியவர்க் கமுத னானே. (௫)

பிழைத்திடு முளந்தா னைந்து புலன்களைப் பேணா வண்ணங்
குழைத்தருள் குறுகிக் காணாக் காட்சியைக் குறுக மாட்டே
னிழைத்திடும் வினைச்செந் தீயி னெரிகின்றே னெரியா வண்ண
மழைத்தரு ளுளத்தி னுன்னு மன்பருக் கமுத னானே. (௬)

ஒறுத்திட றன்னை யுள்ளத் துன்னாம லுன்னும் போதின்
மறுத்திட வரிய வின்பம் வருமுன்ன மருவ மாட்டேன்
றுறுத்துடல் வளர்த்த மாயைச் சுழலினுட் படுத்து நானை
யறுத்திட வுளத்தி னுன்னு மன்பருக் கமுத னானே. (௭)

மாய்ந்திட வாசை யொன்று வளர்ந்திட வொன்றா லுள்ள
மோய்ந்திட வொளிரு ஞான வுண்மையை யுணர மாட்டேன்
காய்ந்திடுங் காமத் தீயாற் கலங்கினேன் கலங்கா வண்ண
மாய்ந்துகொ ளுளத்தி னுன்னு மன்பருக் கமுத னானே. (௮)

ஓர்ந்திட வரிய ஞானா கமக்கட னீந்தி யுண்மை
தேர்ந்திட வரிய தேராத் தேர்ச்சியைத் தேர மாட்டேன்
றீர்ந்திட வரிய மாயத் தீயிடை வீழ்ந்தே னெங்கு
மார்ந்திட வுளத்தி னுன்னு மன்பருக் கமுத னானே. (௯)

மெய்யெலாம் புளகம் பொங்க விழிமழை பொழிய வுள்ளச்
செய்யெலா மருணீர் பாயச் சிவானந்தம் விளக்க மாட்டேன்
பொய்யெலா மெய்யென் றெண்ணிப் பொய்க்குழிப் புக்கே னந்தோ
வையனே வுளத்தி னுன்னு மன்பருக் கமுத னானே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 21. விரைந்துகாண விதிர்த்தல்.

தாழ்விலாப் புலக்காட் டிட்டுத் தந்தியைந் தலைத்த வேலை
பாழுலா மிருளா மாழி படிந்துமெய் மறந்தேன் பின்னு
மூழினா லக்கா டோடி யோரைந்துக் கிரைய தாகு
மேழையேற் கெந்த ஞான்றோ விரங்குவ துளங்கொள் வீரே. (க)

நானெனும் பெரிய காட்டின் ஞமலியாம் பொறிக ளைந்தா
லூனெனும் விடயப் பன்றி யவாவலை யொதுக்கித் தின்று
வானிர யங்க டோறும் வீழ்ந்ததின் வருந்து கின்ற
வீனனுக் கெந்த ஞான்றோ விரங்குவ துளங்கொள் வீரே. (உ)

உகலரி தாகு மின்னா ருந்தியஞ் சுழியிற் சுற்றிப்
பகலரி தாகுங் கொங்கைப் பாய்வளி யெறியும் பட்டிட்
டகலமாங் கடைக்க ணாழி தன்னின்வீழ்ந் தழுந்து கின்ற
விகலனுக் கெந்த ஞான்றோ விரங்குவ துளங்கொள் வீரே. (ங)

நீடிடும் பெருமைப் பேயொன் றூட்டிட நிலைகு லைந்து
கேடிடு மிடம்பப் பாந்தள் கெழுமிடச் சீறி மெத்த
வாடிடும் போதின் மானப் பாவகம் வருத்த நேர்ந்த
வேடனுக் கெந்த ஞான்றோ விரங்குவ துளங்கொள் வீரே. (ச)

திண்ணிய மனக்கண் மோதச் சிந்தையாம் யாளி பற்றக்
கண்ணிய வகங்கா ரத்தீக் கடிதலைத் திடவ ராக
நண்ணிய வெல்லாங் கேட்கு ஞமலிக்கவ் விடப்ப ரந்த
வெண்ணனுக் கெந்த ஞான்றோ விரங்குவ துளங்கொள் வீரே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 22. திருவருட்கிரங்கிச் சிந்தை நேர்தல்.

ஒன்றிடர்ப் புலன்க டுன்னி யுனக்கெனக் கென்று பிய்சுத்
தின்றிட வெளிமைப் பட்ட தீதுடை யேனுக் காரே
நின்றிடு நிலையுந் தந்து நிலையினி னிற்கு நானும்
பொன்றிட வின்ப வெள்ளம் புகுவிப்பார் போத மூர்த்தி. (க)

தெருளறுஞ் சரக்குக் கொண்டு திறனிறும் பாய்வி ரித்திட்
டருளறு நாவா யேறி யவாக்கடல் கவிழ யாரே
மருளையு மொழித்திட் டந்த மருளிடத் தொளிரு ஞானப்
பொருளையுங் காட்டி யின்பம் புகுவிப்பார் போத மூர்த்தி. (உ)

நானெனுஞ் சிகரத் துச்சி நண்ணிய வென்னை நம்பா
வூனெனு முலவைத் தள்ள வுடைந்திறு வேனுக் காரே
நானெனுஞ் சிகர நூறி நம்பிடு முளமுந் தந்து
தேனெனுஞ் சிகர மேற்றிச் சிறப்பிப்பார் போத மூர்த்தி. (ங)

குழைவிலாப் பாறை மீதிற் கொதியுளக் கோடை யென்னு
மழலின்வாய் வெதும்பி நொந்திட் டழுங்குகின் றேனுக் காரே
விழைவினை யொடுக்கி ஞான விழைவினை யெழுப்பிச் செய்த
பிழையினைப் பொறுக்க வல்லார் பேதமில் போத மூர்த்தி. (ச)

வஞ்சனைக் குன்றி னேறி மாய்ந்திடச் சங்கற் பத்திற்
கெஞ்சலில் குழியின் வீழ்ந்திட் டெய்த்திடு வேனுக் காரே
பின்செலப் போக்கி யன்பு பெய்தருட் பார்வை தந்திட்
டென்செய லழிக்க வல்லா ரெட்டிடாப் போத மூர்த்தி. (ரு)

அனித்திய மிறும்பாம் பண்மிக் கவ்விட வவல வுள்ள
நினைத்திட லென்னு மூத னெருக்கிட வலைவேற் காரே
முனைத்திடு முனைப்பும் போக்கி முகிழ்த்திடும் புளக மீந்து
தனித்திடுந் தனியுந் தந்து தாங்குவார் போத மூர்த்தி. (சு)

தூலமாந் தாணுப் பேயுஞ் சூக்கமாந் தாணு நாயு
ஞாலமாந் தாணு நோயு நண்ணிடு வேனுக் காரே
தூலம தாதி மூன்றிற் றெட்டுழ விருப்பைச் சுட்டு
மேவிட வொளிருஞ் சோதி விளைவிப்பார் போத மூர்த்தி. (எ)

அறிவுநா னென்ன வொட்டா வல்லலா முழுவை பாயப்
பொறுமையைப் புணர வொட்டா போதகங் கொல்வேற் காரே
நெறிமைய தோடு நிற்கு நிற்பையு நிறுவி நெஞ்சி
னறிவினைப் புணர்த்த வல்லா ரருளுருப் போத மூர்த்தி. (அ)

ஐம்புலன் கையாச் செந்தே னளவிறந் தவைகள் கொட்டத்
தன்செயற் கியைய நிற்குந் தழலினிற் பொங்கி யாரே
துஞ்சலும் விழிப்பு நீக்குந் துஞ்சலும் விழிப்புந் தந்து
நெஞ்சினை நிறுத்த வல்லார் நீதியாம் போத மூர்த்தி. (கூ)

பெருமையைப் பேணு கின்ற பெருநிர யத்துள் வீழ்ந்திட்
டொருமையை யோவு கின்ற வூத்தையி னுழல்வேற் காரே
யருமையு மறுத்திட் டெல்லா வருமையு மெளிமை யாகும்
பெருமையைப் புணர்த்த வல்லார் பீதிதீர் போத மூர்த்தி. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 23. அருளீர்ப்புக்குளம் விழைதல்.

ஒழுங்கிதென் றறிய வொட்டா வூழுமோ வுவது ருத
முழுங்கிய சினமுங் காணு மொய்ம்புமச் சாங்க டைத்துப்
புழுங்கிய மனமுந் தீராப் பொய்யுமீங் கென்னைப் பொன்ற
வழுங்கினேற் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து ளீரே. (க)

மலைந்திடு முளமு மெய்யும் வந்திடுங் குணமு மோடி
யுலைந்திடு மகமு மஞ்சி யொதுங்கிடு நெஞ்சுந் தீது
கலந்திடுங் கவடு மென்னைக் கனன்றுகொன் றிடலா லென்று
மலைந்தவெற் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து ளீரே. (உ)

பயந்திடு வார்க ளென்றும் பாவையர் பண்ப தென்று
முயர்ந்திடு முலக மென்று மோவிடாக் கலவி யென்றும்
வியந்திடு புகழ தென்று மின்னியென் றன்னைக் கொல்ல
வயர்ந்துளேற் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து ளீரே. (ங)

வஞ்சனை யானும் வஞ்ச மாயையி னுனு மங்கா
நஞ்சினைக் கடுக்கும் பொல்லா நானுமே நமதென் றேது
மெஞ்சலி னுனு நின்னை யெட்டொணு தென்செய் கேனென்
றஞ்சினேற் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து ளீரே. (ச)

நயமது வின்மை யானு நம்புதல் வீத லானுந்
தயவினி தின்மை யானுந் தனேநினே யாமை யானுங்
கயவரோ டுறவி னுனுங் கடற்கையா னீந்து வார்போ
லயருமெற் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து வீரே. (ரு)

உலகிய லோடு மிங்ங னுழத்தல்கை வந்த தன்றி
மெலிவொடு மூப்புச் சாதன் மின்னனே மறந்து நானு
நிலேயொடு நெறியு மன்றி நென்னலு மின்று மாகி
யலேயுமேற் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து வீரே. (௬)

நசையொடு புல்லிப் பூமி நரகொடு சுவர்க்க மெங்கும்
விசையொடு மேகி யென்று மெலிவது கைக்கொண் டோடிக்
கசடுகள் வாங்கி யுள்ளக் கவட்டறை புகுந்து நிற்கு
மசட னுக் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து வீரே. (எ)

கலக்கமா மாழி மீதிற் கவலேயா நாவா யேறி
யிலக்கிலாத் துன்ப வின்பத் திசைகளி னேகி யென்று
நலக்குறு வுடல தோடு நானரு துடைந்து வீயு
மலக்கணேற் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து வீரே. (அ)

இகலொடு மிடரு மாவிக் கிசைத்தியை யாத வெல்லா
நகலொடும் பொலியச் செய்து நண்ணிடா நண்ண னண்ணித்
தகவொடு கிழமை செற்றுத் தவிப்பினி னிறங்கு கின்ற
வகுண னுக் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து வீரே. (௯)

இவறலு மிடும்பை யீட்டத் தெய்தலு மறுமை யாவுந்
தவறலுங் கயவர் பின்னே சார்தலுந் தன்னே மேலாய்
நுவறலுங் கொண்டு பொய்யி னெங்கிய பேதை யாகு
மவல னுக் குறுதி தாரீ ரன்பருள் ளமர்ந்து வீரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 24. ஆடையவிழ்தற் கழுங்கல்.

மாலெனு நாக மோத வஞ்சகச் சுறவு கவ்வ
மேவிடும் பிறவிப் பவ்வம் விழுந்திட லொழிந்தி டாதோ
மேவிடுஞ் சகச மாயை விரிகதிர்க் கிருள் விளக்கா
யாலிட வுளத்துள் வாழு மருட் டிருக் கண்ணினுனே. (௧)

உணங்கிடாப் புலனுய் கவ்வ வுணக்கிடப் பிறவிக் கோடை
யணங்கெரி தரவச் சாத லறுத்தருள் வாரி யாரே
குணங்கொளா ஞானக் கொப்பு ளுளங் கொளக் கோபச் செந்தீ
யணைந்திட வுளத்துள் வாழு மருட்டிருக் கண்ணி ஞனே. (உ)

பழையவை மலங்க ணீங்கப் பளபளென் றெரியு ளோங்கக்
கழைசருக் கரைக டுங்கக் கழலிணை தந்தி டாயோ
விழைவறு முளமு மீய்ந்து விழிமழை பொழிவு மீய்ந்திட்
டழகுற வுளத்துள் வாழு மருட்டிருக் கண்ணி ஞனே. (௩)

அமைந்திடாப் பாழ வாப்புற் றருவினைப் பாம்பு கொத்தத்
தவிர்ந்திடா மலப்பேய் சுற்றத் தவித்திட லவித்தி டாயோ
கவிந்திடும் வழிபோ நெஞ்ச மிறுகிடக் கருங்கல் லுள்ள
மவிழ்ந்திட வுளத்துள் வாழு மருட்டிருக் கண்ணி ஞனே. (௪)

திறந்தருங் காம வேங்கை பாய்ந்திடச் சினமா மெண்கு
மறைந்திட வுள்ளத் தூங்க லழித்திடப் பிழைப்பேன் கொல்லோ
மறந்தழை யாம லன்பு வளர்த்தருண் மன்னி யென்று
மறந்தழை யுளத்துள்வாழு மருட் டிருக் கண்ணி ஞனே. (௫)

விஞ்சிய மோகப் பாழின் மெய்யறும் விதை விதைத்துத்
துஞ்சிடாத் துன்பப் போகம் விளைத்துண றுலைத்தி டாயோ
வெஞ்சிடா வடியர்க் கஞ்ச லன்றிமற் றியாவ ருக்கு
மஞ்சிடா வுளத்துள் வாழு மருட்டிருக் கண்ணி ஞனே. (௬)

திருந்திய வின்மைச் சீயஞ் செற்றிடச் சீர்த்திச் சிம்பு
ளரிந்திடத் தவிக்கு நாயேற் கார்துணை யாவ ரந்தோ
பொருந்திடுஞ் சமாதிக் கன்பு பொலிந்திடப் பேரா னந்த
மருந்திடு முளத்துள் வாழு மருட்டிருக் கண்ணி ஞனே. (௭)

தாக்கிடும் லோபக் கானப் பகடுக டாக்க வீழ்ந்து
தேக்கிடு மதமாங் கேழற் பாய்ச்சலிற் செத்தே னந்தோ
நீக்கிடு முலக வாழ்வை நீக்கியை யங்க டீர்வை
யாக்கிடு முளத்துள் வாழு மருட்டிருக் கண்ணி ஞனே. (அ)

மருளுறு மழுக்கா றுய பாதக ரனவின் வைக்க
விருளுறு மேமாப் பென்னு மிராக்கதர் சீற வெய்த்தேன்
றிருகிய மனமு மோய்ந்து சிந்தையு மவிழ்ந்து நானு
மருகிய வுளத்துள் வாழு மருட்டிருக் கண்ணி ஞனே. (௯)

வலிதரு மாதர் சூறு வளியிடைப் பட்டுப் பித்தாம்
பொலிதரு சுழியிற் சுற்றிப் பொன்றுத லென்று போமோ
நிலைபெறு மடியா ரேவ னெறியிடை யலைவ தன்றி
யலைவறு முளத்துள் வாழு மருட்டிருக் கண்ணி னானே. (ல)

திருச்சிற்றம்பலம்.

## 25. அன்பு மிகுத்திட்டளிதல்.

உருகுதிலை பாழ்நெஞ்ச மோடுதிலை கண்ணருவி
வெருவுதிலை மும்மலமும் வீடுதிலை நாயேனைப்
பெருகுதிலை யின்பவெள்ளம் பேய்பிடியுண் டவர்போல
வருகுதிலை யாதுசெய்கேன் வானோடு மோதிமமே. (க)

வெண்டாளக் குச்சதுபோல் விளங்குமலர்ப் புன்னாக
மண்டிவளர் பூஞ்சோலை வந்திழியுங் கோகிலமே
பண்டைமறை தேடரிய பால்வண்ண னூன்மார்ப
னண்டர்பிரா னின்புதனுக் காசை மிகுத்தேனே. (உ)

வளப்பமுறும் பேரெரிவந் தணுகிச்சிந் தைசெய்து
பளப்பழனக் கரையருகே பரிந்திரைதேர் நன்னாராய்
முளைப்பிறையான் கண்ணுதலான் முந்நீரா னன்மலரா
னளப்பரியா னீயுமின்புக் கன்புபிழம் பானேனே. (ங)

சவலைச் சமயத்தோர் தானறிய வாரானைக்
குவலயங்கள் போற்றுங் குணக்குன்றைக் கோதிலா
ரவல மறுப்பானை யளவிலின்ப மானானைக்
கவலைகெடுப் பானென்னிற் காண வரச்சொலுமே. (ச)

தாயுமாய்த் தந்தையுமாய்த் தானுறையுந் தத்துவனை
மாயுமா பவஞ்சாரா மன்னவனை முன்னவனைப்
பாயுமால் களைவானைப் பாடுவா ருடையானைத்
தோயும்வா றெவ்வாறோ சொல்லீர் குருகினமே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 26. அகக்கண்டேடி யழுங்கல்.

உழலாக் கற்றா ணெடுசேர்த்திட் டோடா வண்ண மோவாம
லழல்கால் கொடிறைந் தவைகொண்டே யட்டிப் பிடுங்கு வதுபோலுன்
கழரூன் கருத வொட்டாவைம் புலனாற் கலங்கித் தவிக்கின்றேன்
றழலார் மேனித் திருவுருவா சற்றே கருணை தாராயே. (க)

மேட மொன்று புலியைந்தால் வீரங் குன்றி மயங்குவபோ
லோடுந் தேரை யொன்றதனை யைந்து நாக முழக்குவபோ
லாடும் பாம்பொன் றைங்கலுழ னலைப்ப போல வைம்புலனால்
வாடுந் தமியேன் றனக்கருளை வழங்க வேண்டு மதியேயே. (உ)

நோயன் றந்தை வயித்தியனே யாயின் றுயர நுகருவனோ
சேயொன் றிச்சித் தழவன்னை தேரென் றுளது மளியாளோ
மாயும் பிறவிப் பாழ்நோய்விட் டகலப் பேரா னந்தம்வரத்
தாயி னினிய திருவுருவோய் சற்றே கருணை தாராயே. (ங)

திருடன் றன்னை வீதிதொறுஞ் சீறி யூறு செய்வதுபோல்
வெருடந் தென்னை யைம்புலனு மென்று விழுங்கி விழுமந்தோ
வருடந் தஞ்சே லென்பார்க ளாரு மின்றி யயர்வேற்குத்
தெருடந் தருளைச் செய்வதுவுஞ் செல்லு மறிவாய்ச் செறிவோனே. ()

ஒடியாப் புலனு மிந்தனத்தா லோடா வண்ண மோடியிட்டு
மடியா வாசைத் தீமூட்டி மனக்கா லெறியும் வகைமேவி
யடியேன் றன்னைப் பொடியாக்க லழகோ வெங்க ளம்மானே
முடியா முதலே யருளானீ மூவா யென்னைக் காவாயே. (ரு)

தோலுஞ் சீயுஞ் செந்நீருந் தோன்றுங் குவையைத் தோகையேன்
மாலு மனனே வாருமிரும் வையம் யாவும் போயறியுங்
கோலுங் குருடும் வருமுன்னங் குணமற் றொளிர்ந்த திருவருளோன்
பாலு மவன்ற னடியகலார் பாலும் பாவும் பிணிதீரே. (சு)

தூல மதனை யழறுவிச் சூழ்ந்து துரந்து துய்ப்பதுபோன்
மாலும் புனலுக் கிரையாகி வருந்தி யடியேன் வாடாம
ஞாலுங் கருத்தின் வந்தொளிரு ஞானக் கொழுந்தே நறுங்கனியே
பாலுந் தேனும் போலுளத்திற் சற்றே வந்து பதியாயே. (எ)

திருச்சிற்றம்பலம்.

## 27. இனிப்பிறவா வரத்துக்கிரங்கல்.

இணங்கிலே னடிய ரோடு மெண்ணிலே னெழுத்தை யைந்தும்
பிணங்கிலேன் காய மாய பேயரோ டியாது செய்கே
னுணங்கிலேன் புலன்க ளைந்து மொழித்தருள் பவனென் றன்னை
வணங்கிலே னெங்கெங் கங்காய் வயங்கொளி வழக்கத் தானே. (க)

தூற்றிலே னுலக வாழ்வைத் தூயமெய் யுளத்தாற் கண்ணீ
ரூற்றிலே னுரையி றந்திட் டுளமொழி கில்லேன் காய
மாற்றிலேன் யாது செய்கே னைம்புலன் றனக்கா ளாதன்
மாற்றிலே னெங்கெங் கங்காய் வயங்கொளி வழக்கத் தானே. (உ)

வேண்டிலேன் பிறந்தி டாமை விளக்கெழுத் தைஞ்சு ளத்துத்
தூண்டிலேன் றிமிர மோடத் துரந்திலேன் யாது செய்கேன்
கீண்டிலேன் காய மாயங் கிளைத்தொளிர் தசையா யான்றன்
மாண்டிலே னெங்கெங் கங்காய் வயங்கொளி வழக்கத் தானே. (௩)

இழுத்திலே னுளத்தை நாளு மிழுத்திழுத் திரங்கி யுள்ளம்
பழுத்திலே னின்ப வாரி படிந்திலேன் யாது செய்கே
னழுத்திலே னுளநின் றாளாம் வயிரத்தை யலறி நாளும்
வழுத்திலே னெங்கெங் கங்காய் வயங்கொளி வழக்கத் தானே. (ச)

உருத்திலேன் மதனை யோட வுளறிய வுளநின் றாளாற்
றிருத்திலே னன்பர்க் கன்பு செய்கிலேன் யாது செய்கேன்
கருத்திலே னுசை வீசக் காயநின் னுள்ளின் வீய
மரித்திலே னெங்கெங் கங்காய் வயங்கொளி வழக்கத் தானே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 28. ஆகத்துக்கஞ்சி யழுங்கல்.

உளமுடைத் திட்டே னல்லே னுரோமமெய் சிலிர்த்தே னல்லேன்
களமுள மிகந்தே னல்லேன் கண்கணீர் பொழிந்தே னல்லேன்
வளமலி யுளத்துள் வாழும் வான்சுவை யமுத நீரே
பளமலி யவாவென் னுழி படிவதென் பரிவு தானே. (க)

தானென லொழிந்தே னல்லேன் றன்னையு முணர்ந்தே னல்லே
னுனெனக் கதறி யன்பா லழுதழைத் திட்டே னல்லே
னேனென நீயு மென்பா லிரங்கிவந் தீர்த்தா யில்லை
தேனமு தான்பால் கைக்கத் தித்திக்கு மின்பத் தேவே. (உ)

தேவனே பவத்துன் பென்னுட் டீயெனத் திகழ்ந்த தில்லைப்
பாவனைக் கெட்டா வுள்ளப் பற்றெலா மற்றே னில்லை
யோவிட நிற்ற னில்லா தொடுங்குத லொழிந்த தில்லை
நோவனே வடியே னின்ன நுகர்வனோ மலங்க ளம்மா. (௩)

அம்மவென் னுள்ள நோயை யறிந்தருள் செய்தா யில்லை
யிம்மைவிட் டம்மை வாவென் றிருளிரித் தொளிர்ந்தா யில்லை
நம்மையு நமதுந் தீர நளிர்வுட னொளிர்ந்த வன்பர்
தம்மையா னடையப் பார்வை தந்திலை யந்தோ வந்தோ. (௪)

அந்தமின் மேனி யானே யமலமெய் யுள்ளத் தானே
நந்தலுங் கேடு மில்லா ஞானவுள் ளொளியி னானே
புந்தியுஞ் செயலும் போக்கும் புண்ணிய வருளே நாயேன்
சிந்தைநோய் தீரும் வண்ணந் திருவுளத் தடைக்க வேண்டும். (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 29. தலைவன்றனக்குத் தவிப்புணர்த்தல்.

உருவே ரகமோட வுன்னியிடு முளம்வாங்கிப்
பொருவே ரகமுதவிப் போனந் தம்பொழிந்து
திருவே ரகத்துறைவான் றீவினைக்கோர் மருந்தாயென்
கருவே ரகற்றுதற்கென் கண்ணைவிட்டு நீங்கானே. (க)

மாவிருக்கு முள்ள மறமிருக்கும் வஞ்சனையின்
சூவிருக்கு மப்பொய்க டொர்ந்திருக்குந் துன்பமுமென்
மேலிருக்க வொட்டாமன் மிகவிழைபு மேரகத்துண்
மேவிருக்கு மெட்டானென் மேலாசை வையானே. (உ)

மாட்டிருந்த பைங்கிளிகள் கொஞ்ச மலர்க்கொக்கின்
கோட்டிருந்துங் கூவுங் குணமிலகுங் கோகிலமே
யேட்டிருந்த தெய்வமெலா மில்லாதென் றேரகமாம்
வீட்டிருந்த தெய்வத்தை விட்டு விடப்படுமே. (௩)

ஒண்ணியலு மோடை யுலாவி யிரையாக
நண்ணியது தேரு நயமிலகு நன்னாரா
யெண்ணியதெ லாமளிக்கு மேரகத்து ளாமருணர்
கண்ணி னுக்கென் னிலைமை கண்டிருந்தும் விள்ளாயே. (ச)

கொங்குலவு தேனொழுகுங் கொன்றை வனச்சூழ
லெங்கும் பெடைபுல்கி யிசைபாடும் வண்டரசே
பங்கயன்மால் காணாப் பரம்பொருளுக் காசையாய்
மங்கி மருளுவதை மாழ்ந்துணர்த்த மாட்டாயே. (ரு)

காரகமுங் கூரகமுங் கையகமு மில்லாதே
நீரகமா மோர்கடமு நிறுத்தல்கூ டாதின்றித்
தாரகமாய்த் தாரகமாய்த் தாரகமாய்த் தாங்கியிடு
மேரகம்வா ழையருக்கென் னெய்ப்பொன்றுஞ் செப்பீரே. (சு)

கயலொண் கருநெய்தல் காணு முகமலரி
னியலு நுதல்வெயரு மெங்கும்பீர் கொண்டதுவுஞ்
செயலும் வளையுஞ் சிந்தியது மந்திவரி
னுயலும் படுமோ வுணர்த்தும் பராபரற்கே. (எ)

§மாதளை யின்போது வருநிறம்போற் செக்கர்வான்
மோத விருளிபமும் பாய முரணழிந்து
தீது புணராத் திருவே ரகத்துறையுங்
காதலன்மேற் காதல் கரையழிதல் காணீரே. (அ)

கைப்பாகு மைந்து புலனுங் கருதியிடின்
பொய்ப்போக மாகியிடு மென்னப் புவிக்குரைத்திட்
டெப்போதும் வாழ்ந்தொளிரு மேரகத்தின் வாழுமிறைக்
கிப்போ துரையீரே லினியுய்யேன் கண்டீரே. (கூ)

அரங்கு தழலா யணைதழலா யண்டமெலாம்
பெரும்பா வகனாகிப் பித்துண் டுரைமறத்தல்
வரம்பொழியு மேரகத்துள் வாழ்ந்தொளிரு மன்னவருக்
கிரங்கியுரைத் தாலுங்கட் கென்ன குறைந்திடுமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

§ மாதுளை யெனலுமாம்.

## 30. பரமது காணப் பதறல்.

பற்றே துமறும் படிநின் கருணை
சற்றே வரவெண் ணுதிசங் கரனே
கற்றே யுலகெங் குமறங் துகசிந்
தற்றார் பயிலு மருளா ரமுதே. (க)

கன்னே ருளமா கியகா மனிடத்
தென்னே யருள்கொண் டுபுகுந் திடறுன்
மன்னே யுளமோ டிடவந் தொளிரு
மன்னே யருளே யருளா ரமுதே. (உ)

முன்னின் றெனையைம் புலன்மொய்த் திடலா
லென்றென் றனையெய் துவனெம் பெருமான்
றுன்னென் றுதொடர்ந் தழுவார் களுளத்
தின்னின் றருளு மருளா ரமுதே. (ஙு)

குழைவா ழியின்மூழ் கியிருந் துகுளிர்ந்
தழகார் கழலா ரமுதுண் டிலனே
விழைவா னதெலாம் விடுவார் களுளத்
தழையா மனுழைந் திடுமா ரமுதே. (ச)

செந்தே னெடுபா லவைசீ சியென
வந்தாள் வதுதந் தருண்மன் னவனே
வெந்தே னிருவர் தனையான் மிகவு
மந்தோ வெனையா ளருளா ரமுதே. (ரு)

தானற் றவிடத் தொளிர்சங் கரனே
யேனிப் படிசெய் தனையெம் பெருமா
னூனைக் கனியென் னவுருக் கியுளே
தேனைத் தரவெண் ணுதிசெவ் வியனே. (கூ)

குருவித் தலைகொண் டவரைப் பிறைபோ
லுருவைக் கொடுநின் றுளுடைந் தனனே
தெருளைத் தெளியத் தெளிவார் களுளத்
தருளைப் புகுதப் பணுமா ரமுதே. (எ)

அல்லொன் றலுடற் றினனே யெனமண்
ணில்லென் றநிறுத் துதனீ தியதோ
புல்லென் றுபுகழ்ந் திடுவார் வினைகள்
கொல்லென் றுகடிந் தருள்கொற் றவனே. (அ)

கருதிக் கருதா தவிலே மிளிரு
மொருவற் கெனதுள் ளமுறைத் திலேயே
கருதிக் கொடுபோ யிரைகுஞ் சுகள்பா
லருகிப் பருகச் சொலுமொண் குருகே. (௯)

கண்கெட் டதுமன் றியினுங் கடிய
புண்கட் டியபொந் துமளித் தனையே
யெண்கெட் டிழிவே னையெநா ளுனதாட்
டண்கிட் டிடுவா யருடண் ணமுதே. (க0)

நெய்யிட் டொளிர்புட் டகமீ தினெருப்
பையிட் டெனவை வரலைத் தனரே
பொய்யிட் டொளிர்பூட் சிபெயர்ந் துவிட
னையிட் டுளநண் ணிடுநல் லமுதே. (கக)

வன்கொண் டுருகா தவிழா தமனத்
தென்கொண் டுபுகுந் திடவெண் ணுவைநீ
யென்கொண் டொளிரா வுளமெங் கணுமே
யின்கொண் டொளிரு மெழிலா ரமுதே. (க௨)

ஆகத் தொடுமோ கமும்விட் டுமிகத்
தாகித் தனவந் தருள்சங் கரனே
யோகத் தொடுமுன் னிடுவார் களுளத்
தேனித் தமிருந் திடுமின் பினனே. (க௩)

மதுவுற் றுணுமீ யெனவைம் புலனென்
சதுரற் றிடவுண் டதுசங் கரனே
கொதியுற் றவுளங் குளிர்கொண் டிடவே
மதியற் கெனவந் திடவந் தருளே. (க௪)

திருச்சிற்றம்பலம்.

மலபரிபாக வாழ்வு அதிகாரம் ௩0-க்குத்

திருப்பாட்டு ௨௮௬.

# ந. உபதேசக்கிரமம்.

## 1. தெருட்டலைவி தூதிக்குச் சிவத்தலைவன் தெளிவுரைத்தல்.

உள்ளத் திருள்சகலத் தொடர்தண் பாழிவிழுந்
துள்ளத் தருளொளியு மோடிக்கண் டாள்கொல்லோ. (க)

நின்றருளை நேடி நெடுநேர மூச்செறிந்து
பொன்றியரு ளாசையாய்ப் புந்திகுழைந் தாள்கொல்லோ. (உ)

தானந்த மில்லாத சங்கரனர் தந்தருளு
மானந்த வாரிதனக் காசைமிகுந் தாள்கொல்லோ. (ந)

அளிந்த மனமா யருள்விழைவா யையமறத்
தெளிந்தருளுக் காசையாய்ச் சிந்தைதளர்ந் தாள்கொல்லோ. (ச)

அப்பாலைக் கப்பாலா யங்கங் குறையமுதை
யெப்போது காண்பேமென் றேங்கியிருந் தாள்கொல்லோ. (ரு)

மாதா ணலியல்லா வான்பொருளுக் காசையாய்
மேதினியி னுசையெலாம் விட்டுமெழிந் தாள்கொல்லோ. (சு)

முப்பதமுங் கைத்து மூலையுந் துருதுருத்து
மெய்ப்பதத்தி னன்பாய் மிகவுமிழைந் தாள்கொல்லோ. (எ)

ஓடா மனமோடு முண்ணெகிழ்வா யுள்ளொளியை
நேடா மனங்கொண்டு நித்தமிருந் தாள்கொல்லோ. (அ)

அருந்தல் பொருந்தலனல் பாய விழிமாரி
பொழிந்து தனதுசெயற் போக்கியிருந் தாள்கொல்லோ. (கூ)

தூர மகலத் தொழிலகலச் சோம்பறரு
மார மணிந்தருளுக் காசைமிகுந் தாள்கொல்லோ. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 2. காலத்தை வீணே கழிப்பவர் கைதவம்.

சித்தந் தெளியாமற் சிந்தனை யோய்ந்தவர்
சுத்தச் சுவரென்றறி—மின்னே
சுத்தச் சுவரென்றறி. (க)

பத்தி தெரியாமல் வந்திப் பவலாகு
பாய்பவ ரென்றறிநீ—மின்னே
பாய்பவ ரென்றறிநீ. (உ)

அன்பறி யாம லழுகை தொடரிற்கட்
கவலமுண் டென்றறிநீ—மின்னே
யவலமுண் டென்றறிநீ. (ந)

இன்பறி யாமற் சமாதி பொருந்திடி
லியமதண் டனையறிநீ—மின்னே
யியமதண் டனையறிநீ. (ச)

அகந்துற வாமற் புறத்தைத் துறந்தவ
ராசைக் கடலென்றறி—மின்னே
யாசைக் கடலென்றறி. (ரு)

சுகந்தெரி யாமற் சுகத்தை மறந்தவர்
துன்பத்துக் காலயங்காண்—மின்னே
துன்பத்துக் காலயங்காண். (சா)

விசாரம்பண் ணுமன் மிகவுந் தெளிந்தவர்
வெண்மையா ரென்றறிநீ—மின்னே
வெண்மையா ரென்றறிநீ. (எ)

யாசக முணரா திருந்து மியாசக
மேய்ந்தவர் வீணரறி—மின்னே
யேய்ந்தவர் வீணரறி. (அ)

சினந்தெரி யாமற் பொறுமை மிகுந்தவர்
செத்தவ ரென்றறிநீ—மின்னே
செத்தவ ரென்றறிநீ. (கூ)

மனந்தெரி யாமன் மனத்தை மறந்தவர்
வஞ்சக ரென்றறிநீ—மின்னே
வஞ்சக றென்றறிநீ. (கo)

அருளறி யாமன்மெய் யானந்தம் பெற்றவ்
ரல்லன் மிகுந்தவர்காண்—மின்னே
யல்லன் மிகுந்தவர்காண். (கக)

திருச்சிற்றம்பலம்.

## 3. தாங்கொன்றுரைப்பார்க்குத் தன்னுளமறிவித்தல்.

நெஞ்சிற் பதைப்பிருந்து நீதியடா னென்றுரைக்கும்
வஞ்சகர்க்கு மாதே வள்ளலா மென்னுள்ளம். (க)

ஆகத்திற் பற்றிருந்து மச்சமிலை யென்றுரைக்கு
மோகருக்கு மாதே முதன்மையா மென்னுள்ளம். (உ)

பகைரென்று பற்றியும் பார்த்திருப்ப மென்றுரைக்கு
மகிர்த்தியர்க்கு மாதே யரசனு மென்னுள்ளம். (ங)

உள்ளங் கலங்கியு முள்ளபடி யென்றுரைக்குங்
கள்ளருக்கு மாதே காரணமா மென்னுள்ளம். (ச)

மான மிகுத்திருந்தும் வந்தபடி காண்பமெனு
மீனருக்கு மாதே யிறையாகு மென்னுள்ளம். (ரு)

அய்ய மிருந்து மருளின்வழித் தென்றுரைக்கும்
பொய்யருக்கு மாதே புரவலனு மென்னுள்ளம். (சு)

தன்னை மறவாமற் றண்ணருளைப் பெற்றமெனும்
வன்மையர்க்கு மாதே மகிணரா மென்னுள்ளம். (எ)

அடிவயிற்றை யம்மியு மானந்தம் பெற்றமெனு
மிடிகரைக்கு மாதே யிராசாவா மென்னுள்ளம். (அ)

யோசனை பண்ணியு முள்ளபடி யென்றுரைக்கு
மாசினர்க்கு மாதே யமைச்சாகு மென்னுள்ளம். (கூ)

பார்த்தடைத்து முள்ளபடி பார்த்திருப்ப மென்றுரைக்கும்
வார்த்தையர்க்கு மாதே வழங்கியிடு மென்னுள்ளம். (ώ)

திருச்சிற்றம்பலம்.

## 4. நலரைச் சார்தலை நாடி வினுதற்கு நல்விடை.

ஒப்புருவ மாயினு மட்பாண்டத் துள்ளிருந்த
கைப்புந்தித் திப்புமெனக் காண். (க)

தண்மதிக்குந் தட்பந் தணவா துறைதல்போ
லுண்மையவ ருக்களியு மோர். (உ)

அடைந்தாலுந் துன்ப மடைந்தாரைக் காப்ப
ரடைந்தாரைப் பாதவம்போ லாங்கு. (ந)

வாச்சிக்கு முண்டோநீங் காதமர மன்றி
நீச்சுக்கு முண்டோ நிலை. (ச)

மருந்துண்ட கண்படல மாய்ந்தொளியை மன்னித்
தெரிந்ததெனக் காணுந் தினம். (ரு)

பற்றுங்கா ரெட்டுநாப் பித்தம்பால் கைப்பதே
மெற்றும்போங் காவிரத மே. (சு)

பிடியாட் டலையுப்புப் பெய்ததுபோ னீரின்
விடுதலையா நின்சுவையும் வீய்ந்து. (எ)

நங்கைக்கு நற்புருடன் கண்டனபோ னுடுமே
துங்கர்க்கு நல்லசொரூ பம். (அ)

உச்சிட்ட பூமிக் கொதுங்குமே மாரிதான்
நிச்சயமாய்க் கொண்டு நிலை. (கூ)

கைப்புந்தித் திக்குங் கழிசலுக்குத் தித்திப்புங்
கைக்காதோ காணிற் கருது. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 5. உள்ளத்துக் கோய்வுறுத்தல்.

இருளினி னுமா வியைந்தோங் கருவிப்
பொருளினி னுமா புகுந்தோங்—தெருளிற்
கருவியுங் கேவலமுங் கைகலந்தாற் போல
வருமதனைப் பார்த்து மகிழ். (க)

சாதனுட் காணத்தா மொத்த தரைமிசையி
னுதனுட் காணநம் மாலாமோ—சாதல்
*பிறப்பில் கரைகாணும் பெற்றி தருகென்
றறவர்பாற் றெண்டோ டமர். (உ)

பாதவமுந் தண்ணீர்ப் பருகுந் தருவாரேற்
போதகமு நாயின்பின் போகாது—தீதகலும்
வீரியனு மிவ்வுடம்பை வேண்டியிடா னேசமே
சேரு மிடமறிந்து சேர். (ங)

தேடினார்க் குண்டோதான் சித்தங் குழைந்துருகிப்
பாடினார்க் குண்டோ பகருங்கா—லோடியெங்குஞ்
செத்தா ரறிவரிதாய்ச் செத்தா ரறிவரிதாய்ச்
செத்தா ரறியுஞ் சிறப்பு. (ச)

நீருக்கு நீரு நிழலுக்கு நீணிழலும்
பேருக்குப் பேரும் பிறங்குமோ—வாருக்குந்
தாழ்வுக்குத் தாழ்வு தழைக்குமோ நெஞ்சமே
பாழுக் கிறையாமற் பார். (ரு)

இருளி னிருளா மிருளகற்றி மின்னு
மருளோ டுளத்தெழுமா னந்தப்—பொருளன்றி
வந்தாலு நன்று வராக்காலு நன்றென்று
சிந்திப்பாய் நெஞ்சே தினம். (சு)

அதியம் வருமோ வனித்தியமு முண்டோ
மதியு மிளமையிறின் மாயத்—துதிபோ
யழிவு தொடங்கு மிரைக்கு மிருமு
நழுவுமுட னெஞ்சமே நாடு. (எ)

மெய்யு முயிரு முளமும் விரைந்துதொழிற்
செய்யுஞ் செயலுஞ் சிதையவே—பொய்முழுதும்
விட்டுச் சுகாதீத மேவ விழைந்துநான்
கெட்டுக் கெழுமிக் கிட. (அ)

தனுவாய்க் கரணமாய்ச் சத்தாதி யாகி
யணுவாகி யென்று மருளா—யிணைதீர
வெந்நாளு மீச னிருந்தபடி யேயறிய
வென்னுணை நெஞ்சே யிரு. (கூ)

---

*பிறப்பற்ற கரைகாணு நாளா ரறிவரந் தோவென் எனவும் பாடம்.
சாதல்பிறப் | பற்றகரை காணுநா ளாரறிவா ரந்தோவென் | றற்றவர்பா
றெண்டோ டமர். எனக்கொள்க.

உருகுமோ வுள்ள மொழுகுமோ கண்கள்
பெருகுமோ வின்பம் பிறங்கி—யருகுமோ
மாயைமல மோடி மடியுமோ வென்றெண்ணி
யோய்வையோ நெஞ்சேநீ யும். (௧0)

திருச்சிற்றம்பலம்.

## 6. உள்ளந்தன்வயத்தாக வுரைத்தல்.

உய்யத் தந்திடா வூன வாழ்வெனும்
பொய்யிற் சென்றுழல் புந்தியே
பையநீ யுள்ளத் தான்பணி செய்யவே
செய்ய நோயது சிந்துமே. (௧)

வாடிப் பாழ்மினார் மார்பிற் றேலினி
ளேடிப் போய்ச்சுழ லுள்ளமே
காடிக் காணரு முள்ளத் தானலந்
தேடித் தேடிநீ சிந்தியே. (௨)

இருமிச் சென்றிறு மிரவற் பாழ்ம்பொதிக்
கொருமித் தூன்றிடு முள்ளமே
தருமத் தோடுறு முள்ளத் தான்சரண்
வருமெப் போதென வந்தியே. (௩)

பொள்ளற் பாழ்ஞ்சடம் போகப் போகுதென்
றுள்ளிப் பீதிகொ ளுள்ளமே
கள்ளப் பேயிறு முள்ளத் தான்கழ
லள்ளிக் கொண்டங் கமிழ்ந்திடே. (௪)

கவலைக் கேயிரை யாகக் காசினி
யுலையத் தானுறு முள்ளமே
தவலைத் தள்ளிடு முள்ளத் தான்சரண்
புகலெப் போதெனப் பொன்றிடே. (௫)

அழலைத் தள்ளிய பிறவிக் கன்புகொண்
டுழலைச் செய்திடு முள்ளமே
தழலைப் போலொளி ருள்ளத் தான்சர
ணிழலைத் தாவிநீ நின்றிடே. (௬)

பேதித் தேயுழல் வார்தம் பேச்சுழ
லோதத் தேயுறு முள்ளமே
கோதற் றேயொளி ருள்ளத் தான்குணம்
போதிப் பாரடி பூணிடே. (எ)

கருகிக் காசினி யவருக் காசைகொண்
டுருகிச் சென்றுழ லுள்ளமே
பெருகிச் சென்றய ருள்ளத் தான்பிழி
பருகிக் கொண்டருள் பற்றிடே. (அ)

தேய்வுற் றம்மதி போலத் தீதினி
னேய்வுற் றேயுழ லுள்ளமே
யாய்வுற் ருலுறு முள்ளத் தானடி
தாவிக் கொள்ளலுல் லாசமே. (கூ)

பிதுங்கக் கண்களுங் குடும்பப் பேய்ச்சுமைக்
கொதுங்கிச் சென்றுழ லுள்ளமே
பொதும்பர்த் தாணிழ லுள்ளத் தான்புகல்
பதுங்கித் தாவிநீ பற்றிடே. (ω)

திருச்சிற்றம்பலம்.

## 7. அருணிறையா வகம்.

நாளு மொருபடித்தாய் நண்ணுத சிந்தையெலாம்
வேளும் பயமு மிகுந்ததுகாண் மெல்லியலே. (க)

என்று மொருபடித்தா யேலாத சிந்தையெலாங்
கன்றிக் கவலை மிகுந்ததுகாண் காரிகையே. (உ)

நித்த மொருபடித்தாய் நில்லாத சிந்தையெலா
பித்து மிகுந்து பிதறல்காண் பெண்மயிலே. (ங)

நிதமு மொருபடித்தாய் நில்லாத சிந்தையெலா
மதமு மயலும் வளர்ந்ததுகாண் வாணுதலே. (ச)

தினமு மொருபடித்தாய்த் தெள்ளாத சிந்தையெலாஞ்
சினமு மனமுந் திரட்சிகாண் சேயிழையே. (ரு)

எக்கா லு மொன்ரு யிரா தவுள் ளங்களெலாஞ்
சிக்காகி வானந் திரண்டதுகாண் சேயிழையே. (சு)

எப்போது மொன்ரு யிலகாத சிந்தையெலாஞ்
செப்ப மிலாமற் றியக்கமாந் தேன்மொழியே. (எ)

எந்நாளு மொன்ரு யிலகாத சிந்தையெலா
மின்னுமை தானே யிருத்தல்கா ணேந்திழையே. (அ)

தாழ்வாகி நித்தந் தயங்கியிடுஞ் சிந்தையெலாம்
பாழாகு மூழ்கள் பரத்தல்காண் பான்மொழியே. (கூ)

அசையாம னித்த மளியாத சிந்தையெலா
நிசியா மிருட்டு நிலேத்தல்கா ணேரிழையே. (ம)

திருச்சிற்றம்பலம்.

## 8. உண்ணேக்கு மடியார்க் கூன்றுகோல்.

பெருவாய் கொடுமலறிப் பெருமா ளேயுண்ணினேயு
மரியீ ரரிதாகு மருள்வேண் டிடுவீரேற்
கருவா யதுநீக்குங் கண்ணென் றையுமன்றி
யுருவா யதென்னு முள்ளா துள்ளும்மே. (க)

உண்ணீர் மையதோடு முல்லா சமதொளிரக்
கண்ணீர் பொழிவீருட் கதிர்வேண் டிடுவீரே
லெண்ணு னதுமண்ணு மெண்ணென் றையுமன்றிப்
பெண்ணு ணலியாவும் பேணு துள்ளும்மே. (உ)

கள்ள மொடுதறுவிக் கன்னெஞ் சிறவிளகி
யுள்ளுந் திறமுடையீ ரொளிவேண் டிடுவீரே
லுள்ளும் புறமுந்தோய்க் தொளிர்கின் றதையன்றி
யெள்ளுந் திறமெல்லா மெள்ள வியைந்திடுமே. (ங)

ஆய்ந்தைந் தையுமோய்ந்திங் கருளாய்ந் துள்மவிழத்
தோய்ந்துள் மகிழ்வீருட் சுகந்தோய்ந் திடவேண்டிற்
காயும் பவச்செந்தீக் காயுந் தனேயன்றி
வீயுங் குணம்யாவும் வேண்டா துள்ளும்மே. (ச)

உருகா வணமுருகி யுமைபா கனையுன்னுந்
திருவீ ரருண்மின்னற் சுவைதே டிடுவீரே
லருவா யறிவாகி யருளா குவதன்றிக்
கருதா தொருகாலுங் கனிவா யிருங்காணே. (ரு)

அஞ்சுங் கடுகடுப்ப வமுதுண் டிடவெண்ணித்
துஞ்சும் பெரியீர்கா டுணிவொன் றுரைசெய்வேன்
வஞ்ச மதுவாக மன்னிங் கன்புவைத்தா
லெஞ்ச விலதாகி யெரியு மவன்றனையே. (சு)

இங்குந் தெரியாம லிருளற் றொளிர்கின்ற
வங்குந் தெரியாம லலையு மறிவீர்கா
டுங்கந் தருந்ததிநெய் தோன்றச் செயுமதுபோற்
றுங்கந் தருஞ்சிவமாஞ் சுவையிச் சையைத்தொடுமே. (எ)

தெளியா மலுந்தெளிவுஞ் சேரு மகமன்றி
யளியா மலுமளியு மாறு மகத்தீரே
தெளிவொன் றும்மொளிரத் திறமென் றும்மொளிர
வளியென் றும்மொளிரு மவரைத் தொடர்மின்னே. (அ)

மையார் விழியாரு மனையீ ழமுநெருப்பாய்
மெய்யாம் பொருடேடி வெருவு மடியார்காள்
பொய்யா கியபுலனைப் பொய்யாக் கிப்புந்திச்
செய்யாச் செயலுடையார் செயலுக் கிசைமின்னே. (கூ)

நிலையா மையுந்தோன்றி நெறியோ டுநடந்து
மலையா மனங்கொண்டு வாடு மடியீர்கா
ளுலையா வுலைவோடு முணரா வுணர்வோடுங்
குலையாச் சுகமோடுங் குளிர்வார்க் குளராமே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 9. ஆசை யெளிதா யவிழ்தல்.

நீத்திருந் தாரையு நேயமுட் கொண்டு நெறியினிதங்
காத்திருந் தாரையு மெல்லா வுயிருக்குங் காழ்ப்பைத்தன்முன்
சேர்த்திருந் தாரையுஞ் செத்திட வாசை திளைத்துளத்தைப்
பார்த்திருந் தாரையும் பாழ்ம்புல னும்வந்து பற்றிடுமே. (க)

உள்ளம் வெதும்ப வுரோமஞ் சிலிர்ப்பவு மோடியெங்குங்
கள்ளம் பதுங்கவுங் கண்டந் தழுப்பவுங் கண்ணிரண்டும்
வெள்ளம் பொழியவுங் கம்ப மெடுக்கவு மெய்யளித்தா
லெள்ளுந் திறமும் விரும்புந் திறமும்வந் தெய்திடுமே. (உ)

உயர்ச்சி யிதுவென் றுறுத்தி யுயர்ச்சி யலாதிழியு
மயர்ச்சி யிதுவென் றறிந்தறி யாமைக் கடங்குகிலா
வியற்கை யெதுவென்றெந் நேரமு நாடி யிருப்பவர்க்கே
மயக்கமுங் காம வெகுளியு மெங்ஙனம் வந்திடுமே. (௩)

தாவலுங் காரியப் பேய்காட்டத் தீயிற் றனியினின்று
வேவலுந் தானுயிம் மேதினி வாழ்க்கையை மெய்யலவென்
றோதலும் விட்டிட் டுடலாதி யீந்து குரவர்க்கவ
ரேவலி னிற்பவர்க் கெங்ஙனங் காமம்வந் தெய்திடுமே. (ச)

கனக்கப் பொதியுடற் கைப்ப திலாதுதித் தித்துவிடிற்
சினக்கப் பொறுமைத் திருவா பரணத்தைத் தேகத்தொடுஞ்
சுமக்கப் பிறர்க்கொப் பியாவுள்ளத் தேனைத் துயரமிற
வமைக்கக் கருத்தி லுடையாருக் காசை யலைந்திடுமே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 10. சிவகடாட்சந் தங்கியுந் தீப்புலன்றித்தித்தல்.

தலைவன் றுனைகாத் தலைவி தவிப்பபோற்
தலைவன் றுணுகுந் தலைவிதவிப் பேயாளே. (க)

தலைவன் றனையறிந்தா டலைவனை நாடலன்றித்
தலைவன் றணத்தலென் றன்றலைவர்க் கேயாதே. (உ)

புடங்கொளா வேலையெலாம் பொன்மினு போலத்
திடங்கொளா வேலை செருமியிடு மாணவமே (௩)

பசிமிகாள் சொன்றியினைப் பற்று ளஃதறிந்துங்
கசிவிலான் றன்றலைவ னென்றே கழறிடுமே. (ச)

இலாப்பண்ட முள்ளார்பா லெந்நேரங் கேட்பபோ
னிலானிற்பூர் வாழ்ந்தேனை நேடாமன் மங்கிடுமே. (ரு)

தானே நிகழுந் தனக்குள்ள தென்றுரைத்தான்
மானே தருமா தரும்மருள்வ ராராதே. (சு)

கேட்டுப் பதையாதே தானே கெழுமுமென்றன்
ஞட்டப் பதைப்பதனை நாடாதே யென்றதடி. (எ)

காணது கண்டிருந்துங் காசினிமெய் யென்றதுபோற்
பேண தருளைப் பிதற்றினய் பெண்மயிலே (அ)

எனக்கு மருட்பார்வை யீயாரோ வென்றனையே
யுனக்குமுடற் கண்ணீர் நயப்போ டுரைத்திலையே. (கூ)

நூலிகந்து மூன்றுடை நோற்றுமரு ணுந்திலையே
போலிநீ யாகையாற் பூத்ததிலை யுன்னுளத்தே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 11. சற்குருவை வழிபடா மாணுக்கியைத் தள்ளல்.

கண்டா லனன்மெழுகு காணுக்காற் கூரையினீ
ரென்ற லவருரைக்கு மேவற் கியைந்திடுமே. (க)

வண்மை யுடையாண் மகிழ்நர்மேல் வாஞ்சையாய்ச்
சொன்ன படிசெய்து சுகத்தை யடைவாளே. (உ)

அவர்தா னிவண்மீதி னன்புவைத் தாரென்னி
னிவடா னவர்மீ திரக்க முறுவாளே. (ந)

மகிழ்ச்சி தரும்பயனை வாரி யளித்ததனு
லிகழ்ச்சிபோய் நாயகன்சொ லேவற் கியைந்தாளே. (ச)

களிப்பு தரும்பயனைக் காணுள் சுகத்தைத்
திளைக்கவொரு சொப்பனமேற் சிந்தை யவிழ்ந்தாளே. (ரு)

சிந்தை யவிழ்ந்ததலாற் செய்தாளோ வேவலெனின்
வந்துபணி செய்யென்றான் மகிழ்ச்சியொடுஞ் செய்வாளே. (சு)

குயஞ்சற்று மில்லாள் குறுகுவளோ வேவலெனிற்
செயஞ்செயஞ் சித்த சாதனநீ செப்பியதே. (எ)

கூச்சத்தா லேவல் குறுகிலா ளென்னிலிது
பேச்சுத்தா னேவல் பெறுவ டனித்திடத்தே. (அ)

நாயக னுரென்னி னவிலுதற்கு வேண்டிடுமென்
றுயின்ழயே நானு மறைவே னுனைப்போலே. (கூ)

இப்பிழைப்ப துண்டுடுத்தற் கேயல்லாற் பார்க்கிலிது
செப்பமோ சொல்லாய் தெரிந்துநீ சேயிழையே. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 12. சிவகடாட்ச மில்லாதார் தீக்குறி.

எஞ்சிடுவர் கூறைசோ றிடுவார் பின்போ
யேழையேன் றனையாளு மென்று நாளுந்
தஞ்சிடுவர் மோகவலை தன்னிற் பட்டுத்
தாழ்ந்திடுவ ராழ்ந்திடுவர் தாளு மாழி
கெஞ்சிடுவர் மங்கையர்மார் பெழுந்த தோற்குக்
கிலேசித்துத் தம்முடலம் போமென் றெண்ணி
யஞ்சிடுவர் தம்முள்ளத் தொளிர்ந்து வாழு
மரனைநினைந் துருகியிடு மன்பி லாரே. (க)

மலைந்திடுவ ருள்ளமெலாம் வாடி வாடி
மயங்கிடுவர் பயங்கொடுளம் வருத்து நோயா
னலிந்திடுவர் குருடுசெவி டாகி யுள்ள
நாணிடுவர் பேணிடுவர் நயமி லாதைக்
குலைந்திடுவர் புழுச்சொரியக் காய மெல்லாங்
குறைந்திடுவ ரங்கங்க டொழுநோய் கொண்டிட்
டலைந்திடுவர் தம்முள்ளத் தொளிர்ந்து வாழு
மரனைநினைந் துருகியிடு மன்பி லாரே. (உ)

சுதந்தரமா யியங்கிடுவர் விதிமால் வாழ்வைத்
தொட்டிடுவர் விட்டிடுவர் பொறைக டொரத்
துதைந்திடுவர் துன்பச்சே றளைந்து நின்று
துணையெமக்கு நீரென்று சொல்லிச் சொல்லி
விதந்திடுவ ரவர்பெருமை வியப்புண் டாக
வேண்டாதா ரார்த்தெழுந்து விரவும் போதி
னதிர்ந்திடுவர் தம்முள்ளத் தொளிர்ந்து வாழு
மரனைநினைந் துருகியிடு மன்பி லாரே. (ந)

உவந்திடுவர் தமக்குதவி செய்திட் டாரை
யுறுகணருள் வார்க்கென்று முறுக ணுவர்
தவிர்ந்திடுவர் நன்றென்ற தகைமை யெல்லாந்
தவிர்ந்திடுவ ருயிரையிற்றுக் கின்றிச் சென்னி
கவிழ்ந்திடுவர் நல்லவரை நாளு மாடிக்
கடிந்திடுவர் கடிந்திடுவர் கருணை யிற்கு
ளவிழ்ந்திடுவர் தம்முள்ளத் தொளிர்ந்து வாழு
மரனைநினைந் துருகியிடு மன்பி லாரே. (ச)

தலையிடுவர் பாவமாஞ் சமுத்தி ரத்திற்
சாவதுவு மாவதுவு மறந்து தானே
நிலையிடுவ ருலகவாழ் வதனை யென்று
நின்றிடுவர் மங்கையர்சொன் னெறியி னூடு
முலையினிடு மெழுகதுபோன் மங்கை மாருக்
கூற்றிடுவர் கண்ணீரு ளாழ்ந்து துன்பத்
தலறிடுவர் தம்முள்ளத் தொளிர்ந்து வாழு
மரனைநினைந் துருகியிடு மன்பி லாரே. (ரு)

திருச்சிற்றம்பலம்.

## 13. ஞானத் தியானத்திருப்பார்க்கு நற்றடை விலக்கல்.

மூச்சுப் பகையாகு முன்னவன்சொன் முன்னூலின்
பேச்சுப் பகையாகும் பின். (க)

தும்ம விருமறருந் தொண்டைக் கரகரப்பும்
விம்மலுறுங் காணின் விடம். (உ)

இரவி யொளியு மதியொளியு மெய்து
மெரியொளியுங் காணி னிகல். (ங)

கம்பமுங் கம்பலையுங் கண்ணீர் பொழிவதொடு
மும்பரு மொவ்வா துளம். (ச)

நினைத்த லுடனே நினையா தொழியு
மறத்தலுங் காணின் மறம். (ரு)

தொடுத்தலு மன்பு சுருங்கலுந் தாதுக்
கடுத்தலுங் காணிற் கடை. (சு)

நன்கு மதித்து நடித்தலு நல்லறிவ
ரென்கவு மெண்ணி விடர். (எ)

அசைவற் றிருப்பவனென் றெல்லாரு மெண்ண
வசைவற் றிருத்த லழுக்கு. (அ)

அயலோ டுறவினையு மாகத்திற் பற்றுஞ்
செயலு முறினதற்குத் தீது. (கூ)

ஐயமுங் கால மறிதலு மங்கையர்
தையலுங் காணிற் றடை. (ய)

திருச்சிற்றம்பலம்.

## 14. உள்ளுணர்ச்சி.

### தலைவன் கருணையை வேண்டித் தவித்தல்.

இட்டமா யெங்கு மிருந்தாரை யெய்துவேன்
கட்டு விடுமாற் கலந்து. (க)

### தன்னினைவுக் கேட்டாமற் றவித்தல்.

ஓராம லெவ்விடத்து முள்ளாரை யுள்கிலே
னோராத வில்லங்க மென்று. (உ)

### தலைவனிடத்தாசை வையென்று தோழிக்குத் தன்குணமறிவித்தல்.

என்று மவரை யிறைஞ்சி யிருப்பதலா
லொன்று முகந்ததிலே னே. (ங)

### உன்செயலொழி யென்ற தோழிக்கு உள்ளீடறிவித்தல்.

தாமாய்க் கலப்பரேற் சாருவேன் மற்றன்றி
யானாய்க் கலந்ததி லென். (ச)

### காத்திரு வென்றதோழிக்குத் தன் கனிவறிவித்தல்.

நினையா நினைப்பை நினைந்திருப்ப தன்றி
யனையேன் வலிய னயர்ந்து. (ரு)

### நியம மறந்தா யென்றட்குத் தன்னினை வுறுத்தல்.

காயமு நெஞ்சுங் கலந்து கொடுத்திடுவே
னுயிழைநீ மெய்யென் றறி. (கூ)

**தலைவன் கருணை யில்லை யென்றற்குத் தன்னினைவுறுத்தல்.**

விருப்புண்டு காண வெறுப்புண்டு முந்த
விருப்புண்டு முள்ள மெனக்கு. (எ)

**தலைவற் குணர்த்தலை வேண்டிச் சகியைத்தழுவல்.**

விடய நெருப்பின் மெலிவேனை யாரே
மடிய நினைப்பா ரறி. (அ)

**தலைவனை யறியாத்தலைவி தவித்தலைச் சகி வினவல்.**

நாயகனை நானறியே னடியக்கா லுள்ளெங்கு
மோயாத தீயா யுறும். (கூ)

**தலைவனை நினையென்றற்கு மறதியைச் சாற்றல்.**

உள்ளினுற் காண்பரென வுள்குவேன் காண்கிலா
ருள்ளா னெனவுள் ளுணர்ந்து. (க0)

**தவியாதே யென்ற தோழிக்குத் தாங்கா துரைத்தல்.**

இன்ன மிருந்தே னியைந்தார் கலவியா
னென்னப் படுவ தினி. (கக)

**சாவென்ற தோழிக்குத் தலைவன் பிரிவ னெனச் சாற்றல்.**

செத்தால் வருவரெனச் சாவென சாகானென்
றற்று ரெனதுள் ளறி. (கஉ)

**வருத்தமில்லை யென்ற தோழிக்கு இருத்த லுரைத்தல்.**

காண்கிலா ரென்று கலவேன் கலந்தக்கா
னீங்குவா ளென்பர் நினைந்து. (கங)

**ஒருபடித்தேன்றேன்ற தோழிக்கு உள்ளீ டறிவித்தல்.**

கண்டான் மகிழுவேன் காணுக்காற் றுன்புழப்பே
னென்றுற் பழியா திரு. (கச)

**இருவரு மொருகருத்தல்லவென்றதோழியை யிகந்துரைத்தல்.**

விட்டால் விடுவர் விடாக்கான் மிகக்கவுவர்
பட்டாற் படாரே பழி. (கரு)

**கருத்துப்படி யிருப்பரென்ற தோழியைக் கடிந்துரைத்தல்.**

நின்றக்கா னிற்ப ரிருந்தா விருந்திடுவர்
விண்டக்கால் விள்ளார் மிக. (கசு)

அழுதழை யென்ற தோழியைத் தொழுதகறல்.

யான்கண்ட போத வரையா னறிந்திலேன்
ருன்கண்ட போது தரும். (கஎ)

நினை யென்ற தோழியை நெடிதுயிர்த்துக் கடிதல்.

நினையா திருக்க நினைப்பே னினைத்தா
லணையா திராரே யவர். (கஅ)

கருத்துறுத் தென்ற தோழியைக் கடிந்துரைத்தல்.

கண்டேம்யா மென்று களிப்பேன் களித்தக்கால்
விண்டொடு வாரே மிக. (ககூ)

உருவமொழி யென்ற தோழிக்கு உள்ளீடறிவித்தல்.

நான்போன தின்றூர்க்கு நாடறியான் றன்னுருவ
மேன்போ மிலகுமுளத் தே. (உ0)

தலைவன் போலியைத் தகைத்தல்.

நல்லன்பின் மேயிரென நம்மை விளித்தனினக்
குள்ளன் பொளிருதன்மட் டும். (உக)

பதைத்த தலைவியைத் தலைவன் பழித்தல்.

நாறு மலர்போல நாங்கலந்த தின்றேநீ
நாறு தொழிந்திருந்த நாள். (உஉ)

பரிந்தர்ச்சி யென்ற தோழியைப் பழித்தல்.

விளித்தக்கால் வேறும் விளியாக்கா லும்மற்
றொளித்தக்கா லன்னியமோ டும். (உரு)

திருச்சிற்றம்பலம்.

---

## 15. திருவருளைத் தெரிந்து வினவல்.

அருவத் துருவ மடையாத தன்றி
யுருவத் தையுமருவ மொன்று—தருவத்
தருவ மடையா தறிவு மசத்துந்
தெரிவதெனக் கெவ்வாறு செப்பு. (க)

ஆன்ற வுளத்துக் கழகியபே ரின்புருவா
வேன்றவினைத் துன்பசுக மேய்ந்துவிரு—ளூன்றிஞ
லண்ண லறிந்த தடைந்தோ பரமுத்தன்
வண்ண மறிந்ததுவோ மாற்று. (௨)

தனுவோ கரணமோ தானிரண்டுந் தாங்கு
மனுவோ மலமோ வினையோ—வினிதா
மருளோ சிவமோ வளிந்துநெக்கு நெக்கா
யுருகுவதீ தென்றே யுரை. (௩)

தூலத்தி ஞலேயோ சூக்குமத்தின் றன்ஞலோ
மேலைக் கியையும் வினையாலோ—வாலிக்கு
முள்ளிருளி ஞலோ வுயிரையறிந் தின்பதுன்ப
முள்ள தளித்த லுரை. (௪)

ஒருதீப மெல்லா வுயிர்க்கு முதவியபோ
லொருசூக் குமமெவ் வுயிர்க்குந்—தருமின்ப
துன்பமெனி னென்னை யிதயத்திற் றேன்றவெனக்
கின்பமாய் நன்ரு யியம்பு. (௫)

அருட்கடைக் கண்பார்வை யான்மாவுக் கெல்லாம்
வருபடிவத் தோவெங்கும் வாய்த்தோ—கருவுடைத்தாய்
நின்று கலங்கு நிலைமையு ளென்றன்னு
ளென்று முறைவா யியம்பு. (௬)

இருசூக் குமந்தானே வேற்றுமையி னெய்தி
யொருமாக்க ளின்பதுன்ப முற்றல்—வருதோட
மென்னை யுயிர்க்குயி ராகியெங் கெங்குமங்காய்த்
துன்னுங் குருபரனே சொல். (௭)

உம்பரோ கீழோ வொரிடத்தோ பக்கத்தோ
வெங்கணுமோ வெந்நாளு மெய்திடத்தோ—தங்கா
விலக்க மிலாத வெழின்மாயை தன்னுட்
கலக்கமிவி டத்தென்று காட்டு. (௮)

அருட்பார்வை காலாதிக் கஞ்சுமோ வன்றி
யிருட்பார்வைக் கோடி யிளைக்குமோ—வருட்பார்வை
தானிரண்டு மோடத் தகரா திருந்ததென்ன
வூனிரண்டு மில்லா வுரை. (௯)

யானோவென் னுள்ளமோ வென்னுள் ளிருக்குமிறை
தானோ வவனைத் தழுவியோ—தேனென்ற
றன்னாலோ நல்வினைக டன்னாலோ வாதனையை
யுன்னும லுன்ன லுரை. (க0)

அருள்வந் திருடா னகன்றதோ வன்றி
யிருள்போ யருள்வந் தியைந்ததோ—விருளு
மருளு மகன்றுவந்த தில்லையோ வென்கண்
ணிருள்போ யருள்வந்த தெற்று. (கக)

தன்னை யறிந்து தலைவனைக் காண்பதுவோ
நின்னை யறிந்தென்னை நேடுவதோ—சொன்னதோர்
நின்னையு மென்னையு நேரா வறிந்ததுவோ
வென்னை யறிந்த தியம்பு. (கஉ)

ஒருகான் மகிழ்ச்சி யொருகா லிகழ்ச்சி
தருகா லுயிர்க்கொக்குஞ் சாற்றி—னொருகால்போ
னிற்பமெனி னோர்கால நேயமாய் நேயமின்றி
நிற்பதனுக் கேது நிகழ்த்து. (கந)

நானிறந்தா னீயில்லை நீயிறந்தா னானில்லை
தானறுவென் றென்னைநீ சாற்றுவதென்—னானனங்க
ளைந்துடையாய் செய்யதோ ராறுடையாய் நஞ்சுதின்
றுய்ந்துடையா யிற்றென் றுரை. (கச)

எளியே னருளினொளித் தின்பமேய்ந் தேனோ
வருளையளித் தின்பமெனக் கார்ந்தோ—வருளதுதா
னின்ப மளித்தோ விரண்டு மறியேனுக்
கின்ப மளித்தவகை யெற்று. (கரு)

அருளுதய மாயின்ப மாயதோ வின்பப்
பொருளுதய மாய்வரலோ போத—மருளின்ப
மொத்தெழுந்த தோவுலகத் தோவாப் பரனேநீ
யெற்றெழுந்த தென்னுளத்தி லே. (கசு)

ஒன்றோ விரண்டோ வொன்றிரண்டு மில்லையோ
வொன்றிரண்டு மில்லையென்ற தோடியதோ—வொன்றிரண்டு
நிற்பதோ வன்னியமோ நீநானு நின்றநிலை
யிப்படியென் றேழைக் கியம்பு. (கஎ)

அருளை மறைத்தின்ப மார்ந்ததோ வின்பப்
பொருளை மறைத்தெழலோ போத—மருளினெழு
மின்பமறைத் தின்ப மெழுந்ததோ யான்போக
வின்பமது வாயிருந்த தெற்று. (கஅ)

என்னறிவன் பாகி னிளகியிடா தென்றனுள
முன்னறிவன் பாகினுளத் துள்ளொளிரு—மென்னறிவு
நின்னறிவு மன்றென்னி னேரா நினக்கந்தோ
துன்னன்பை யின்னதெனச் சொல். (கசு)

கலாதிமல நீக்கினுற் காணுமெனக் கென்னைக்
கலாதிமல நீக்காதேற் காண்போங்—கலாதிமல
நீக்க விடய நிகழ்ந்ததோ நாயேற்கு
நீக்காம லோதா னிகழ்த்து. (உ0)

கட்டிக் கடம்பொத்துக் கண்டாலு மைந்திடத்தின்
கட்டிக் குணங்காணுங் கண்டிடிலே—கட்டிவிடாச்
சக்காதிப் பொன்னல் குணம்பலவாய்த் தந்ததுவென்
னிக்கனை வென்று யியம்பு. (உக)

திருச்சிற்றம்பலம்.

## 16. சத்தி னசலத் தடை கெட்டல்.

அருக்கொண் டநும்மே னியிலே தயமு மன்போ டறம்வளர்க்க
வுருக்கொண் டதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரேற்
கருக்கொண் டவன்பே தைமைதீர்ந் தருளைக் கண்டெ னுளந்தழைக்கப்
பெருக்குண் டசெந்தே ஞெடையுங் கலக்கும் பெரும்பூ ரணத்தீரே. (க)

கைப்புண் டவிம்மே தினிதா னுறவாய்க் கண்டு கசந்தருளி
னுய்க்கின் றதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரேற்
பொய்க்கின் றபொலா விருள்போ யகலப் புந்திபு ளொளியனைய
பித்துண் டிடவந் தருடந் தருளும் பெரும்பூ ரணத்தீரே. (உ)

எடுக்கின் றவன்மீ தினிருந் ததென வென்று மிருந்தவெனை
யொடுக்கின் றதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரேற்
கொடுக்கின் றதுநீ ரருளு மருளிற் கொண்டு விசைமனனைப்
பிடிக்கின் றநனீ ரனலா யொளிரும் பெரும்பூ ரணத்தீரே. (௩)

மறைகின் றதும்வான் சுவையீ தெனவும் வந்து வந்துநதி
யுறைகின் றதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரே
லெறிகின் றனநீ ளொளிபின் படவு மியைவ தயர்வதின்றே
பிறகொன் றியகண் ணெனவென் முன்வரும் பெரும்பூ ரணத்தீரே. ()

எழுகின் றதுமெங் குமிருந் திடுநா னெள்ள விலாதிரிய
வொழிகின் றதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரே
லழலொன் றியசன் மமிறந் திடவு மன்றே டிதுவரைசெய்
பிழைகொன் றதுசெய் துசெயா தொளிரும் பெரும்பூ ரணத்தீரே. (ரு)

அழியென் பதுங்கா மமதா தியையு மமுதோ டுயிர்கலக்க
வொழியென் பதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரேற்
கழையென் பதுவுங் கனியென் பதுவுங் கண்டிடி லேகசந்த
பிழையென் றிடவின் பமதா யொளிரும் பெரும்பூ ரணத்தீரே. (சு)

நெருகின் றதிலா துசிக்கென் றதுபோய் நினைப்போ டுறுமறப்பு
முருகின் றதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரேற்
றருகின் றனவுந் தகவோ வுதலுஞ் சரியென் றுரைசெய்தம்
பிகைநங் கையொடின் பமதா யொளிரும் பெரும்பூ ரணத்தீரே. (எ)

மிளிர்கின் றதஞ்சா யவையுள் ளமதின் மெய்ய தொடுஞ்சுகமு
மொளிர்கின் றதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரேற்
றெளிகின் றதெளி வினினுந் தெளிவுந் திரண்டென் னுளம்பொலியப்
பிளவின் றியுயிர்க் குயிரா யொளிரும் பெரும்பூ ரணத்தீரே. (அ)

பாய்கின் றதொரோ சைபண்ணே டுறைந்தும் பளபள வெனுமொலியி
னேய்கின் றதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரேற்
றேய்வொன் றிடவா தனையா முபயந் தொளிவோ டருளியருள்
பேயொன் றிடவே யமுதீந் தருளும் பெரும்பூ ரணத்தீரே. (கூ)

இடிபட் டவிவண் டபிண்டங் களெலா மெனக்கெய் வரியவுமக்
கொடிபட் டதெவ்வா றுரையீ ருயிருக் குண்மை யுணர்த்துவிரே
னொடிபட் டபொழு தினுநண் ணிதிலே நுவல வரியசுகம்
பிடிபட் டவழி யதுதந் தருளும் பெரும்பூ ரணத்தீரே. (௰)

**திருச்சிற்றம்பலம்.**

## 17. மெய்யைத் தெரிய வினவல்.

வேதனல் விபுதரால் விண்டுவா லருகுறை
மாதராளுங் காண்கிலா வாதிலா மனேலயர்
தீதுலாவு மாந்தர்தஞ் சிந்தையூடு மன்பர்தங்
கோதிலாத நெஞ்சினூடுங் கூடிநின்ற தென்னேயே. (க)

ஊனினு முளத்தினு முரையினுந் தரையினும்
வானினும் வதிந்திடா வாதிலா மனேலயர்
நானெனும் பெரும்புர நாசமாக்கல் போலவே
யூனெனுந் திரிபுர முருத்திடாத தென்னேயே. (உ)

அழுங்கிடு மனத்தையு மழுங்கிடா மனத்தையும்
வழங்கினும் வழங்கிடா வாதிலா மனேலயர்
முழங்கிடுந் தழங்கொலி முழங்கிட வுளத்தளித்
தொழுங்கிடு முளத்துளவ் வொலிபறித்த தென்னேயே. (ங)

புகழினு மிகழினும் பொருந்தலோ டருந்தல்போய்
மகிழினு மகிழ்ந்திடா வாதிலா மனேலயர்
தகவொடுஞ் சினத்தொடுந் தானுறைந்துந் தண்ணளிப்
புகலிடம தாயுயிர்போற் போற்றுகின்ற தென்னேயே. (ச)

தேடினுந் திகைப்பினுஞ் சிந்தைமுற்று நேர்ந்திட
வாடினும் வதிந்திடா வாதிலா மனேலயர்
காடினுங் கரம்பினுங் கடன்மணுதி யைந்தினு
மூடினின்று மெங்கணு முருகிநின்ற தென்னேயே. (ரு)

குணங்களோடு மாயினுங் குணங்களின்றி யாயினும்
வணங்கினு வுளங்கொளும் வாதிலா மனேலய
ரணங்கொடு மிருந்துநீ யாசையான யாவையு
முணங்கினு லுளங்கொள்வேனென் றோதுகின்ற தென்னேயே. (சு)

பறந்திடு முளத்தையும் பறந்திடா வுளத்தையு
மறந்திடின் மகிழ்ந்திடும் வாதிலா மனேலயர்
துறந்திடுந் துறவினுந் துறந்திடாத் துறவினு
மிறந்திடும் பிறப்பினு மிருந்தவாற தென்னேயே. (எ)

பாழ்த்த வாழ்வு பாறிடாது பற்றுள மிருக்கினும்
வாழ்த்தினன் மகிழ்ந்திடும் வாதிலா மனேலயர்
காழ்த்திடு முளத்தினர் கருத்தினுக்கெட் டாதநீ
தாழ்த்திடு முளத்தர்பின் சரித்தவாற தென்னேயே. (அ)

உன்னினு லுரைப்பினு லுண்மையின்றி யாயினு
மன்னினல் வதிந்திடும் வாதிலா மனேலைய
ருன்னிடிற் சகலமா முன்னிடாது கேவல
மென்னிலென் னுளத்துநீ யெழுந்தவாற தென்னையே. (கூ)

ஏங்கியானு மேக்கம தின்றியானுங் கேட்டருள்
வாங்கவுன்னின் வந்தொளிர் வாதிலா மனேலையர்
தூங்குவா ருளத்தினிற் றூய்மையாகி நாடொறுந்
தூங்கிடார்க் கருளதாகித் தோன்றுமாற தென்னையே. (ம)

திருச்சிற்றம்பலம்.

## 18. முன்பின் மலைவாய் மொழிதலை வினுதல்.

செய்யமெய் யின்பநீர் பொய்கடள் ளென்கிறீர்
பொய்கடள் ளியபோ தையமுய வென்கிறீர். (க)

வாழுமென வின்பநீர் தாழ்தல்செய் யென்கிறீர்
தாழ்தல்செய் துவிடின் வாழ்வைநீ யென்கிறீர். (உ)

தேறுமெய் யின்பநீர் பாறுமுள் ளென்கிறீர்
பாறுமுள் ளென்பது வேறதல லென்கிறீர். (ந)

ஆவிமெய் யின்பநீர் பாவிநீ யென்கிறீர்
பாவல்செய் தபொழு தோவுநீ யென்கிறீர் (ச)

வள்ளன்மெய் யின்பநீர் கொள்ளுமன் பென்கிறீர்
கொள்ளுமன் புவரின் விள்ளுமுள் ளென்கிறீர் (ரு)

இதங்கொண்மெய் யின்பநீர் பதுங்குநீ யென்கிறீர்
பதுங்குகின் றபொழு தொதுங்குநீ யென்கிறீர் (சு)

நீடுமெய் யின்பநீர் தேடிநில் லென்கிறீர்
தேடிநின் றபொழு தாடுமுள் ளென்கிறீர் (எ)

ஆயுமெய் யின்பநீர் தூயையல் லென்கிறீர்
தூய்மைசெய் தபொழு தோய்வைநீ யென்கிறீர். (அ)

இட்டமெய் யின்பநீ ரெட்டல்விள் ளென்கிறீ
ரொட்டல்விண் டுவிடிற் கெட்டதுள் ளென்கிறீர் (கூ)

களிக்குமெய் யின்பநீ ரொளிக்குணில் லென்கிறீர்
ரொளிக்குணின் றபொழு தொளிக்குமின் பென்கிறீர். (கO)

இன்பின்மெய் யின்பநீ ரின்பமுண் ணெண்கிறீர்
ரின்பமுண் டுவிடிற் றுன்பமா மென்கிறீர். (கக)

உற்றமெய் யின்பநீர் பற்றிநில் லென்கிறீர்
பற்றிநின் றுவிடிற் பற்றல்விள் ளென்கிறீர். (கஉ)

திருச்சிற்றம்பலம்.

## 19. அயர்ச்சிதீரு மனுக்கிரகம்.

நின்றிட நின்றிட நெஞ்சந் தணியு
நின்றிட நின்றிட நின்மலந் தோன்று
நின்றிட நின்றிட நீள்சுவை யாகு
நின்றிட நின்றிட நிற்பது போமே. (க)

அறிய வறிய வறிவுளத் தூறு
மறிய வறிய வகங்குழை வாகு
மறிய வறிய வருண்மழை பெய்யு
மறிய வறிய வானந்த மாமே. (உ)

இருக்க விருக்க விளகு மிளகி
யுருக்க வுருக்க வொண்சுவை யன்பு
பருக்கப் பருக்கப் பண்படு நெஞ்சந்
திருக்கற் றிருக்கத் திதிக்கு முளமே. (ங)

பார்த்திடப் பார்த்திடப் பாற றெரியும்
பார்த்திடப் பார்த்திடப் பாற லடக்கும்
பார்த்திடப் பார்த்திடப் பண்பமு தூறும்
பார்த்திடப் பார்த்திடப் பாறிடும் பார்ப்பே. (ச)

உன்னிட வுன்னிட வுள்ளந் தெரியு
முன்னிட வுன்னிட வுள்ளஞ் சுழலு
முன்னிட வுன்னிட வுள்ளந் தணியு
முன்னிட வுன்னிட வுள்ள மறுமே. (ரு)

உன்ன லொழிய வோங்கிடும் பேரொளி
யுன்ன லொழிய வோங்கிடு மின்ப
முன்ன லொழிய வொருவெளி காணு
முன்ன லொழிய வொன்றிரண் டின்றே. (சு)

கொடுக்கக் கொடுக்கக் குழைவு பெருகுங்
கொடுக்கக் கொடுக்கக் குரவை யுளத்தெழுங்
கொடுக்கக் கொடுக்கக் குமண்டை மிகுத்திடுங்
கொடுக்கக் கொடுக்கக் குமண்டை யுறுமே. (எ)

பதுங்கப் பதுங்கப் பதுங்கிடு நெஞ்சம்
பதுங்கப் பதுங்கப் பாறிடு மைம்புலன்
பதுங்கப் பதுங்கப் பாழ்வெளி யாகிப்
பதுங்கப் பதுங்கப் பரசுக மாமே. (அ)

நீத்திட நீத்திடக் கீழ்ப்படு நீள்புல
னீத்திட நீத்திட மேற்கொளு நின்மல
நீத்திட நீத்திட நெஞ்சங் துறக்கு
நீத்திட நீத்திட நீப்பது நீப்பே. (கூ)

வந்திட வந்திட நெஞ்ச மடியும்
வந்திட வந்திட மைய றணியும்
வந்திட வந்திட மகிழ்ச்சி பிறக்கும்
வந்திட வந்திட வந்தது போமே. (ώ)

திருச்சிற்றம்பலம்.

## 20. தனையடைந்தார்க் குதவும் தகைமை.

அருளுந் தருவ ரருளுந் தருவ ரருளுந் தருவாரே
தெருளுந் தருவர் தெருளுந் தருவர் தெருளுந் தருவாரே
பொருளுந் தருவர் பொருளுந் தருவர் பொருளுந் தருவாரே
மருளு மகல வருளும் பெருகும் வளவுட் பதியாரே. (க)

திருவுந் தருவர் திருவுந் தருவர் திருவுந் தருவாரே
கருவுந் தருவர் கருவுந் தருவர் கருவுந் தருவாரே
யருவுந் தருவ ரருவுந் தருவ ரருவுந் தருவாரே
மருவு மடிய ருருவு ளொருவர் வளவுட் பதியாரே. (உ)

அளியுந் தருவ ரளியுந் தருவ ரளியுந் தருவாரே
ரொளியுந் தருவ ரொளியுந் தருவ ரொளியுந் தருவாரே
களியுந் தருவர் களியுந் தருவர் களியுந் தருவாரே
வளைவு மகல வளியும் பெருகும் வளவுட் பதியாரே. (௩)

தாழ்வுந் தருவர் தாழ்வுந் தருவர் தாழ்வுந் தருவாரே
வீழ்வுந் தருவர் வீழ்வுந் தருவர் வீழ்வுந் தருவாரே
பாழுந் தருவர் பாழுந் தருவர் பாழுந் தருவாரே
மாழ்குஞ் சினமு மூழ்கு மொடியும் வளவுட் பதியாரே. (௪)

நாடுந் தருவர் நாடுந் தருவர் நாடுந் தருவாரே
நேடுந் தருவர் நேடுந் தருவர் நேடுந் தருவாரே
பாடுந் தருவர் பாடுந் தருவர் பாடுந் தருவாரே
வாடுந் தொழிலு நாடு மகலும் வளவுட் பதியாரே. (௫)

நெஞ்சுந் தருவர் நெஞ்சுந் தருவர் நெஞ்சுந் தருவாரே
துஞ்சுந் தருவர் துஞ்சுந் தருவர் துஞ்சுந் தருவாரே
யஞ்சுந் தருவ ரஞ்சுந் தருவ ரஞ்சுந் தருவாரே
வஞ்ச மகலத் தஞ்சம் பெருகும் வளவுட் பதியாரே. (௬)

துப்புந் தருவர் துப்புந் தருவர் துப்புந் தருவாரே
யெய்ப்புந் தருவ ரெய்ப்புந் தருவ ரெய்ப்புந் தருவாரே
கைப்புந் தருவர் கைப்புந் தருவர் கைப்புந் தருவாரே
வைப்பும் பிறங்கி யொப்பு மகலும் வளவுட் பதியாரே. (௭)

தண்ணுந் தருவர் தண்ணுந் தருவர் தண்ணுந் தருவாரே
யெண்ணுந் தருவ ரெண்ணுந் தருவ ரெண்ணுந் தருவாரே
கண்ணுந் தருவர் கண்ணுந் தருவர் கண்ணுந் தருவாரே
வண்ணம் பொலியத் துன்னும் பெரியர் வளவுட் பதியாரே. (௮)

ஆய்வுந் தருவ ராய்வுந் தருவ ராய்வுந் தருவாரே
யோய்வுந் தருவ ரோய்வுந் தருவ ரோய்வுந் தருவாரே
தோய்வுந் தருவர் தோய்வுந் தருவர் தோய்வுந் தருவாரே
மாய்வு மகலப் பாயுங் கருணை வளவுட் பதியாரே. (௯)

குழைவுந் தருவர் குழைவுந் தருவர் குழைவுந் தருவாரே
தழைவுந் தருவர் தழைவுந் தருவர் தழைவுந் தருவாரே
விழைவுந் தருவர் விழைவுந் தருவர் விழைவுந் தருவாரே
வழுவு மொழிய விழவும் பெருகும் வளவுட் பதியாரே. (௰)

திருச்சிற்றம்பலம்.

## 21. அருட் டிருவுளத்தடைத்தல்.

படிசார்ந்த வாழ்வுசுடு பாண்டமென நீத்துப்
பொடிசார்ந்த மேனியராய்ப் புந்திகுழைந் துன்ற
னடிசார்ந்த வடியவர்க்கு மல்லறரு வதுவோ
கடியமன மிளகல்செயுங் கண்ணொளியி னானே. (க)

தாயுநீ தந்தையுநீ தாரணிநீ யென்னும்
வாயுநீ மனமுநீ வாழ்வுநீ யென்றன்
றேயுநெஞ் சுடையவர்க்கு முறுகண்டரு வதுபோற்
பாயுமனம் பாறல்செயும் பாழ்வெளியி னானே. (உ)

தொடர்ந்தவர்க்கு முனைத்தினமுஞ் சொல்லியுளங் குளிர்ந்து
மடிந்தவர்க்கும் வஞ்சனைபோய் மகிழ்ந்துனடி பேணி
யடைந்தவர்க்கும் பணிபவர்க்கு மச்சம்வரு வதுவோ
விடைந்தவருக் கருள்சொரியு மின்பவெளி யானே. (ங)

பவப்புலிக்குப் பயந்துனது பணிப்பொருப்பி னேறித்
தவப்பயனால் வருஞானஞ் சார்ந்தவுளத் தினரா
யிகப்பயனை யிகந்தவர்க்கு மிடும்பைதரு வதுவோ
நவப்படிவங் கொண்டொளிரு நங்கையொர்பங் கினனே. (ச)

தனக்கெனவுஞ் செயலற்றுச் சந்ததமுஞ் சிந்தை
நினக்குதவி யலக்கணற நீர்விழியா லூற்றி
யுனக்கடிமைப் பட்டவர்க்கு முறுகண்டரு வதுவோ
நினைக்கவரி தாயொளிரு நெற்றிவிழி யானே. (ரு)

வெம்பியுள மெய்விதிர்த்து விண்ணிழிந்த மழைபோற்
கம்பிதமுங் கொண்டுபொழி கண்ணுடைய ராகி
நம்பியுனை யிருப்பவர்க்கு நலிவுதரு வதுவோ
வும்பருக்கு முன்னரிய வுள்ளவிழி யானே. (சு)

ஊருந்துணை யன்றன்றி யுறவுந்துணை யன்று
பாருந்துணை யன்றுபுலப் பாழுந்துணை யன்றென்
றூருந்துணை யன்றதன்றென் றடைதுயரத் தாலோ
பேரும்பிறி திலதன்றிப் பேச்சுரையில் லானே. (எ)

துன்பதனை யொறுக்குமரு டோயும்படி தோயு
மன்பினருக் கெளியரென லாவதுவே யல்லால்
வன்பினருக் கெளியரென வைக்கத்தரு வதுவோ
வன்பினருக் கருள்சொரியு மருட்டிருக்க ணனே. (அ)

திருச்சிற்றம்பலம்.

## 22. ஆண்டவனோ டடியார்க் கிரங்கி யழுங்கல்.

மாமனை யும்வகுத்தீர் மலரோன்றனை யும்வகுத்தீர்
பாமர னென்னைவகுத் தருட்பார்வை வழங்கியநீர்
வேமன முங்கெடுத்திட் டருள்வெள்ளத் துட்டள்ளலல்லாற்
காமன்கைக் கேன்கொடுத்தீ ரடியாருள் கலங்கிடவே. (க)

இகந்தனை யும்மிகந்தீர் கதிதந்தெனை யும்மிகந்தீர்
விகந்தரு மாசைவிட வருட்பார்வை விள்க்கியநீ
ரகந்தனைக் காத்துதவக் கருணைக்கடல் வைப்பதெலா
மதன்றனக் கேனளித்தீ ரடியாருண் மயங்கிடவே. (உ)

ஆன்றுவ சம்முடையீ ரருளார வரிதுடையீர்
நான்றுவ சம்முடையேற் கருட்பார்வை நயந்திடுநீர்
தோன்றுவ துங்கெடுத்தே யருட்டொல்லுல கீவதலா
லேன்குரோ தற்களித்தீ ரடியாருள் ளெரிந்திடவே. (ங)

புத்தி கடந்திடுவீ ரருட்பூவிற் பழுத்திடுவீர்
பத்தி யருளியரு ளருட்பார்வை வழங்கியநீர்
சித்த சலனமிற வருட்டேயத் திருத்தலலா
னத்தி வறற்களித்தீ ரடியாருண் ணவிந்திடவே. (ச)

நீதியை யும்முடையீ ரென்றுநின்மல மும்முடையீர்
வாதனை தீர்க்குமரு ளருட்பார்வை வழங்கியநீர்
கோதற வேயருளிற் கூட்டலல் லாமற்புற
மோகனுக் கேனளித்தீ ரடியாருண் முயங்கிடவே. (ரு)

இம்மை மறுமையிகந் திகமெங்கு முறைந்திடுவீர்
செம்மை சிறக்குமரு ளருட்பார்வை திருத்தியநீர்
தம்மை மறந்திடமுந் தந்தரு டள்ளலல்லா
*வும்மெரிப் பற்களித்தீ ரடியாருள் ளுணங்கிடவே. (சு)

தூர மிகவுடையீ ரருட்சொல்லி னினிதுடையீர்
கூரு மருட்பரவை யகங்குலவி யுதவியநீர்
தீர முதவியருட் டேயத்துட் டள்ளலல்லா
லோர்சங்கற் பற்களித்தீ ரடியாருள் ளுயங்கிடவே. (எ)

தஞ்ச மிகவுடையீ ரருட்டண்ணந் துறையுடையீர்
துஞ்ச லுடற்றுமரு ளருட்பார்வை துலக்கியநீ
ரெஞ்ச லிலாதவரு ளிருத்த லல்லாமலிக
வஞ்சனுக் கேனளித்தீ ரடியாருண் மலங்கிடவே. (அ)

*உம்மு—இங்கு அசூயைக்குறிப்பு. உன்னெரிப்...என்பதும் பாடம்.

வாழ்வு மிகவுடையீர் வந்தொளிர் நாடுடையீர்
தாழ்வு மிகவுடையேற் கருட்பார்வை கடந்திடுநீ
ரூழை யுடற்றியரு ளோட்டல லானுனென்
னேனழுயற் கேனளித்தீ ரடியாருள் ளிகலிடவே. (சு)

செய்ய பதமுடையீ ருளஞ்செத்த விடமுடையீ
ரைய மிலாதவருட் பார்வை யளித்திடுநீர்
வைய மிறுமருளின் மாட்ட லலாமலுளப்
பொய்யனுக் கேனளித்தீ ரடியாருள் புழுங்கிடவே. (எ)

திருச்சிற்றம்பலம்.

## 23. பெற்றவ ரிருக்கும் பெற்றி.

நானு விதமாம் யோனி தானுய், மருட்கனி யுண்ட மயக்கந் தீர, வருட்கனி யுண்ணு மரையரைச் சார்ந்திட், டுரிமை விடய மிரிய வொரு மைக், கடாஅக் களிற்றின் முற்றி விடாஅ, வூன மோட ஞான வாளா, லுள்ளமு முரையும் பொள்ளென வுடற்று, மோய்வி னொளிரு முள் ளொளி யாயைக், கண்டவ ருள்ளங் கொண்டிட விருந்தங், கோய வொ ளிரு மின்ப மாய, வன்பா மருள்வழி யின்பாய்க் கேண்மதி, குணக் குன் றேறிக் குலாவுவர் குலவிப், பிணக்கின் றம்மலே மீது மமருவர், நம்மை யிடறுங் குன்று மிருப்பர், துடரா வாசைக் குன்று மமருவர், பேச வரிய குன்று மமருவர், பெரிய கருணைக் கடலின் வீழ்வ, ரருண வின்பக் கடலி னிருப்பர், வன்பு தீரு மாழி செறிவ, ராரு மறியா மெய்க்கட லார்வர், பிரியாச் சகசவாழ் வுரியா ராகி, சுகாதீத மேடை தோன்றி யிகவார், கறங்கு தீர வுறங்கு மேடை, நிற்பினு நிற்ப ரிருப்பினு மிருப்ப, ரோய்வினு மோய்வர் சாய்வினுஞ் சாய்வர், சாந்தக் குன்றஞ் சாரினுஞ் சார்வர், நீந்தக் கூடா நீச்சினு நீந்துவர், கலக்க மின்றி யடைவர் கலக்க, மச்ச மின்றி யடைவ ரச்சந், துன்ப மின்றி யடைவர் துன்ப, முறக்க மின்றி யுறங்குவ ருறக்கம், வெகுளி யின்றிப் பொருந்துவர் வெகுளி, கவலே யின்றிப் பொருந்துவர் கவலே, யவல மின்றி யடைவ ரவலம், பசிப்ப தின்றிப் பொருந்துவர் பசியை, மன்பதை புரக்கினும் புரப்ப ரின்பந், துதையா திருந்துந் துதைவ ரதன்றி, யேழை யாகி யிருக்கினு மிருப்பர், தாழ்வி லாமற் றழைக்கினுந் தழைப்ப, ரெங்கு முலாவி யியையினு மியைவர், தங்குவ ரோருழி தங்கிய தன்றி, யுடல நீட்டித் துறையினு முறைவர், சடலம் விரையச் சாயினுஞ் சாய்வ, ரில்லந் தன்னி னிருக்கினு மிருப்ப, ரல்ல றன்னி னமரினு மமர்வ, ரோவுக் களிற்றி னொளிரினு மொளிர்வர்,

பாவச் சாதி பயப்பினும் பயப்ப, ரருளி ஞேடுவ ரருளிற் செல்வ, ரருளிற் றவழ்வ ரருளி னிருப்ப, ரருளின் வீழ்வ ரருளிற் சாவ, ரின்ப மோடுவ ரின்பம் படருவ, ரின்பிற் றவழ்வ ரின்பத் திருப்ப, ரின்பின் வீழ்வ ரின்பிற் சாவர், தானு நானுந் தானு மழியும், வானி னிருப்பர் கான மகற்றும், ஞான வாழி தான்வீழ்ந் திறுவ, ருருக்க முடைக்கும் பருப்பத முறைவர், கண்ணீ ரகற்றுங் கண்ணீ ரொளிர்வர், சாதனஞ் சமயம் போத மறப்பர், காத லின்றிக் காத லமைவர், செய்தி யின்றி செய்யினுஞ் செய்வர், விடைய வேலை யுடையினு முடைவர், காம வேலை கடப்பினுங் கடப்பர், நோயின் வீழ்ந்து நுங்கினு நுங்குவர், பேயன் பித்தனேயினு மேய்வர், விவகா ரத்தினும் வீழினும் வீழ்வர், பரமார்த் தத்திற் பதியினும் பதிவ, ரென்னை யுன்னை யிறுமிட மேய்வர், தன்னை யன்னை தானென வுயிருக், கின்ன றீரக் கவியினு மியைவ, ரைந்தொழி றன்னி லமரினு மமர்வர், தந்தொழில் வீயச் சாயினுஞ் சாய்வ, ரிறக்கினு மிறப்பர் பிறக்கினும் பிறப்பர், நிரயம் வீழ்ந்து நிற்பினு நிற்பர், தரையிற் போந்து தரிக்கினுந் தரிப்பர், நரைதிரை யற்று நயக்கினு நயப்ப, ருரைபுணர் வற்றிட் டோயினு மோய்வ, ராடினு மாடுவர் பாடினும் பாடுவர், நாடினு நாடுவர் நகைப்பினு நகைப்பர், கள்ளச் செய்திகைக் கொள்ளினுங் கொள்வர், வெள்ளச் செய்தி விரவினும் விரவுவ, ருடலந் தன்னை யொறுப்பினு மொறுப்பர், சடலந் தன்னைத் தாங்கினும் தாங்குவ, ரருளி னொளித்திட் டருளிரி யின்பப், பொருளி னொளித்துப் போக்குவ ரொன்றைத், துவக்கினுந் துவக்குவர் விடுக்கினும் விடுப்ப, ருவப்பினு முவப்பர் தவிப்பினுந் தவிப்ப, ரிரப்புண் டிருப்பினு மிருப்பர் சும்மா, வரக்கண் டிருப்பினு மிருப்பர் மன்னோ, தமிய னாகித் தனிக்கினுந் தனிப்ப, ருமையொரு பாக மொளிரினு மொளிர்வ, ரியம்பல் போக விருப்பினு மிருப்பர், சயம்ப தாகத் தழைப்பினுந் தழைப்ப, ருல்லா சத்தினி னுந்திச், செல்லாச் செல்வந் திளைத்திடு வாரே.

திருச்சிற்றம்பலம்.

## 24. பெற்றுரைச் சார்ந்த பேறு.

உருக்க லாமுள முள்ளத் தொடுமுரு
திருக்க லாங்குழை யாமற் குழைந்திரு
ளொருக்க லாமருட் டேனெடுத் துண்ணலாந்
திருக்க லாமிறு மன்பரைச் சேரவே. (க)

கஞ்ச னேலை கடிதிற் கிழிக்கலாம்
பஞ்ச பாணனைப் பார்வையிற் கொல்லலாம்
வஞ்சம் யாவையு மாற்றி மகிழலாந்
தஞ்ச மாமருட் டண்ணரைச் சாரவே. (உ)

வெருக்கொள் காய மிரண்டும் விடுக்கலா
முருக்க டன்னை யருட்கு ளொளிக்கலா
மருட்கு ளின்பக் கடலி னமிழ்ந்தலாம்
பருக்கு மன்பர் பதங்கள் பணியவே. (௩)

எவர்க்குந் தாட்சி யியம்பி யிருக்கலா
முவக்கும் வைய முவர்க்க வொளிரலாந்
துவக்குஞ் செய்திக ளொன்றுந் துடைக்கலாஞ்
சிவக்கு மன்பர் பதங்களைச் சேரவே. (௪)

இச்சை யாவு மிறுத்திட் டுறுக்கலா
மச்ச மியாவு மடிக்கத் தொடங்கலாம்
விச்சை யாவு முணர்த்தி மிளிரலா
மிச்சை போமடி யாரை யிறைஞ்சவே. (௫)

அமைதி யாமுப் பரிகையு மண்ணலாந்
தமைம றந்திடந் தன்னையுஞ் சாரலாங்
கமையெ னவ்வணி காணத் தரிக்கலாஞ்
சுமையி கந்தவர் தம்மைத் தொடரவே. (௬)

செய்ய பாகெனப் பரக்க டிருத்தலா
மையந் தீர வவல மறுக்கலாம்
பொய்யன் பின்றிப் புளகமும் போக்கலா
மெய்யன் பாகிய வேந்தரைச் சேரவே. (எ)

கட்டி ருள்வினை மாயையைக் கைத்தற
விட்ட ருட்குன்றின் வீற்று மிருக்கலா
மொட்ட தின்றி யொளியோ டொளிரலாஞ்
சிட்டர் பாதங்கள் சிந்தையிற் சேர்க்கவே. (அ)

நீடு நல்லருட் பார்வையி னிற்கலா
மீடு போமரு டன்னி னிருக்கலா
மோடல் போமருண் மேடை யுறங்கலாம்
வாடி டாவடி யாரை வணங்கவே. (௯)

எள்ளல் கொள்ள விரண்டு மிரிக்கலா
முள்ள தேவரு மென்று மொழிரலாந்
தெள்ளு சிந்தை திகழ மகிழலாம்
வள்ள லன்பரை நித்தம் வணங்கவே. (கo)

ஒட்ட மின்றிய வூரு முறையலாந்
தேட்ட மின்றிய தேயமுஞ் சேரலா
மாட்ட மென்றிடா வாழ்வையு மன்னலாங்
கோட்ட மின்றிய வன்பரைக் கூடவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

## 25. தாழ்ந்தார் பெறுந்தண்.

நீங்குவர் மாயை நிலைப்ப ருளமரு ணேடிநெஞ்ச
மேங்குவ ருள்ள முடைந்துகண் ணீர்பொழிந் தின்பமுறத்
தூங்குவர் தன்னைத் துரப்ப ரதீதச் சுகமருளால்
வாங்குவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (க)

அகழுவர் காம நினைவை யகழ்ந்தவர் தம்மையன்பாய்ப்
புகழுவ ரந்தண னத்தன் புரந்தரன் போகமற்று
மிகழுவர் பேரன் பெழுந்திடப் பேரின் பெழுதல்கண்டு
மகிழுவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (உ)

ஈங்குவர் வேலைப் புடைசூ ழுலகிகந் தேறிமிக
வோங்குவர் நீப்பெனுந் தூங்கலின் ஞானவொள் வாளருட்கை
தாங்குவர் பாசக் குறும்பைத் தகர்த்தரு ளுடுதனை
வாங்குவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (ங)

ஈருவ ராசைத் தளையை மகிழ்ந்தங் கிருந்துருகி
யோருவர் மூன்று பொருளையுஞ் சிந்தித் தொளிர்தெளிவைச்
சாருவ ரன்பின் றடக்கையி னுலின்பந் தன்னையுண்ண
வாருவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (ச)

இயங்குவ ரன்பர்த மேவலி னுள்ளத் திருளகல
முயங்குவர் நூலின் முறைபிற ழாரருண் மொத்திகந்தாற்
றியங்குவர் வானத் திரவியை யொப்பச் செகங்களெங்கும்
வயங்குவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (ரு)

வீடுவர் பொய்யை விளைப்ப ரறம்விழ லாவதெல்லாம்
போடுவர் சுட்டிடுஞ் சட்டி பொருவப் புதுமைவிஞ்சி
யாடுவர் பாட றெடுப்ப ரருளை யணைவதற்கே
வாடுவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (சு)

இருந்துவர் வாய்மெல் லியரை யிகந்தஞ் செழுத்ததனுற்
றிருந்துவ ருள்ளந் தெளிவ ருளத்தெமைச் சேருமென்றே
பொருந்துவர் தீர்ந்த துறவைப் பவமென்று போமெனவே
வருந்துவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (எ)

சொல்லாமற் சொல்லுவர் தோயாமற் றோய்வர் துலங்கருளி
னில்லாம னிற்பர் நிலையாம லுள்ள நினைந்திடுவர்
கல்லாமற் கற்பர்கள் காணமற் காணுவர் காமம்வெல்ல
வல்லார்கள் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (அ)

பொருந்து மனமுமுன் னகு மறுவரைப் பொங்கியங்கே
யிருந்துல கெங்கணுந் தாண்டி யிழப்பி லிறங்கினன்கு
தருங்கரு ணாலயந் தங்கிச் சுகத்திற் றனித்துநிற்க
வருந்துவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (கூ)

ஈட்டுவர் நன்கை விடுவர்பொல் லாங்கிகம் பொய்யெனவே
காட்டுவர் தோன்ற மறைப்பர் பெருமை கருத்தொழிவை
நாட்டுவர் தம்மைத் தளருவர் ஞானம் வளரநசை
வாட்டுவர் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (௧0)

தேடா ரருளன்றிச் செல்லா ரொருவர்பின் றீதுநல
நாடார் பதஞ்சித்தி நல்குவம் பொய்க ணவிலுமென்றுற்
கோடா ருளமண்ட மெல்லாந் தளர்ந்து குலைந்திடினும்
வாடார்மெய்ஞ் ஞான குருவைத் தினமும் வணங்கினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

உபதேசக்கிரமம் அதிகாரம் உ௫-க்குத் திருப்பாட்டு உ௫௪.

---

ஆக அறிவானந்த சமுத்திரம் அதிகாரம் க0௫-க்குத் திருப்பாட்டு ககரு௪.

---

## அறிவானந்த சமுத்திரம்
## முற்றிற்று.

# வாழ்த்து.

சச்சிதா னந்தனழ கியதிருச்சிற் றம்பலவன் சகசா னந்த
மிச்சிதா னந்தவென்றே யெமக்கருண்மா காளத்தி யைந்து ளானு
மெய்ச்சிதா னந்தமெலாம் வரச்சிதா னந்தமுமுள் வைக்க மீளா
வுச்சிதா னந்தவறி வானந்த சமுத்திரத்தை யுரைத்தான் வாழி.

திருச்சிற்றம்பலம்.

சேங்க ரும்பிடை மஞ்சளு மிஞ்சியுஞ்
சேருஞ் சோர்க்க புரத்தர ணிஞ்சியுஞ்
நங்க ளுமட மாற்றுமம் மாமடம்
ஞான சைவசித் தாந்தத்து மாமடம்
அங்க ளுரு மழகிய தேசினர்
அற்பு தத்தசிற் றம்பல தேசிகர்
புங்க ராமவர் போற்பத மேத்துதும்
போங்கு மங்கள மேங்கணும் வாழ்த்தவே.

திருச்சிற்றம்பலம்.

அழகிய திருச்சிற் றம்பல தேசிகர்
மழவிடை யவரை மகிழ்ந்துரை சேந்தமிழ்
நிலமிசை யேன்றும் நலமிசை வதுவே.

திருச்சிற்றம்பலம்.

## சுவர்க்கபுர குருமரபு துதி.

பாரார் பலர்பரவிப் பாடுஞ் சுவர்க்கபுரச்
சீரார் குருமரபைச் செப்புங்கா—னேரா
மழகியசிற் றம்பலவ ரன்னுரைச் சார்ந்து
பழகும் மருத்துலிங்கப் பண்பர்—வழியவரின்
கந்தார் தவப்பிர காசர் கழுநீர்ப்பூக்
கொந்தார் சரவணமெய்க் கொற்றவனுர்—வந்தார்
திருவெழுத் தைந்திற் றிகழ்தேசர் பின்னர்
மருவுஞ் சிவப்பிர காசர்—மருமஞ்
சருவாச் சிவானந்தர் சங்கிலியார் பாச
மருவா விவர்சித்தி வாய்ந்தா—ரொருவாத்
திருமேனி காமத் திருவுருவ ரின்னுர்
தருமே னிலையின்பஞ் சாந்த—மொருபோகம்
பாக்கியங்க ளோங்குமாற் பத்தித் தலத்திவரை
யாக்குவதே யார்ந்த வருள்.

திருச்சிற்றம்பலம்.

## நூற் பெருமை.

அறிவா னந்தச் செறிவார் பனுவலைத்
திருவருள் தெருட்டக் குருபர ஞேக்கச்
சித்தாந் தத்துப் பற்று யவரும்
ஒருவா துணர்த்துந் திருவா சகத்தை
ஆகம நெறிச்சிவ போகம தாளுஞ்
சுத்த சைவரா மெத்தகை யோரும்
பாவா ரமுதாந் தேவா ரத்தை
வேத நெறியிற் சாதமுற் றவராய்ச்
சைவத் துறையி னுய்வகை யோரும்
காதலி ஞேதி நாதரா குவரே.

திருச்சிற்றம்பலம்.

## சிவநேசச் செல்வர்களுக்கு விஞ்ஞாபனம்.

மங்கல வாழ்த்தாகச் சைவமாண்பை விளக்கவந்த இந்நூலைச் சுத்தாங்கமாகவும், கீதாங்கமாகவும், சிலதுறைகளை நிருத்தாங்கமாகவும் பண்ணேடு ஓதல் வேண்டும். பண்முறைகளுக்கு ஏற்ப ஆங்காங்குச்

சீர்களையும், எழுத்துக்களையும் பிரித்து இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. எங்கேனும் எழுத்துச் சோரம் புலப்படுமாயின் அதனைப் பொருந்துமாறு அமைத்துக்கொள்க. திருவாசகம், தேவாரங்களிற்போல இந்நூலிலும் பல பிரதிபேதங்கள் காணப்படினும் அவற்றுள் கரலிகிதங்களால் உண்டாயினவற்றைக் களைந்து சுத்தபாடம் இங்குக் கொள்ளப்பட்டது. பஞ்சமப் பண்ணால் அமைந்த 1, 10, 11, 22-வது பதிகங்களும், 1, 56-வது பதிகத்தில் 4-வது செய்யுளும் சில பிரதிகளில் பாடபேதத்தோடு காணப்படினும் சந்தப் பொருத்தமுள்ள பாடமே இப்புத்தகத்தில் அமைக்கப்பெற்றது. தொல்காப்பியச் சூத்திரத்துட் கண்ட அசா (அசவு) முதலிய செம்மொழிகளும், திராவிட வேதத்திலும், சைவ சாத்திரங்களிலும் கண்ட ஆரிய மொழிகளும், பாகதச் சொற்களும், துடர், நானை, (நான் என்பதனை) போராடுது, ஐஞ்சு, இத்தை, ஆனத்தால், அடாமல், அடாது, (அடாதது) இந்து அன, (இந்து என) முதலிய பதங்களும், அடித்து வக்காரம், சம்பந்தனாரை, நணுகும்மே, மகரவுக ரம்மகரத் தாம், (மகரம் இசைப் பொருட்டாய் ஒற்றில்வழி யொற்றாய் வந்தது) இவை போன்ற புணர்ச்சிகளும், தொடை விகற்பங்களும், இனவெதுகை, ஆசு எதுகைகளும்; இயைபுருவகம் முதலிய அணிகளும் வருவனவற்றிற்கு இலக்கணவமைதியை விரிந்த இலக்கணங்களிலும், சிவஞானமுனிவர் உரைகளிலும் கண்டுகொள்க. "மின் பயில் அவ்வும்" முதலிய பிரயோகங்களால் சுத்தமாயையின் காரியமும், எண்முதலிய குறியீடுகளால் அசுத்த மாயையின் மாயேயமும், அணுபக்ஷ போகங்களின் நுகர்வும், சம்புபக்ஷங்களின் உயர்வும், அகப்பொருள் புறப்பொருள்களால் உணர்த்தப்படும் சுவானுபூதி நிலையும் மிக்க மேன்மையோடு விளக்கப்பட்டிருத்தலை ஆகம மலைவின்றி இந் நூலில் உய்த்துணர்ந்து கொள்க. ஒளி ஒழி அழி அளி இன்னோரன்ன சொற்கள் சுவடிகள் தோறும் மாறி நிற்பினும், அவற்றிற்குப் பிரேரகம் திரோபவம் உபசார்தம் முதலிய நிலைகளுக்கு ஏற்பப் பொருள்கோடல் அமைவுடைத்து. ஒளியுள் ஒளியுள் ஒளியுள் ஒளி எனவரும் அடுக்குக்களுக்குப் போற்றிப் பஃறொடையிற் கண்டவாறே பொருள் கொள்ளுக. கலியினுள் நேர்முனவரும் மாச்சீர்க்கு முன்னசையை அளபெடுத்துப் பாடுக.

வாழ்க நாதன் றாள் வாழ்க.

ப. அ. மு.

PRINTED AT THE "KUMARAN PRESS," SHIVALI.